விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 16 வெள்ளிக்கிழமை (28.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 71

## போர்க்குற்றம் தொடர்பான இலங்கையின் உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை

### இலங்கையின் யோசனையை நிராகரித்தார் ஐ.நா மனித உரிமை ஆணையாளர்



**(ஜெனிவா)** போர்க்குற்றம் தொடர்பான இலங்கையின் உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 43ஆவது அமர்வில் நேற்று இலங்கை குறித்த அறிக்கையை முன்வைத்து பேசிய மிச்செல் பச்லெட் இலங்கை அரசாங்கத்தின் ▶23

காணாமல் ஆக்கப்பட்ட

### பேரப்பிள்ளையை தேடி போராடிவந்த தாயார் மரணம்



▶23

அதிக கடன் சுமை

### குடும்பத் தலைவி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

அதிக கடன் சுமை காரணமாக குடும்பத் தலைவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் கொக்குவில் ▶23

## இலங்கை அரசு மீதான போர்க்குற்றங்களுக்கு ஆதாரம் இல்லை

### ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் குற்றச்சாட்டை மறுத்தார் தினேஷ் குணவர்த்தன





*(கொழும்பு)* இலங்கை அரசு மீதான போர்க் குற்றங்களை நிரூபிக்க எவ்விதமான ஆதாரமும் இல்லை என ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் குற்றச்சாட்டை மறுத்தார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

*(23ஆம் பக்கம் பார்க்க)*

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன

### ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருடன் இன்று சந்திப்பு

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் திருமதி மிச்செல் பச்லெட் இன்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுடன் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை ஜெனிவா தீர்மானத் ▶23

### ஜெனிவா தீர்மானத்திலிருந்து இலங்கை வெளியேற்றம்

கனடா, பிரித்தானியா அதிருப்தி

(ஜெனிவா)

2015ஆம் ஆண்டு ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் மற்றும் அதன் தொடர்ச்சியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து விலகிக்கொள்வதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளமை குறித்து பிரித்தானியா, கனடா ஆகிய நாடுகள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

▶23

### மனித உரிமைகளை நிலைநாட்ட தொடர்ச்சியாக ஆதரவு வழங்குவோம்



இலங்கை தொடர்பில் கனடா பாராளுமன்றில் பிரதமர் ட்ரூடோ கருத்து

(ரொறன்ரோ)

இலங்கையில் மனித உரிமைகளை நிலைநாட்ட தொடர்ச்சியாக ஆதரவு ▶23

### விபத்துக்குள்ளான முதியவர் ஒருவர்

சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்துக்குள்ளான முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி துவிச் ▶23

### புத்தூரில் உடலைத் தகனம் செய்ய மக்கள் ஆர்ப்பாட்டம்

நீதிமன்ற உத்தரவையடுத்து வேறு இடத்தில் உடல் தகனம் செய்யப்பட்டது



(புத்தூர்)

புத்தூர் மேற்கு சிறுப்பிட்டி கலைமதி கிந்துபிட்டி மாயனத்தில் உடலை தகனம் செய்ய வந்தவர்களை வல்லை, மண்டான் மயானத்தில் தகனம் செய்யுமாறு மல்லாகம் நீதிமன்று நேற்று கட்டளை பிறப்பித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சிறுப்பிட்டியைச் சேர்ந்த ஒருவர் இயற்கை எய்திய நிலையில் அவரின் பூதவுடலை நேற்று கிந்துபிட்டி ▶23

## இலங்கையின் தீர்மானத்துக்கு வலுவான பதில் நடவடிக்கை அவசியம்

சர்வதேச மன்னிப்புச் சபை

(லண்டன்)

ஐ.நா மனித உரிமை பேரவையின் பொறுப்புக்கூறும் தீர்மானத்திலிருந்து விலகுவதாக இலங்கை அறிவித்துள்ள நிலையில், இலங்கையின் இந்த ஒருதலைப்பட்ச தீர்மானத்திற்கு மனித உரிமை பேரவையிடமிருந்து வலுவான பதில் நடவடிக்கை அவசியம்.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபையின் தென்னாசியாவிற்கான ஆராய்ச்சியாளர் தயாகி ருவான் பத்திரன தெரிவித்துள்ளார்.

இலங்கையை பொறுத்த வரையில் தோல்வி ▶23

# 101 ஆவது விழா ஆரம்பம்

அரியாலை மக்களால் பாரம்பரியமாக கொண்டாடப்பட்டு வரும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் 101 ஆவது விழா ஆரம்பமாகிறது.

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட விழாவின் 101 ஆவது விழா முன்னோடி நிகழ்வுகளில் நாளை 29.02.2020 சனி பி.ப 4 மணி பெண் கெந்தியடி நடைபெறும். நாளை மறுதினம் 01.03.2020 ஞாயிறு காலை 8.30க்கு ஆண்களுக்கான கெந்தியடியும் பி.ப 3மணிக்கு பெணகளுக்கான கிளித்தட்டும் நடைபெறும்.

# சென்ஜோன் அம்புலன்ஸின் 40 ஆவது ஆண்டு நிகழ்வு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் சென் ஜோன் அம்புலன்சின் 40 ஆவது ஆண்டு நிகழ்வு இன்று கல்லூரியின் றொமைன்குக் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கிறது (ம)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு வை.விஜிதரன்

(SLPS III)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி தற்போது மன்னார் கணேசபுரம் ஆரம்ப பாடசாலைக்கு அதிபராகக் கடமையேற்றுள்ள வை.விஜிதரன் அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளை பெற்று நீடுழி வாழ பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரிய நண்பர்கள்

(2410)

## அகவை 60 இன் நிறைவு வாழ்த்தும் பணி ஓய்வு வாழ்த்தும்

### திரு. சுப்பிரமணியம் சத்தியசீலன்



(கோட்டக்கல்விப் பணிப்பாளர் ,மாந்தை கிழக்கு, துணுக்காய் கல்வி வலயம்)

எமது துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மாந்தை கிழக்கு கல்விக்கோட்டத்தில் 1988 ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப்பணிப்பாளராக 32 வருடங்கள் கடமையாற்றி இன்று (28.02.2020) வெள்ளிக்கிழமை தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் எங்களின் அன்பு ஆசான் திரு. சுப்பிரமணியம் சத்தியசீலன் அவர்களுக்கு எமது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் பணி ஓய்வு நிலை வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இவா் தனது ஓய்வுக் காலத்தில் மகிழ்ச்சியோடும் ஆரோக்கியத்துடனும் நீண்ட காலம் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள்,
மாந்தை கிழக்கு கல்விக்கோட்டம்
துணுக்காய் கல்வி வலயம்

(C-9354)

## 31ம் நாள் கண்ணீர் அஞ்சலி



திருமதி தங்கம்மா இரத்தினம்

தோற்றம்: 17.02.1936 மறைவு: 29.01.2020

அன்போடு அரவணைத்து
ஆசையாய் அறிவுரைகள் கூறி- எம்மை
எல்லாம் வாழ வைத்த தாயே
என்றும் நீங்காது உம் நினைவுகள்

சிதம்பர நிலையம்,
துன்னாலை மத்தி, கரவெட்டி (c-9357) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### வேலன் கொத்தன்



தோற்றம் 1934.07.01 மறைவு 2020.02.27

காரைநகர் மொந்திபுலத்தினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கொத்தன் நேற்று (27.02.2020) தனது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலன் - நாகி தம்பதியரின் மகனும் பூரணத்தின் அன்புக் கணவரும் அமரர்களான சுப்பர், அருச்சுணன், நாகமணி, தெய்வானை மற்றும் வள்ளியம்மை, இலட்சுமி ஆகியோரின் சகோதரரும் மகேஸ்வரி, சோமஸ்கந்தசாமி (பரிசாரகர் - யா/போதனா வைத்திய சாலை), சிவபாலன் ஆகியோரின் தந்தையும் தேவராசா, வதனா ஆகியோரின் மாமனாரும், செந்தூரன் சனா (ஜேர்மனி), பிரதீபன் சர்மிலா, மிதுலா (ATI) டனேக்கா (மருத்துவபீடம் - யாழ்ப்பாணம்), தேனுஜன் (யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேரனும் வைஸ்ணவி, பவித்ரா, ஆதிரலியஸ், சான்அபினாஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2020) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வலந்தலை சந்தி,
காரைநகர். (2406)

தகவல்:-குடும்பத்தினர்
சோமாஸ் 0774206591

# 2021 ஆம் ஆண்டு இறுதிவரை

# ஐ.நா. தீர்மானத்திலிருந்து இலங்கை விலக முடியாது



## முன்னாள் பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு

## கோட்டா அரசின் நடவடிக்கை குறித்து கடும் அதிருப்தி

(கொழும்பு)

**போருக்குப் பின்னரான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஐ.நா. தீர்மானத்திலிருந்து விலகுவதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளமை குறித்து கடும் அதிருப்தியடைவதாகவும் 2021 ஆம் ஆண்டு வரை குறித்த தீர்மானத்திலிருந்து இலங்கை வெளியேற முடியாது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

மேலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்திருந்த நல்லாட்சி அரசாங்கமே குறித்த தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பாக த ஹிந்து நாளிதழுக்கு வழங்கிய விசேட செவ்வியில் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில், "2021 ஆம் ஆண்டு இறுதி வரை குறித்த தீர்மானத்தில் நாங்கள் இணை அனுசரணையாளர்களாக இருக்கின்றோம். அதில் இருந்து வெளியேற முடியாது.

2021 இற்குப் பின்னரே அடுத்த தீர்மானத்திற்கு நீங்கள் இணை அனுசரணை வழங்குவீர்களா? இல்லையா? என்பதை தீர்மானிக்க முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டு சுமார் 6 ஆண்டுகளுக்கு பின்னர் அதாவது 2015 ஆம் ஆண்டில், ஐ.நா.பேரவை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதில் பெரியளவிலான மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொண்டது.

இதற்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய இணை அனுசரணை, அந்த நேரத்தில் இலங்கையர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஒரு முக்கிய படியாகக் காணப்பட்டது.

இந்நிலையில் இலங்கை அரசாங்கம் குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தத் தாமதித்தமை குறித்து தமிழ் தலைவர்கள் கடும் கவலை வெளியிட்டிருந்த நிலையில் 2017 இல் அரசாங்கம் தனது கடமைகளை நிறைவேற்ற இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு கால நீடிப்புக் கோரியது.

அதன்படி கடந்த ஆண்டு, மனித உரிமை மீறல்கள் குறித்து கூறப்படும் நம்பகமான விசாரணையை முன்னெடுக்க இலங்கைக்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் காலஅவகாசம் வழங்க மனித உரிமைகள் பேரவை ஒப்புதல் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

# காலவோட்டத்திற்குத் தக்கவாறு தமிழர் பண்பாடு, கலாசாரத்தை பேணிப் பாதுகாக்க வேண்டும்

## யாழ்.அரச அதிபர் மகேசன் வலியுறுத்து

(குப்பிழான்)

எங்களுடைய பண்பாடு, கலாசாரம் என்பன சிதைவுறாமலிருக்கும் வரை எங்களுடைய இருப்பும் தொடரும். அவை சிதைவுற நேர்ந்தால் எங்களுடைய இருப்பிற்கும் ஆபத்து ஏற்படும். எனவே, இன்றைய காலவோட்டத்திற்குத் தக்கவாறு எவ்வாறு எங்கள் பண்பாடு, கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்கலாம் என்பது தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் வலியுறுத்தினார்.



வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் அதிகார சபையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் கலாசாரம், பண்பாடு என்பவற்றை நாம் வெறுமனே பேச்சளவில், மாத்திரம் நிறுத்திக் கொள்ளாமல் நாம் தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும். இவை தொடர்பாக எமது எதிர்காலச் சந்ததியினர் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதுடன் எமது கலாசாரம், பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்ற செய்தியையும் எமது இளம் தலைமுறையினருக்கும் சமூகத்தினருக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். எங்களுடைய கல்வி முறை ஆரம்பத்தில் ஒழுக்கத்திற்குத் தான் முக்கியத்துவம் வழங்கியது.

நாங்கள் எங்கள் காலவோட்டத்திற்கேற்ப எமது சமூகத்தையும் வழிநடத்த வேண்டும். அந்தப் பணியை ஆறுமுகநாவலர் அன்றைய காலகட்டத்தில் மேற்கொண்டார். காலவோட்டத்தில் சில விடயங்களை நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு உள்வாங்கிக் கொள்ளவில்லையென்றால் காலம் எங்களைப் பின்னுக்குத் தள்ளி விடும். அதேவேளை சில விடயங்களை நாங்கள் மறக்காமல் பின்பற்ற வேண்டும். அப்போது தான் எங்களுடைய பண்பாடு, கலாசாரம் என்பன அழியாது பேணப்படும்.

நாங்கள் கடந்த கால் நூற்றாண்டு காலமாக சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துள்ளோம். தற்போது இரட்டிப்பு அல்லது மும்மடங்கு வேகத்தில் எங்களுடைய கலாசாரத்தைப் பாதிப்புக்குள்ளாக்கும் துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. இதற்குக் காரணம் நவீன தொழில்நுட்பங்கள் என நாம் குற்றம் சாட்டினாலும் ஒழுக்கத்தை முறையாகக் கடைப்பிடிக்காமையே.

தற்போது எங்கள் சமூகத்தில் நிலவும் பல்வேறு பட்ட சமூகப் பிறழ்வுகளுக்கும் ஒழுக்கமின்மையே பிரதான காரணமாகும். குடும்பம் தான் முதலில் ஒரு பிள்ளைக்கு ஒழுக்கத்தைப் போதிக்கின்றது. பின்னர் பாடசாலையிலும், பாரம்பரியச் சமூகத்திலும் ஒருவன் ஒழுக்கக் கல்வியைப் பெற்றுக் கொள்கின்றான். இதன் மூலம் ஒழுக்கமானதொரு சமூகக் கட்டமைப்புத் தானாகவே உள்வாங்கப்பட்டு உருவாக்கப்படும். ஆகவே, எமது சமூகத்திலுள்ள ஒவ்வொரு கட்டமைப்பும் சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு உறுதியாக ஒழுக்கத்தைக் கற்பிக்க வேண்டும். தற்போது அறநெறிப் பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஊடாக ஒழுக்கத்தை மாணவர்களுக்குப் புகட்டுகிறார்கள். ஆனால், அவற்றை உரிய வகையில் பின்பற்றுவது தான் குறைவாகவுள்ளது. நமக்காக நாம் வாழ்கின்றோமா? என்றால் இந்தக் கேள்வியிலேயே இதற்கான பதிலும் தங்கியிருக்கின்றது. நான் உட்பட அனைத்துப் பெற்றோர்களும் எங்கள் பிள்ளைகள் இன்னொருவர் போல் வரவேண்டுமெனக் கூறியே இலக்கை நிர்ணயிக்கின்றோம். தனித்துவ ஆளுமைப் பண்புகளுடன் எமது பிள்ளைகள் வளர வேண்டுமென்பதில் நாம் போதிய அக்கறை கொள்வதில்லை. இந்த நிலை மாற வேண்டும். அறிவென்பது வெறுமனே கற்றல் மட்டுமல்ல. அறிவின் உயர்நிலையாகக் காணப்படும் ஞானத்தை மாணவர்கள் தமது அனுபவத்தால் பெறுவதற்கு வழிவிட வேண்டும்.

எங்களுடைய அறிவை விருத்தி செய்வதற்குத் தேடலும் மிகவும் முக்கியமானது. தேடல் மூலம் நாம் வாசித்துப் பெற்றுக் கொள்ளும் அறிவு எங்கள் வாழ்வைச் செம்மையாக்கும்.

எங்கள் கல்வி முறை போட்டித் தன்மை மிக்கதாக காணப்படுகின்றது. எங்களுடைய சமூகத்தில் மிகவும் திறமைசாலிகள் பலரிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் தங்கள் துறைகளை இயல்புக்கேற்ப, விருப்பிற்கேற்ப தெரிவு செய்திருந்தால் சர்வதேச ரீதியாக கூட மிளிரக் கூடியவர்கள். எங்களுடைய தனிப்பட்ட விருப்பு, வெறுப்பிற்கேற்ப அவர்கள் மீது நாம் செலுத்தும் செல்வாக்கால் அவர்களது இயல்பான ஆற்றல், உறுதிப்பாடு என்பன இல்லாமல் போகிறது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-18)

# யாழ்ப்பாணம் மாநகர சபை - வீதிகளுக்கு பெயர் சூட்டுதல்

பின்வரும் வீதிகளுக்கு பெயர் சூட்டப்படவுள்ளமையால் இதற்கு பொது மக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம் மக்களின் கருத்துக்களை அபிப்பிராயங்களை எதிர்வரும் 2020.03.15 ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.வீதிகளின் இடஅமைவுகள் பற்றிய சந்தேகங்களை மாநகரசபையில் அறிந்து கொள்ளமுடியும்.

| இல | குறியீட்டு இலக்கம் | வீதியின் பெயர் | தொடக்கம் | முடிவு சராசரி | வீதியின் நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | வட்டாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 166 | பாசையூர் குடியிருப்பு வீதி | புனித அந்தோனியார் வீதி | முடிவு | 0.14 | 2 | 19 |
| 2 | 167 | சுவாமியார் ஒழுங்கை | சுவாமியார் வீதி | கடற்கரை வீதி | 0.4 | 3 | 18 |
| 3 | 168 | மத்திய கிழக்கு வீதி 1ம் குறுக்கு | வீடுகள் | முடிவு | 0.25 | 3 | 27 |
| 4 | 169 | மத்திய கிழக்கு வீதி 2 ம் குறுக்கு | வீடுகள் | முடிவு | 0.27 | 3 | 27 |
| 5 | 170 | மத்திய கிழக்கு வீதி 3ம் குறுக்கு | வீடுகள் | முடிவு | 0.27 | 3.3 | 27 |
| 6 | 171 | சிப்பித்தறை ஒழுங்கை | தண்ணீர்த்தாங்கி வீதி | முடிவு | 0.2 | 3 | 27 |
| 7 | 172 | தொழில்நுட்பக் கல்லூரி ஒழுங்கை | கடற்கரை வீதி | தொழில்நுட்பக் கல்லூரி வீதி | 0.13 | 3.4 | 22 |
| 8 | 173 | துண்டி மயான வீதி | கடற்கரை வீதி | முடிவு | 0.1 | 2.7 | 18 |
| 9 | 174 | மகேந்திரபுரம் ஒழுங்கை | கடற்கரை வீதி | முடிவு | 0.2 | 2.4 | 18 |
| 10 | 175 | எழிலூர் ஒழுங்கை | கடற்கரை வீதி | முடிவு | 0.2 | 3 | 18 |
| 11 | 273 | நல்லலக்சுமி வழி | கோவில் வீதி | முடிவு | 0.25 | 2.4 | 4 |
| 12 | 274 | மணியோசை ஒழுங்கை | கோவில் வீதி | முடிவு | 0.12 | 2.3 | 4 |
| 13 | 275 | இராஜேஸ்வரி அம்மன் ஒழுங்கை | கோவில் வீதி | முடிவு | 0.2 | 2.8 | 4 |
| 14 | 276 | கந்தன்கருனை ஒழுங்கை | கோவில் வீதி | முடிவு | 0.34 | 3 | 4 |
| 15 | 277 | பண்டாரக்குளம் 1 ம் ஒழுங்கை | பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை | முடிவு | 0.2 | 2.8 | 4 |
| 16 | 278 | சங்கிலியன் 1 ம் ஒழுங்கை | சங்கிலியன் வீதி | பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை | 0.15 | 3 | 4 |
| 17 | 279 | பிராமணக்கட்டு ஒழுங்கை | கோவில் வீதி | முடிவு | 0.21 | 3.7 | 4 |
| 18 | 280 | அச்சுக்கூட ஒழுங்கை | அச்சுக்கூட வீதி | முடிவு | 0.17 | 2.4 | 21 |
| 19 | 281 | மத்தியூஸ் ஒழுங்கை | மத்தியூஸ் வீதி | இராஜசிங்கம் வீதி | 0.22 | 2.6 | 21 |
| 20 | 282 | நெடுங்குளம் பிள்ளையார் கோவில் வீதி | நெடுங்குளம் வீதி | முடிவு | 0.78 | 3.2 | 18 |
| 21 | 283 | வசந்தபுரம் 1 ம் குறுக்கு | கடற்கரை வீதி | முடிவு | 0.23 | 2.5 | 18 |
| 22 | 284 | வசந்தபுரம் 2 ம் குறுக்கு | கடற்கரை வீதி | முடிவு | 0.15 | 2.4 | 18 |
| 23 | 285 | தேவரிக்குளம் வீதி | கோவில் வீதி | கன்னியாஸ்திரி மட வீதி | 0.32 | 2.4 | 24 |
| 24 | 286 | பண்டாரக்குளம் பிள்ளையார் ஒழுங்கை | சங்கிலியன் வீதி | முடிவு | 0.21 | 3 | 4 |
| 25 | 287 | மணிப்புரி வீதி | கொழும்புத்துறை வீதி | புகையிரத பாதை | 0.9 | 3.8 | 18 |
| 26 | 288 | மனோன்மணி அம்மன் வீதி | கோவில் வீதி | முடிவு | 0.2 | 2.5 | 4 |
| 27 | 333 | வெட்டுக்குளம் வீதி | புவனேஸ்வரி அமபாள் வீதி | முடிவு | 0.18 | 2.5 | 7 |
| 28 | 424 | ஏ.பி.சி ஒழுங்கை | பருத்தித்துறை வீதி | முடிவு | 0.43 | 6 | 5 |
| 29 | 425 | செட்டியார் தோட்டம் வீதி | ஏ.பி.சி ஒழுங்கை | செம்மணி வீதி | 0.8 | 3 | 5 |
| 30 | 426 | குருநாதர்சுவாமி ஒழுங்கை | பருத்தித்துறை வீதி | முடிவு | 0.12 | 4 | 15 |
| 31 | 427 | செல்லர் ஒழுங்கை | பருத்தித்துறை வீதி | திருநெல்வேலி புது வீதி | 0.1 | 2.4 | 4 |
| 32 | 428 | மகேஸ்வரி வித்தியாலய வீதி | இராமநாதன் வீதி | அம்பாள் வீதி | 0.16 | 3.6 | 6 |
| 33 | 511 | ஆத்திசுடி வீதி | சேர் பொன் இராமநாதன் வீதி | பலாலி வீதி 5 ம் ஒழுங்கை | 0.54 | 3 | 2 |
| 34 | 603 | தேவாலய ஒழுங்கை | பொன்னாலை வீதி | ஓட்டுமடம் வீதி | 0.35 | 2.4 | 9 |
| 35 | 648 | வைரவர் கோவில் ஒழுங்கை | சிவப்பிரகாசம் வீதி | முடிவு | 0.17 | 2.7 | 9 |
| 36 | 651 | உடையார் ஒழுங்கை | ஐயனார் கோவில் வீதி | முடிவு | 0.06 | 4 | 9 |
| 37 | 652 | ஐயனார் ஒழுங்கை | ஐயனார் கோவில் வீதி | முடிவு | 0.1 | 2.8 | 9 |
| 38 | 653 | மதவடி ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | சிவப்பிரகாநம் வீதி | 0.17 | 2.8 | 9,1 |
| 39 | 654 | நாச்சிமார் ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | தலையாளி ஒழுங்கை | 0.23 | 2.8 | 2 |
| 40 | 655 | தலையாளி வீதி | சேர் பொன் இராமநாதன் வீதி | சபாபதி ஒழுங்கை | 0.37 | 3 | 2 |
| 41 | 656 | தலையாளி ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | தலையாளி வீதி | 0.3 | 3 | 2 |
| 42 | 657 | இராமநாதன் ஒழுங்கை | சேர் பொன் இராமநாதன் வீதி | தலையாளி வீதி | 0.27 | 3.2 | 2 |
| 43 | 658 | கலட்டி பிள்ளையார் ஒழுங்கை | சீனியர் ஒழுங்கை | சேர் பொன் இராமநாதன் வீதி | 0.21 | 2.8 | 2 |
| 44 | 659 | கலட்டி அம்மன் ஒழுங்கை | கலட்டி அம்மன் வீதி | கலட்டி பிள்ளையார் ஒழுங்கை | 0.2 | 3 | 2 |
| 45 | 660 | வயல் கரை ஒழுங்கை | ஐயனார் கோவில் வீதி | முருகமூர்த்தி வீதி | 0,66 | 2.8 | 9,1 |
| 46 | 661 | இந்து ஆரம்ப பாடசாலை ஒழுங்கை | அரசடி வீதி | சிவகுருநாதன் வீதி | 0.18 | 3 | 9 |
| 47 | 662 | இலங்கை வேந்தன் ஒழுங்கை | கல்லூரி வீதி | சிவகுருநாதன் வீதி | 0.3 | 2.4 | 9 |
| 48 | 663 | கன்னாதிட்டி 2 ம் ஒழுங்கை | கன்னாதிட்டி வீதி | முடிவு | 0.14 | 2.8 | 14 |
| 49 | 703 | கண்ணகை அம்மன் வீதி | அராலி வீதி | பொன்னாலை வீதி | 1 | 2.7 | 10 |
| 50 | 716 | அராலி வீதி 1 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.18 | 2.8 | 13 |
| 51 | 718 | அராலி வீதி 3 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.15 | 2.6 | 13 |
| 52 | 719 | அராலி வீதி 4 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.15 | 2.4 | 13 |
| 53 | 720 | அராலி வீதி 5 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.15 | 2.5 | 13 |
| 54 | 721 | அராலி வீதி 6 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.15 | 2.8 | 13 |
| 55 | 722 | அராலி வீதி 7 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.15 | 2.6 | 13 |
| 56 | 723 | அராலி வீதி 8 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.17 | 2.3 | 13 |
| 57 | 724 | அராலி வீதி 9 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.19 | 2.2 | 11,13 |
| 58 | 725 | அராலி வீதி 10 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.05 | 3 | 11 |
| 59 | 726 | அராலி வீதி 11 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.09 | 2.1 | 11 |
| 60 | 727 | அராலி வீதி 12 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.1 | 2.1 | 11 |
| 61 | 728 | அராலி வீதி 13 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.1 | 2.1 | 11 |
| 62 | 729 | அராலி வீதி 14 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.04 | 2 | 11 |
| 63 | 730 | அராலி வீதி 15 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.08 | 3.2 | 11 |
| 64 | 731 | அராலி வீதி 16 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.1 | 2.5 | 11 |
| 65 | 732 | அராலி வீதி 17 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.04 | 2.8 | 11 |
| 66 | 733 | அராலி வீதி 18 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.02 | 4.5 | 11 |
| 67 | 734 | அராலி வீதி 19ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.02 | 4 | 11 |
| 68 | 735 | அராலி வீதி 20 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.06 | 3 | 11 |
| 69 | 736 | அராலி வீதி 21 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.3 | 4 | 11 |
| 70 | 737 | அராலி வீதி 22 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.2 | 2.5 | 11 |
| 71 | 738 | அராலி வீதி 23 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.3 | 2.4 | 11 |
| 72 | 739 | அராலி வீதி 24 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.3 | 2.4 | 11 |
| 73 | 740 | அராலி வீதி 25 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.1 | 2.4 | 10 |
| 74 | 741 | அராலி வீதி 26 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.14 | 2.3 | 10 |
| 75 | 742 | அராலி வீதி 27 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.3 | 2.5 | 10 |
| 76 | 743 | அராலி வீதி 28 ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.17 | 2.6 | 10 |
| 77 | 824 | மண்பிட்டி ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 0.18 | 3 | 11,12 |
| 78 | 825 | கண்ணாபுரம் 1 ம் ஒழுங்கை | கண்ணாபுரம் ஒழுங்கை | முடிவு | 0.84 | 3 | 12 |
| 79 | 826 | சோலபுரம் வீட்டுத்திட்ட ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 0.6 | 2.8 | 25 |
| 80 | 827 | பண்ணை நெஞ்சு சிகிச்சை வைத்தியசாலை ஒழுங்கை | காக்கைதீவு வீதி | முடிவு | 0.19 | 2.5 | 25 |
| 81 | 828 | தம்பிராசா ஒழுங்கை | காக்கைதீவு வீதி | ஆனைக்கோட்டை பழம் வீதி | 0.21 | 3 | 10 |
| 82 | 932 | கோணாந்தோட்டம் வீதி | பொன்னாலை வீதி | ஆஸபத்திரி வீதி | 0.38 | 3.3 | 25 |
| 83 | 933 | ஆரியகுளம் ஒழுங்கை | ஸ்ரான்லி வீதி | முடிவு | 0.15 | 2.4 | 15 |
| 84 | 934 | இராசாவின் தோட்டம் வைரவர் கோவில் வீதி | இராசாவின் தோட்டம் வீதி | முடிவு | 0.14 | 2.4 | 15 |
| 85 | 935 | றக்கா வீட்டுத்திட்ட ஒழுங்கை | றக்கா வீதி | முடிவு | 0.19 | 2.5 | 16 |
| 86 | 1032 | தியாகி ஒழுங்கை | நாவலர் வீதி | செட்டித் தெரு ஒழுங்கை | 0.16 | 2.5 | 4 |
| 87 | 1035 | பாணான்குளம் ஒழுங்கை | கச்சேரி நல்லூர் வீதி | நல்லூர் குறுக்குத் தெரு | 0.21 | 3 | 5 |
| 88 | 1036 | ஆசீர்வாதப்பர் ஒழுங்கை | ஆசீர்வாதப்பர் வீதி | கலைமகள் வீதி | 0.14 | 1.5 | 7 |

**இம்மானுவல் ஆனல்ட், மாநகர முதல்வர், யழ்ப்பாணம்**

# ஐ.நா.பிரேரணையிலிருந்து இலங்கை விலகியதற்கு ராமதாஸ் கடும் கண்டனம்



(டில்லி)

போர்க்குற்றங்கள் குறித்த ஐ.நா.பிரேரணையில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகியுள்ளமை தொடர்பாக பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ் கடும் கண்டனம் வெளியிட்டார்.

இது குறித்து அவர் நேற்று வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

"இலங்கையில் இடம்பெற்ற போரின்போது நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்த பன்னாட்டு விசாரணையிலிருந்து விலகிக் கொள்வதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தில் இலங்கை அறிவித்திருக்கிறது. போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்று வதற்கான இலங்கை அரசாங்கத்தின் இந்த முயற்சி கண்டிக்கத்தக்கதாகும்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா.மனித உரிமை பேர வைக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவுத் துறை அமைச்சர் தினேஷ் குணவர்த் தன, இலங்கையில் போருக்குப் பிறகு அமைதியை ஏற்படுத்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகக் கூறினார்.

ஆனால் ஈழப்போர் முடிந்து 11 ஆண்டுகள் ஆகியும் ஈழத்தில் தமிழர்கள் அச்சமின்றி வாழும் நிலை ஏற்படுத்தப்படவில்லை என்பதுதான் உண்மையாகும்.

இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ள பல புள்ளிவிபரங்கள் இந்தக் குற்றச்சாட்டுக்களை உறுதி செய்கின்றன. ஈழப்போர் முடிந்து இரு ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தும் கூட இன்னும் ஈழத் தமிழர்கள் முழுமையாக அவர் கள் முன்பு வாழ்ந்த பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்பட வில்லை.

ஈழத்தமிழர்களின் நிலங்கள் அவர்களிடம் முழுமையாகத் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை. தமிழர்கள் வாழும் பகுதிகளில் இருந்து இலங்கை இராணுவத்தினர் இன்றுவரை வெளியேற்றப்படவில்லை. இந்தக் குற்றச்சாட்டுக்களை தினேஷ் குணவர்த்தன ஒப்புக்கொண்டுள்ளார். ஈழப்போர் முடிவடைந்து 11 ஆண்டுகள் நிறைவடையவிருக்கும் நிலையில் ஈழத்தமிழர்கள் மத்தியில் நிலவும் அச்சத்தைப் போக்க அந்நாட்டு அரசாங்கம் முடிவெடுக்கவில்லை.

ஈழத்தமிழர்களுக்கும் உலகெங்கும் வாழும் அவர்களின் உறவினர்களுக்கும் இப்போதுள்ள ஒரே ஆறுதல் இலங்கை போர்க்குற்ற விசாரணையைத் தொடர்ந்து குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தர வேண்டும் என்பதில் ஐ.நா.மனித உரிமை ஆணையர் உறுதியாக இருப்பதுதான்" என அவர் மேலும் குறிப்பிட்டார். (ஜ)

# 153 தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமனம்

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளுக் காக அதிபர்களை இணைத்துக் கொள்வதற்காக கடந்த டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் இடம்பெற்ற நேர்முகப்பரீட்சைகளுக்கு அமைய பொதுச் சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவை குழுவின் அனுமதியுடன் 153 அதிபர்களை இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நாட்டு பாடசாலை அமைப்பினுள் தற்போது 373 தேசிய பாடசாலைகள் காணப்படுகின்ற நிலையில், அதில் 278 பாடசாலைகளுக்கு உரிய தரத்தினை கொண்ட அதிபர்கள் நியமிக்கப்படவில்லை.

அதன்படி, தேசிய பாடசாலைகளுக்காக அதிபர்களை இணைத்துக் கொள்வதற்காக கடந்த டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சைகளுக்கு அமைய பொது சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழுவின் அனுமதியுடன் 153 அதிபர்களை இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தேசிய பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைய இந்த அதிபர்களுக்கான பாடசாலைகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த 25 ஆம் திகதி கல்வி அமைச்சில் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெருமாவால் நியமனங்கள் வழங்கப்பட்டன.

அதன்படி, வெற்றிடம் ஏற்பட்டிருந்த 153 பாடசாலைகளுக்காக அதிபர்கள் நியமிக்கப்பட்டனர். (இ-7)

# மீன்பிடித் கைத்தொழிலை பாதுகாக்க நடவடிக்கை



## ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

மீன்பிடி கைத்தொழிலை பாதுகாப்பதோடு, நுகர்வோருக்கும் நியாயமான விலையில் மீன்களைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். இழுவைப்படகு உரிமையாளர்கள் முகங் கொடுத்து வருகின்ற பிரச்சினைகள் தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இந்தப் பணிப்புரையை விடுத் தார்.

ஏற்றுமதி சந்தை தொடர்பாக கொள்கை அடிப்படையிலான புதிய திட்டங்களை வகுக்கும்போது ஏற்றுமதியாளர்கள், மீன்பிடிப்படகு உரிமையாளர்கள் உள்ளிட்ட குழுவொன்றின் மூலம் செயற்படுவதன் அவசியத்தை ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார். சட்டத்திற்கு புறம்பான முறைகளில் மீன்களைப் பிடிப்பதை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

ஏற்றுமதி நிறுவனங்கள் தமது கப்பல் மூலம் பிடிக்கப்பட்ட மீன்களை மாத்திரமே கொள்வனவு செய்வதாக மீனவ தொழிற்சங்க பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது.

தாம் ஏற்றுமதி கைத்தொழிலில் மாத்திரம் தங்கியுள்ளதால், தமது விளைச்சலுக்கு உரிய சந்தை வாய்ப்புக்கள் கிடைக்காமை பாரிய பிரச்சினையாக உள்ளதென்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

குறுகியகால மற்றும் நீண்ட கால தீர்வுகள் மூலம் இந்த பிரச்சினையை தீர்த்து வைக்குமாறும் ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார். ஏற்றுமதியாளர்களுடன் படகு உரிமையாளர்களையும் இணைத்துக் கொண்டு தேவையான எதிர்கால செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

இழுவைப்படகு உரிமையாளர்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைக்கு தற்காலிக தீர்வாக தனியார் துறையினரின் உதவியோடு அவர்களின் விளைச்சலை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு ஜனாதிபதி கூட்டுத் தாபனத்தின் தலைவருக்கு பணிப்புரை விடுத்தார். (இ-7)

# சிறந்த வினைத்திறனை வெளிப்படுத்திய 110 அரச நிறுவனங்களுக்கு விருது

(கொழும்பு)

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைக்கு அமைய 2018 ஆம் ஆண்டில் உயர்ந்த வினைத்திறன் மட்டத்தை அடைந்த நிறுவனங்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் சபாநாயகர் கருஜெயசூரிய ஆகியோரின் பங்களிப்புடன் இன்று பாராளுமன்றத்தில் இடம்பெறும். 2018 ஆம் ஆண்டு நிதியாண்டுக்குரிய அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையை கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அக்குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண நடவடிக்கை எடுத்திருந்தார்.

2018 ஆம் ஆண்டில் 844 நிறுவனங்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டதுடன், இதில் 110 நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய அரசாங்கத்தின் விசேட செலவைப் பிரிவு, அரசாங்க அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள், மாவட்ட செயலக அலுவலகங்கள், மாகாண சபை நிதியங்கள், மாகாணசபை அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவுப் பிரிவு, உள்ளூராட்சி அதி காரசபைகள், மாநகர சபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் போன்ற பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்படு கின்றன.

எட்டாவது பாராளுமன்றத்தில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் திட்டத்துக்கு அமைய அரசாங்க நிறுவனங்களில் நிதி மற்றும் செயற்பாடுகளை நெறிப்படுத்தும் நோக்கில் அரசாங்க, மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளின் நிறுவனங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு முதல் கணனி மயப்படுத்தப்பட்ட முறையின் ஊடாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையிலேயே 2018 நிதியாண்டுக்குரிய நிறுவனங்களுக்கான விருதுகள் இன்று வழங்கப்படவுள்ளன.

அரச, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை கணனி வலையமைப்பின் ஊடாக மேற்கொள்ளும் மதிப்பீடுகள் முன்னேற்றத்தைக் காண்பித்துள்ளன. இந்த மதிப்பீட்டின் ஊடாக 2015 ஆம் ஆண்டு கிடைத்த பலன் 64 வீதமாக காணப்பட்ட நிலையில், 2018 ஆம் ஆண்டு இது 78 வீதமாக வளர்ச்சி கண்டுள்ளது.

இந்தப் பொறிமுறையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று அரசாங்க நிறுவனங்களை நெறிமுறைப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி.மேரிசாமினி அன்ரனி அவர்களின் பாசமிகு தந்தை

### அமரர்:டேவிட் தேவதிரவியம்



(ஓய்வுபெற்ற சீமெந்துக் கூட்டுத்தாபன உதவியாளர்-காங்கேசன்துறை)

நாம் நினையாத கணத்தினில்
நீ பிரிந்த செய்தியறிந்து
நீர் ஒழுகும் நினைவோடு
நாமும் இங்கு கலங்குகின்றோம்
கண்ணழியும் நீரொழுக
கலங்குகிறோம் நாம்!
அன்பொழுகும் வார்த்தைகளால்
அனைவரையும் கவர்ந்தவரே
காலனும் உனைக் கவர்ந்தானோ...
காலமும் கரம் தப்பியதோ...

அன்னை மடியில் 15.12.1947 ஆண்டவர் அடியில் 26.02.2020

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா இளைப்பாற்றத்திற்காக ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.
நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தை காத்துக்கொண்டேன்

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
பாடசாலைச் சமூகம் (யா/புத்தளை ம.வி)

(8-0350)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர்.கணபதி நடராசா



மண் மகிழ் 10.04.1940 கண் நெகிழ் 11.03.2019

திதி அமாவாசை 28.02.2020

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த
எங்கள் அன்பான அப்பாவே!
ஒரு கூட்டுக்கிளியாக நாம் சந்தோஷமாக
சிறகடித்து இருந்தோம்
திடீரென உங்களை
அந்தக் காலனவன் விதிவடிவில் வந்து
கவர்ந்து சென்றுவிட்டான்
எத்தனை யுகங்கள் சென்றாலும் மறக்க
முடியுமா! உமது வதனமதை!
என்றும் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்திக்காக
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பங்களா லேன்,
மல்லாகம்.

(2401)

என்றும் உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்.

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## பாவங்கள் போக்கும் பாதுகை

ஜோதிடத்தில் பன்னிரண்டாம் பாவத்திற்கு மோட்சஸ்தானம் என்று பெயர். மோட்சம் என்றால் விடுதலை என்று பொருள். அதாவது இங்கே மோட்சம் என்பது பிறவிக்கடனிலிருந்து விடுபடுவதைக் குறிக்கும்.

பிறவிக்கடனைக் குறிக்கும் பாவம் ஆறாம் பாவமாகும். அதிலிருந்து மனிதனை விடுவிப்பது பன்னிரண்டாம் பாவமாகும்.

பன்னிரண்டாம் பாவம் காலப்புருசனின் (இராசிப்புருசனின்) பாதங்களைக் குறிக்கும். ஜோதிடத்தில் விஷ்ணுவை இராசிப்புருசன் என்றும் காலப்புருசன் என்றும் அழைப்பர். எனவே இராசிக்கட்டத்தில் உள்ள பன்னிரண்டாம் பாவம் விஷ்ணு பாதத்தைக் குறிக்கும்.

பெருமாள் கோவில்களில் பக்தர்கள் தலை மீது சடாரி வைக்கும் வழக்கம் நடைமுறையில் இருக்கிறது. இறைவனின் திருப்பாதங்களை கீரிடம் போன்று செய்திருப்பார்கள். அதை நம் தலை மீது வைத்து நமக்கு ஆசி வழங்குவார்கள். இறைவனின் திருப்பாதங்களை நம் தலை மீது வைத்தால் நம் பாவங்கள் தொலையும்.

தினமும் நாம் செய்த பாவங்கள் அன்றே நம்மைவிட்டு விலகும். பெருமாள் கோவிலுக்கு சென்றவர்கள் சடாரி வைத்துக்கொள்ளாமல் திரும்பி வரக் கூடாது.

விஷ்ணுவின் பாதங்களிலிருந்தே கங்கை தோன்றுவதாக கூறுவர். விஷ்ணுவின் பாதங்களிலிருந்து தோன்றும் கங்கை நம் பாவத்தைப் போக்குவாள்.

எந்த கோயிலுக்குச் சென்றாலும் முதலில் இறைவனின் திருப்பாதங்களையே தரிசிக்க வேண்டும்.

குருநாதர் மற்றும் பெரியோர் பாதங்களில் விழுந்து வணங்குவதாலும் நம் பாவங்கள் நம்மை விட்டு நீங்கும். எனவே குரு நாதர்களையோ பெரியோர்களையோ சந்திக்கும் பொழுது அவர்கள் பாதங்களில் விழுந்து ஆசி பெற வேண்டும்.

பக்தர்கள் கோவில்களில் கொடி மரத்தருகே தலையில் வீழ்ந்து வணங்குவர். அவ்வாறு வீழ்ந்து வணங்கும் போதே இறைவனின் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்குவதாக பாவித்துக் கொண்டு வணங்கினால் நம் பாவங்கள் தொலையும்.

திருவரங்கத்தில் குடி கொண்டுள்ள இறைவனின் திருவடிகளை மையமாக வைத்து பாதுகா சஹஸ்ரம் என்ற ஸ்லோகத்தை ஸ்ரீ வேதாந்த தேசிகர் என்னும் வைணவப் பெரியவர் இயற்றியிருக்கிறார்.

முழுக்க முழுக்க இறைவனின் திருவடிப் பெருமைகளையே உரைக்கும் இந்த கலோகங்களில் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு பலன் இருக்கிறது. ஒரே இரவுக்குள் இந்த "பாதுகா சஹஸ்ரம்" என்ற ஆயிரத்தியெட்டு ஸ்லோகங்கள் முழுவதையும் அவர் எழுதி முடித்துள்ளார் என்பது தான் இதன் சிறப்பு.

இந்த பாதுகா சஹஸ்ரத்தை நாளுக்கு ஸ்லோகம் வீதம், ஒவ்வொரு ஸ்லோகத்தையும் 108 முறை பாராயணம் செய்து வந்தால் முற்பிறவி பாவங்களிலிருந்து நமக்கு விடுதலை கிடைக்கும். ஸ்லோகங்களை ஜபிக்கும் போது இறைவனின் பாதுகைகள் மீதே நம் மனம் இருக்க வேண்டும்.

# ஏழிசை மாலை- 28 இன்று

(சாவகச்சேரி)

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலய இசை ஆசிரியர்கள்.மாணவர்கள் இணைந்து வழங்கும் ஏழிசை மாலை-28 அதிபர் க. சண்முகதாஸ் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரியுமான பேராசிரியர் க.கந்தசாமி. சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் ஐ.வரதராஜா. ஓய்வுநிலை அதிபர் கோ. ஸ்ரீகாந்தா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)

# தேசிய உற்பத்தித்திறன் விருதுகள்

## போட்டித்தொடர் தெளிவூட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

திறன் அபிவிருத்தி வேலை வாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டித் தொடருக்காக யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைத்துறை. அரசதுறை. உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் விண்ணப்பிப்பதற்கான தெளிவூட்டும் செயலமர்வு எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை மூன்று பிரிவுகளாக யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 9.00 முதல் முற்பகல் 11.00 வரை- பாடசாலைத் துறை. முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 1.30 வரை-அரசதுறை. பிற்பகல் 2.30 முதல் பிற்பகல் 4.30 வரை- உற்பத்தி மற்றும் சேவைகள் துறை.

இச் செயலமர்வில் உற்பத்தித் திறன் விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள். நிறுவனங்கள் சார்பாக பிரதிநிதி ஒருவரை கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போட்டித் தொடருக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 31.03.2020 என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (இ)



யா/புனிதநகர் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் அதிபர் இ.குகன் தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய தமிழ்பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் க.பத்மகாந்தனும் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரிவு || பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட்டும் கலந்து கொண்டனர். (படம்:- மகாலிங்கம்)

# இராசி பலன்

**மேடம்:** எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் பலனுண்டு, தொழிலில் சில மாற்றங்கள் உருவாவதற்கான வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கடகம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பேச்சில் இனிமை தென்படும்,ஆரோக்கியத் தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் விலகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.

**துலாம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**மகரம்:** பெற்றோர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் கௌரவம் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்:** இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சுக் | சந் | | ராகு |
| சூரி | இராசி பலன் | | |
| புத | | | |
| சனி, செவ், குரு, கேது | | | |

சந்திராஷ்டமம்
உத்தரம், அத்தம்

28.02.2020
மாசி 16, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
பஞ்சமி முழுவதும்
அச்சுவினி பின்னிரவு 2.12 மணிவரை
சுபநேரம் 6.28-7.58 மணிவரை
இராகுகாலம் 10.58-12.28 மணிவரை

பல தடை உடையவனே
வாழ்க்கையில் முன்னேறுவான்
வளவன்

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**
**உப அலுவலகம், சுன்னாகம்.**
**வட்டாரம் - 01, மயிலணி வீதி, ஆதன இல- 113/10**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட மயிலணி வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம் - 01 , மயிலணி வீதி, ஆதன இல 113/10ல் K.கந்தன் உரிமைகோருபவர் by.S. செல்லப்பா எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு N.தம்பிமுத்தன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தெற்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை, வலிகாமம் தெற்கு -உடுவில் பிரதேச செயலர் பிரிவு, J/195 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள "ஊரிசாட்டி" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 01 உடைய ஆதனமானது செல்லப்பா சுந்தரலிங்கம், குட்டியன் ரவீந்திரராஜா பெண் லதா ஆகியோரால் 4098 ஆம் இலக்க 13.08.2003 ஆம் திகதிய உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

அதன் எல்லைகளாக,
கிழக்கு- செல்லர் யோகரசாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும், பகுதிக்கிணறும்
வடக்கு - ஒழுங்கை
மேற்கு - தங்கவேலு பெண் மங்களேஸ்வரியின் ஆதனம்
தெற்கு - தம்பிமுத்து பெண் நாகம்மாவின் ஆதனம்

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.சிற்றம்பலம் அவர்களில் 2019.10.29 ஆம் திகதிய 4753 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு 01 ஆகிய நிலப்பரப்பு 01 ஆகும். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு ஜெ.ஜெயரூபன் அவர்கள் மூலம் 21.10.2019 ஆம் திகதிய 2717 ஆம் இலக்க அறுதி உறுதியால் சுன்னாகம், சூராவத்தை, பூதராயர் கோவிலடி என்னும் இடத்தை சேர்ந்த தம்பிமுத்து விஜயரத்தினம் (561911401V) பெண் செல்வமணி (195667910060) எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 31 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது தம்பிமுத்து விஜயரத்தினம் பெண் செல்வமணி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.** (2397)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: - செவ் 4 ல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: **B.Sc- Computer Science & Technology. Software Engineer**
எதிர்பார்ப்பு: வைத்தியர், விரிவுரையாளர், மென்பொறியியலாளர்
தொ.இ: B/10564

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா: 8 செவ் 12 ல் உயரம்: 6'2"
தகைமை/தொழில்: கணனி மென்பொறியியல், வங்கி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: சிறந்த கல்வித்தகுதி உடைய பெண்
தொ.இ: B/10566

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 19½ செவ் 7 ல்உயரம்: 5'5"
தகைமை/தொழில்: **Electrical Engineer, Engineer**
எதிர்பார்ப்பு: மணமகனுக்கேற்ற தகுந்த வரன்
தொ.இ: B/10568

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 4
கி.பா:- செவ் 3 ல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: தொழில்நுட்ப உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் செய்யும் பெண்
தொ.இ: B/10569

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 46 செவ் 8 ல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: **B.A. , Instructor computer information and Technology**
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/7238

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2 செவ் 10 ல்கி.பா: 46உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த. உயர்தரம்
எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்ப்பவர் அல்லது வெளிநாட்டில் வசிக்கும் மணமகன்
தொ.இ: G/7252

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: செவ் 3 ல் உயரம்: 5'1 "
தகைமை/தொழில்: க.பொ.த. உயர்தரம்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7262

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 45 3/4 செவ் 9 ல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Civil Engineering. Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/7282

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும்

# யாழ்.கம்பன் விழா-2020



**பெப்ரவரி 28, 29, மார்ச் 01 ஆகிய திகதிகளில்**

*நல்லூர்*
*காலை 9.30 மணி: கம்பன் கோட்டம்*
*மாலை 4.30 மணி: ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம்*



## திருநாள் மங்கலம்

**28.02.2020 வெள்ளி மாலை 4.30 மணி**
**ஸ்ரீதுர்க்கா மணி மண்டபம்**
**இன்றைய நிகழ்வுகள்**

**மங்கல இசை**
திரு. எம்.பி.பாலகிருஷ்ணன்
திரு.வி.கே.பஞ்சமூர்த்தி
திரு.கே.ஆர். புண்ணியமூர்த்தி

**மங்கல விளக்கேற்றல்**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
வண. பேராசிரியர் ஞா.பிலேந்திரன்
(யாழ்.பல்கலைக்கழகம்)
அஷ்ஷெய்க் மௌலவி எம்.ஏ.பைஸர்
(காசிமி, மதனி)

**கடவுள் வாழ்த்து**
திரு.ம.தயாபரன்

**தலைமையுரை**
மாண்புமிகு ஜெ.விஸ்வநாதன்
(பெருந்தலைவர், கொழும்புக் கம்பன்கழகம்)

**தொடக்கவுரை**
பேராசிரியர் க.கந்தசாமி
(தகுதிவாய்ந்த அதிகாரி, யாழ்.பல்கலைக்கழகம்)

**நூல் வெளியீடு**
யாழில் கழகத்தின் பதினைந்தாண்டு வரலாற்றுப் புகைப்படத்தொகுப்பு
கொழும்புக் கம்பன்கழக வெள்ளிவிழா மலர்

**இறுவெட்டு வெளியீடு**
யாழ்.கம்பன் விழா 2019, கொழும்பு நாட்டிய விழா 2019

**முதற்பிரதி பெறுநர்**
திரு.கு.சிவஞானசுந்தரம்
(செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி. வ.மா.)
திரு.எஸ்.வி.எம்.குணரட்ணம்
(அதிபர், எஸ்.வி.எம்.நிறுவனம்)



திரு.ச.சிவகுமார்
(அதிபர், சிவன் மோட்டர்ஸ்)
திரு.க.அருள்நேசன்
(அதிபர், சிவகணேசன் புடைவையகம்)



**எழிலுரை**
திரு.பாரதி கிருஷ்ணகுமார் (திரைப்பட இயக்குநர், தமிழ்நாடு)
பொருள்: 'கம்பன் என்றொரு மானுடன்'


**இலக்கிய ஆணைக்குழு**
*ஆணையாளர்:* பேராசிரியர் மு.இராமச்சந்திரன்(தமிழ்நாடு)
*பொருள்:* "வேட்பமொழியும் வீறுடைத் தொடர் எனுந் தகுதி எத்தொடர்க்கு உரியது?"

'நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு?' – இரா.செல்வவடிவேல்
'புதல்வராற் பொலிந்தான் நுந்தை' – ந.விஜயசுந்தரம்
'இன்றுபோய்ப் போர்க்கு நாளை வா' – ஸ்ரீ.பிரசாந்தன் (இ)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# தீவக அபிவிருத்திக் குழுக் கலந்துரையாடலுக்கு மக்கள் பிரதிநிதிகளை ஏன் அழைக்கவில்லை

## பிரதேச சபை உறுப்பினர்கள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

தீவகப் பிரதேச செயலகங்களுக்கான அபிவிருத்திக் கலந்துரையாடலுக்கு அப்பகுதிகளைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர்கள் எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரிவித்து தீவக பிரதேச சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் நேற்று வேலணைப் பிரதேச செயலகத்தின் முன் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தீவகப் பகுதிகளைச் சேர்ந்த பிரதேச சபைகளான நெடுந்தீவு. வேலணைப் பிரதேச சபை மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்களே இவ்வாறு போராட்டம் நடத்தினர்.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் நேற்று இடம்பெற்ற தீவகப் பிரதேசங்களுக்கான அபிவிருத்திக் கலந்துரையாடலுக்குச் சென்ற போதே இவ்வாறு போராட்டம் நடத்தப்பட்டது.

இப் போராட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தெரிவிக்கும் போது, மக்களின் வாக்குகளால் பிரதேச சபைக்குத் தெரிவாகிய நாங்கள் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வேலணை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தனர்.

இப்போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (இ-10-18-101)

### மக்கள் மீது அக்கறையுள்ளவர்கள் தாமாக முன்வரவேண்டும்

# அழைத்தால் வரமாட்டார்கள் அழைக்காவிட்டால் போராட்டம்

## அங்கஜன் எம்.பி. காட்டம்

(யாழ்ப்பாணம்)

தீவக அபிவிருத்திக் கலந்துரையாடலுக்கு எந்தவொரு சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அழைப்பு விடாத சந்தர்ப்பத்தில் மக்கள் மீது அக்கறையுள்ள உறுப்பினர்கள் தாமாகவே முன்வந்து கூட்டத்தில் பங்குபற்றியிருக்க வேண்டுமென யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

தீவகப் பகுதிகளுக்கான அபிவிருத்திக் கலந்துரையாடல் நேற்று வேலணைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிலையில் போராட்டம் நடத்திய உறுப்பினர்கள் தொடர்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட முறையில் அழைப்பு விடுக்கப்படுவதில்லை.

காலத்தைக் கருத்தில் கொண்டு இரண்டு அல்லது மூன்று பிரதேச செயலகங்களை ஒன்றிணைந்தே குறித்த அபிவிருத்திக் கலந்துரையாடல் இடம் பெற்று வருகிறது.

இந்நிலையில் தம்மை மக்கள் பிரதிநிகள் எனக் கூறுவோர் தமது மக்கள் தொடர்பில் கரிசனையாக இருந்தால் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அபிவிருத்திக் குழுக்கூட்டங்களில் கருத்துத் தெரிவிக்க முடியும்.கடந்த மாதம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் கலந்துரையாடலுக்கு சகல கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அழைப்பு விடுக்கப்பட்டது.

இருப்பினும் எந்தவொரு கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் குறித்த கலந்துரையாடலில் பங்குபற்றவில்லை.

ஆனால் தற்போது வேலணையில் இடம்பெற்ற கூட்டத்திற்கு மட்டும் உத்தியோகபூர்வமாக அழைக்கவில்லை எனக் கூறும் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களில் செயல் குறுகிய அரசியல் நோக்கம் கொண்டதாகக் காணப்படுகிறது.

ஆகவே எதை எடுத்தாலும் கட்சி ரீதியாகப் பார்த்து எதிர்க்கும் அரசியல் கலாசாரம் மக்கள் பிரதிநிதிகளிடத்தில் இருந்து மாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# டயமண்ட் பிரின்சஸ் கப்பலிலிருந்து இரு இலங்கையர்கள் வெளியேற்றம்

## மோடிக்கு மகிந்த நன்றி

(கொழும்பு)

யோகோகாமாவில் தனிமைப்படுத்தப்பட்ட டயமண்ட் பிரின்சஸ் கப்பலில் இருந்து இலங்கையர்கள் இருவர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக டயமண்ட் பிரின்சஸ் கப்பலில் 691 பேர் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்த ஒரு விசேட விமானம் மூலம் ஜப்பானில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள டயமண்ட் பிரின்சஸ் கப்பலில் சேவையாற்றிய இலங்கை ஊழியர்கள் இருவரும் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என பரிசோதனைகளில் உறுதியாகியுள்ளதாகவும் ஆரோக்கியத்துடன் அவர்கள் இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் கருத்துத் பதிவிட்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, "தனிமைப்படுத்தப்பட்ட டயமண்ட் பிரின்சஸ் கப்பலில் இருந்த இரண்டு இலங்கையர்கள் டோக்கியோவிலிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பாக டில்லிக்கு வந்துள்ளனர் என இந்தியாவிற்கான பதில் உயர்ஸ்தானிகர் தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

அத்தோடு இந்த நடவடிக்கையை மேற்கொண்ட பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் மற்றும் குறித்த விமான சேவை நிறுவனத்திற்கும் அவர் நன்றியைத் தெரிவித்தார்.

குறித்த இலங்கையர்கள் இருவரும் 14 நாட்களுக்குப் பின்னர் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)





வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் அதிகார சபையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவை அதிகாரசபைத் தலைவருமான சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது. இதில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் பிரதம விருந்தினராகவும், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி- சுஜீவா சிவதாஸ், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபர் திருமதி- வாசுகி தவபாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். இவ் விழாவில் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பல்துறைகளையும் சேர்ந்த ஏழு கலைஞர்கள் "யாழ் ரத்னா" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்:- செ.ரவிசாந்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## அருகிவரும் இந்துக்களின் சம்பிரதாயங்களுக்கு பின்னால் ஒளிந்திருக்கும் அற்புதமான விஞ்ஞான காரணங்கள்

(21.02.2020 ஆம் திகதி தொடர்ச்சி...)

**11.கைகளில் மருதாணி வைப்பது**

அலங்கார காரணத்தை தவிர. மருதாணி என்பது சக்தி வாய்ந்த மருத்துவ மூலிகையாகும். திருமணங்கள் என்பது அழுத்தத்தை உண்டாக்கும், குறிப்பாக மணப்பெண்ணுக்கு. மருதாணி தடவிக் கொண்டால் நரம்புகளை குளிரச் செய்யும். அதனால் தான் மணப்பெண்ணின் கைகளிலும் கால்களிலும் மருதாணி தடவப்படுகிறது.

**12.வெள்ளிப்பாத்திரங்கள்**

வெள்ளித் தட்டுகளில் சாப்பிடுவது. அவர்களின் நிலையை காண்பிப்பதற்காக இல்லை, வெள்ளித்தட்டில் சாப்பிடுவதால் உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்பதால் தான். நிபுணர்களும் வெள்ளித் தட்டில் சாப்பிடுவதால் அதில் உள்ள அன்டி-வைரல் மற்றும் அன்டி-பக்றீரியல் தன்மையால், உண்ணும் உணவு ஆரோக்கியமானதாக இருக்கும் என்று சொல்கின்றனர்.

**13.தரையில் அமர்ந்து உண்ணுவது**

நாம் தரையில் அமரும் போது சுகாசன் தோரணையில் அமர்கிறோம். இந்த தோரணை செரிமானத்தை மேம்படுத்தும். அதனால் நாம் சுகாசன் தோரணையில் அமரும் போது நம் உணவு சுலபமாக செரிமானமடையும். தரையில் அமர்ந்து உண்ணுவது மட்டுமல்லாது உணவை கையில் அள்ளி குனிந்து தான் உண்ண வேண்டும் என்பதும் மரபு. இப்படி செய்வதினால், தொப்பை உருவாவது தடுக்கப்படும்.

**14.உணவருந்திய பின் இனிப்பு உண்ணுவது**

விருந்தோம்பலுக்கு பெயர் போன யாழ்ப்பாணத்தில் முன்னைய காலத்தில் காரசாரமான பதார்த்தங்களோடு ஆரம்பிக்கும் உணவு, இனிப்பு பண்டங்களுடன் முடிவடையும். அதற்கு காரணம் செரிமான அமைப்பு மற்றும் அமிலங்களை செயற்படுத்த செய்வது காரசாரமான உணவுகள். இந்த செயற்பாட்டை குறைத்திடவல்லது இனிப்புகள். அதனால் உணவருந்திய பிறகு இனிப்புகள் உண்ண பரிந்துரைக்கப்படுகிறது.

**15.குடையை வீட்டிற்கு வெளியே திறப்பது**

குடையை வீட்டிற்குள் திறக்கக் கூடாது. அதற்கான காரணம் மிகவும் சாதாரணமானவை. அந்தக் காலத்தில் குடைகளுக்கு கூர்மையான கம்பிகள் இருந்தன. இதனால் அதனை வீட்டிற்குள் திறக்கும் போது, அது பிறரை காயப்படுத்தலாம் அல்லது பொருட்களை உடைக்கலாம். அதுவே ஒரு வழக்கமாக மாறி நாளடைவில் மூட நம்பிக்கையாக மாறி விட்டது.

**16. ஈமச்சடங்கு முடிந்த பிறகு குளித்தல்**

பிரேத ஆத்மாக்கள் உங்களை பிடித்து விடும் என்ற மூட நம்பிக்கையைத்தான் இதற்கு காரணமாக பலரும் கூறி வருகின்றனர். ஆனால் உண்மை என்னவென்றால், அது நுண்ணுயிர்கள் சம்பந்தப்பட்டவையாகும். ஒருவர் இறந்த பிறகு அவர் உடல் கொஞ்சம் கொஞ்சமாக அழுகத் தொடங்கும். ஈமச்சடங்கில் கலந்து கொள்பவர்கள் இறந்த நபருக்கு அருகில் தான் இருக்க வேண்டி வரும். இதனால் அழுகிக் கொண்டிருக்கும் இறந்த உடலில் இருந்து வரும் பக்றீரியாக்களால் நீங்கள் பாதிக்கப்படலாம். அதனால் தான் ஈமச்சடங்கை முடித்த கையோடு, பிற வேலைகளை செய்வதற்கு முன் குளிக்க வேண்டும்.

**17.காலையில் சூரியனை வழிபடுதல்**



விடியற்காலையில் சூரிய பகவானை வணங்கும் வழக்கம் இந்துக்களிடம் உள்ளது. அதற்கு காரணம் விடியற்காலையில் வரும் சூரிய ஒளி மூலம் விற்றமின் டி கிடைக்கின்றது. அத்துடன் அவை கண்களுக்கு மிகவும் நல்லதாகும். மேலும் காலையில் வேகமாக எழுந்திருப்பது உடலுக்கு ஆரோக்கியமானது.

**18. நெய்**

பெரும்பாலான வீடுகளில் எண்ணெய்க்கு பதிலாக நெய் சேர்த்து சமைப்பார்கள். உண்மையில் எண்ணெயை விட நெய் மிகவும் ஆரோக்கியமானது. நெய்யை தினமும் அளவாக உணவில் சேர்த்து வந்தால், உயர் இரத்த அழுத்தம் குறையும், உடல் எடை கட்டுப்பாட்டுடன் இருக்கும் மற்றும் இதயம் ஆரோக்கியமாக இருக்கும்.

**19.விரதம்**

இந்துப் பெண்கள் எதற்கு எடுத்தாலும் விரதம் இருப்பார்கள். அதிலும் மாதத்திற்கு 1 முறையாவது விரதம் இருப்பார்கள். இப்படி விரதம் இருப்பதால் அவர்களின் செரிமான மண்டலம் சீராக செயற்படுவதோடு, எடை குறையும், மெட்டபாலிசம் அதிகரிக்கும், மூளையின் செயற்பாடு மேம்படும் மற்றும் வாழ்நாள் அதிகரிக்கும். அதனால் தான் ஆண்களை விட பெண்கள் நீண்ட நாட்கள் வாழ்கின்றனர் என்றும் சொல்லலாம்.

**20.வெறும் காலில் நடப்பது**

அக்காலத்தில் எல்லாம் செருப்பு அணிந்து கொண்டு சுற்றியதை விட, வெறும் காலில் சுற்றியது தான் அதிகம். அதனால் தான் நம் முன்னோர்கள் நீண்ட நாட்கள் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்ந்தனர் எனலாம். ஏனெனில் வெறும் காலில் நடப்பதால், உடலின் அனைத்து உறுப்புக்களையும் இணைக்கும் இடமான பாதம் தரையில் பட்டு மசாஜ் செய்யப்பட்டு, உடலின் அனைத்து உறுப்புக்களும் ஆரோக்கியமாக இயங்குமாம். எனவே வீட்டினுள் செருப்பு அணிந்து கொண்டு சுற்றுவதைத் தவிர்த்து, இனிமேல் வீட்டினுள் வெறும் காலில் சுற்றுங்கள்.

**21.கிரகண பயம்**

பல இந்துக்களின் வீட்டில், கிரகணத்தின் போது வீட்டை விட்டு வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. அந்த நேரத்தில் கிரகத்தை நேரடியாகப் பார்க்கவும் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். குறிப்பாக இந்நேரத்தில் கர்ப்பிணிப் பெண்கள் வீட்டிற்குள் தான் இருக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் வயிற்றில் உள்ள குழந்தை எந்தவித குறைபாடும் இல்லாமல் பிறக்கும். அதேபோல் கிரகணத்தின் போது உணவருந்தவோ சமைக்கவோ கூடாது எனவும் நம்பப்படுகிறது. சில வீடுகளில் ஒவ்வொரு உணவு பண்டத்தின் மீதும் துளசி இலை போடுவார்கள். இதனால் அந்த உணவுகள் கெட்டுப் போகாமல் இருக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை.

இதிலுள்ள ஒரே பிரச்சினை என்னவென்றால், கிரகணத்தை நேரடியாக உங்கள் கண்களால் பார்த்தால், சூரிய ஒளியின் தீவிரத்தால் உங்கள் விழித்திரை வெகுவாக பாதிக்கப்படும். ஒளி உணர் அணுக்களுக்கும் நரம்புகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதால், சில நேரங்களில் விழித்திரை எரிச்சல் கூட உண்டாகலாம். மேலும் கிரகணத்தின் போது, நுண்ணுயிரிகள் முனைப்புடன் செயற்பட்டு உணவுகளை கெடச் செய்யும். அதனால் உணவுகளில் துளசி இலையை போடும் போது, அதிலுள்ள மருத்துவ குணங்களால் உணவுகள் கெட்டுப் போகாமல் இருக்கும்.

**22.வடக்கை நோக்கி தலை வைத்து படுக்காதீர்கள்**

வடக்கு என்பது சாத்தானின் திசை என்பதே இதற்கு பின்னணியில் நீங்கள் அறிந்திருக்கும் ஒரே காரணமாக இருக்கும். அதனால் அந்த திசையை நோக்கி தலை வைத்து தூங்காதீர்கள் எனக் கூறுவார்கள். இருப்பினும் இதற்கு பின்னால் உள்ள உண்மையான காரணம் என்னவென்று தெரியுமா? வடக்கு திசையில் தலை வைத்து படுக்கும் போது, அது வட துருவம் என்ற காரணத்தினால், உங்கள் தலை ஒரு காந்தமாக செயற்படும். தூங்கும் போது வடக்கு திசையை நோக்கி தலை இருந்தால், உடலின் வட துருவமும் பூமியின் வட துருவமும் ஒன்றோடு ஒன்று தள்ளும். இதனால் உங்கள் இரத்த ஓட்டம் பாதிக்கப்படும்.

**23.இரவு நேரத்தில் அரச மரம் அருகில் போகாதீர்கள்**

இரவு நேரத்தில் அரச மரத்தில் பேய் குடி கொண்டிருக்கும் என்பதெல்லாம் பொய். அந்த நேரத்தில் தான் மரத்தில் இருந்து கார்பனீரொக்சைட் வெளிவரும். இது மனிதர்களுக்கு நல்லதல்ல. அதனால் இரவு நேரத்தில் அரச மரம் அருகில் போக வேண்டாம்.

**24.எலுமிச்சை மிளகாய் திருஷ்டி கயிறு**

எலுமிச்சை மிளகாய் திருஷ்டி கயிறு என்பது தீய கண்களில் இருந்து உங்களை பாதுகாக்கும் என நம்பப்படுகிறது. எலுமிச்சை மற்றும் பச்சை மிளகாய் மூடநம்பிக்கை தோன்ற காரணமாக இருந்தது என்னவென்று தெரியுமா? அவைகளுடைய குணப்படுத்தும் குணத்தினாலேயே. இவை இரண்டிலுமே பல விற்றமின்கள் அடங்கியுள்ளன. அதனால் தான் நம் முன்னோர்கள் அதன் பயனை விளக்கும் விதமாக அதனை சடங்குகளில் பயன்படுத்தினார்கள். அதுவே நாளடைவில் ஒரு புகழ் பெற்ற வழக்கமாக மாறி விட்டது.

**25.பயணத்திற்கு முன் தயிரும் சர்க்கரையும் உண்ணுவது**

வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன், தயிரும் தேனும் கொடுப்பது இரு வழக்கமாக உள்ளது. இது அதிர்ஷ்டமானது என நம்பப்படுகிறது. தயிரில் கல்சியம் மற்றும் புரதம் உள்ளது. கூடவே இயற்கை சர்க்கரையும் சிறிதளவில் உள்ளது. இதனால் வயிற்றுக்கும், செரிமான அமைப்பிற்கும் நல்லதாகும். அதனால் வெளியே செல்லும் முன் இதனை உண்ணச் சொல்கிறார்கள். இதில் குளிர்ச்சித் தன்மையும் உள்ளது. அதனால் அழுத்தம் நிறைந்த வேலைகளை செய்ய கிளம்புவதற்கு முன் இதனை உண்ண வைக்கிறார்கள்.

**26. ஆரத்தி எடுப்பது**



காலம், காலமாக நமது பழக்க வழக்கங்களில் நாம் கடைப்பிடித்து வரும் ஒன்று ஆரத்தி எடுப்பது. தற்போது நாம் இதை வெறுமென திருஷ்டி கழிப்பதற்காக என்ற எண்ணத்தில் தான் செய்து வருகிறோம். ஆனால், இது திருஷ்டி கழிப்பதற்காக உண்டாக்கப்பட்ட ஓர் சடங்கு முறையல்ல. கடவுளை வழிபடும் போதும் ஆரத்தி காண்பிக்கிறோம். நாம் தினந்தோறும் ஆரத்தி எடுப்பது கிடையாது. முக்கிய நாட்களில் மட்டுமே எடுப்போம். திருமணம் முடிந்த தம்பதியர், பிரசவம் முடிந்த பெண், வெளியூர் பிராயணம் முடித்து வரும் நபர்கள் என இவர்களுக்குத் தான் நாம் பொதுவாக ஆரத்தி எடுப்போம். இதன் பின்னணியிலுள்ள அறிவியல் காரணங்கள்.

ஆரத்தி எடுப்பது என்றால் ஒரு தாம்பாளத் தட்டில் தண்ணீர் நிரப்பி, மஞ்சள் அரைத்து சேர்த்து அதில் சிறிது சுண்ணாம்பு சேர்த்து கலக்க வேண்டும். மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த தண்ணீர் சிவப்பு நிறமாக மாறும். அந்த சிவப்பு நீரை ஒரு பரந்த பாத்திரத்தில் எடுத்து, அதற்கு இரு பக்கங்களிலும் இரண்டு தீச்சுடர் எழுப்பி சம்பந்தப்பட்ட நபரின் உடலுக்கு 3 முறை சுற்றி விடுவதையே ஆரத்தி என்று கூறுகிறோம்.

மஞ்சள் ஓர் சிறந்த கிருமி நாசினி என்பது நாம் அறிந்தது தான். சுண்ணாம்புக்கும் இந்த திறன் உண்டு. பிரசவித்த பெண், வைத்தியசாலைக்குச் சென்று வீடு திரும்பும் நபர்கள், பிராயணம் செய்து வருபவர்கள் மீது கண்டிப்பாக கிருமிங்கள் அதிகம் அண்டியிருக்கும். இந்த கிருமிநாசினி நீரில் சூடமேற்றி உடலை சுற்றுவதால், உடல் மேல் அண்டியிருக்கும் கிருமிகள் அழிந்துவிடும்.

உடல் மேல் கிருமிகள் அண்டியிருக்கும் நிலையில், வீட்டுக்குள் வரும் போது அது வீட்டில் இருக்கும் குழந்தைகள் மற்றும் பெரியவர்களை எளிதில் தொற்றிக்கொள்ளும். இது அவர்களுக்கு உடல் நல பிரச்சினைகளை ஏற்படுத்த வாய்ப்புகள் உண்டு. அதனால் தான் வாசலிலேயே ஆரத்தி எடுத்து வீட்டினுள் அழைத்து வருகிறார்கள்.

நமது முன்னோர்கள் எதையும் வெறுமென செய்து வைக்கவில்லை, அவர்களது செயல்களில் மருத்துவமும், அறிவியலும் புதைந்து இருக்கிறது என்பதற்கு ஆரத்தி எடுக்கும் முறை மற்றுமொரு சான்றாக விளங்குகிறது. சரியான புரிதலின்மையின் காரணமாக, இந்த தலைமுறையினர், இவற்றை எல்லாம் மூட நம்பிக்கை, வீண் சடங்குகள், அறிவியல் வளர்ந்த பிறகும் இதை ஏன் கடைப்பிடிக்கிறீர்கள் என்று குற்றம் சாட்டுகின்றனர். எனவே, நமது முன்னோர்களின் செயல்களில் ஒளிந்திருக்கும் ஆழமான விஞ்ஞானத்தை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்... இக்கட்டுரைக்கு முற்றுப்புள்ளியிட முடியாது...!

காலிங்கராசா
ஹரிச்சந்திரா
தொழில்நுட்ப அலுவலர்,
மீன்பிடியியல்
விஞ்ஞானத்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 238

நாம் தற்போது பயன்படுத்தும் மின்விளக்குகளில் LED மின்விளக்கு என்பது முக்கியமானதொன்றாகும். LED என்பதன் விரிவு ஆங்கிலத்தில் யாது?

புதிர் 238 இற்கான விடைகளை 09.03.2020 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

அ.குகன்,
விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்-புதிர் இல. 238**

சரியான விடை:-..............................................
முழுப்பெயர்:-..............................................
முகவரி:-..............................................
தொ.பே. இல:..............................................
கையொப்பம்:..............................................

# உலக நாடுகளை பகைத்துக் கொண்டு எமது நாடு முன்னேற முடியாது

## ரிஷாட் சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

**உலக நாடுகளுடன் பகைத்துக் கொண்டு இந்த நாடு முன்னோக்கி நகர முடியாது என முன்னாள் அமைச்சரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

ஐ.நா. தீர்மானத்தில் இருந்து அரசாங்கம் விலகுவது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் என்ற வகையில் தாங்கள் மட்டும் ஒரு நாடாக நினைத்து வாழ முடியாது. இந்த அரசாங்கமோ அல்லது நாடோ ஏனைய நாடுகளுடன் சேர்ந்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும். சுதந்திரத்திற்குப் பின்னர் பாரிய யுத்தத்திற்கு முகம்கொடுத்து அழிவுகளைச் சந்தித்து இருக்கின்றோம். அந்த அழிவுகள் எமக்கு ஒரு பாடமாக விளங்கி, கடந்த காலத்தில் பேரினவாதிகள் விட்ட தவறை இன்றைய தலைவர்களும் அரசியல் கட்சிகளும் ஒரு பாடமாகக் கொண்டு செயற்பட வேண்டும். சிறுபான்மை சமூகத்தினுடைய உள்ளங்களை உடைத்து, அவர்களுக்கு ஆத்திரத்தை ஊட்டி அசிங்கமான முறையில் செயற்படுகின்ற போது அது இந்த நாட்டிற்கு நல்லதல்ல. சுதந்திரம் பெற்ற போது செல்வந்த நாடான ஜப்பானுக்கு அடுத்த இடத்தில் இருந்த இந்த நாட்டின் யுத்தத்தினால் பொருளாதாரம் அதளபாதாளத்திற்குள் சென்றுள்ளது.



இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உலக நாடுகளுடன் பகைத்துக் கொண்டு இந்த நாடு முன்னோக்கி நகர முடியாது. பெற்றோல் வெளிநாடுகளில் இருந்து வருகிறது. அதேபோல் எமது ஏற்றுமதிப் பொருட்கள் அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் செல்கிறது. 5 பில்லியன் டொலர் பெறுமதியிலான ஆடைகள் அங்கு அனுப்பப்படுகின்றன. இலங்கைக்கு எதிரான பிரேரணையை கொண்டு வருவதில் ஐரோப்பாவும் அமெரிக்காவுமே முன்னின்று உழைத்தன. அவ்வாறான நாடுகளுடன் நேருக்கு நேர் முட்டி முரண்பட்டுக் கொண்டிருப்பது இந்த நாட்டிற்கு தான் ஆபத்தானது. பெரும்பான்மை மக்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக பேரினவாத சிந்தனையோடு இந்த அரசாங்கத்தில் உள்ள ஒரு சிலர் இனவாதத்தை, மதவாதத்தை விதைப்பதுடன் உலக நாடுகளையும் பகைத்துக் கொள்ளும் வகையில் செயற்படுகின்றனர். அவர்கள் இதனை திருத்திக் கொள்ளாவிட்டால் அதனால் ஏற்படும் பாதிப்பு நாட்டில் உள்ள 22 மில்லியன் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே அரசாங்கம் ஒரு பொறுப்புள்ள அரசாங்கமாக தமது கருத்தை சர்வதேசத்தில் சொல்ல வேண்டுமே தவிர, வாக்குகளைப் பெறுவதற்காக மட்டும் பேசுபவர்களாக இருக்கக் கூடாது என மேலும் தெரிவித்தார்.(9-250-299)






உழவர் பெருவிழாவை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சு மற்றும் திணைக்களம் இணைந்து நடத்திய 2019 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆட்டுப்பண்ணையாளர் போட்டியில் திருமதி.ஜோண்சன் ஞானசீலி என்ற பெண்மணி கரைச்சி பிரதேச மட்டத்தில் முதல் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தையும் பெற்றுள்ளார்.

(படங்கள்:-கிளிநொச்சி செய்தியாளர்)

# போதைப்பொருள் பாவனையால் பிரிந்து வாழும் பல இளம் குடும்பங்கள்

## கிராம மட்ட அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் சட்டவிரோத மதுபாவனை, போதைப்பொருள் பாவனை என்பவற்றினால் 15 வரையான இளம் குடும்பங்கள் பிரிந்து வாழ்வதாக கிராம மட்ட அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள சாந்தபுரம் கிராமத்தில் அதிகரித்துக்காணப்பட்ட சட்டவிரோத மதுபாவனை விற்பனைகள், போதைப்பொருள் பயன்பாடுகள் என்பவற்றைத்தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள் கிராமமட்ட அமைப்புக்களின் பங்குபற்றுதலுடன் கிராம அலுவலகம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுத்தி அலுவலகம் என்பன இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

பொதுமக்கள் மத்தியில் இதனைக்கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் ஒன்றும் கடந்த மாதம் இறுதிப்பகுதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறிப்பிட்ட ஒரு சிலரை தவிர இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட பலர் அதனை கைவிட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் • குறித்த கிராமத்தில் இவ்வாறான சட்டவிரோத மதுபாவனைகள் காரணமாக ஏற்பட்ட குடும்ப வன்முறைகள் காரணமாக 15 வரையான இளவயதுடைய குடும்பங்கள் பிரிந்து வாழ்வதாகவும் இவ்வாறான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வருமானங்கள் இன்றியும் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் கஷ்டங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். (9-315)

# செட்டிகுளத்தில் வீடு புகுந்து மர்ம நபர்கள் அட்டகாசம்



(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் சின்னத்தம்பனை கிராமத்தில் வீடு ஒன்றினுள் நேற்று அதிகாலை புகுந்த மர்ம நபர்கள் வீட்டிலிருந்த பெண்களை தாக்கி வீட்டில் இருந்த பொருட்களையும் முழுமையாகச் சேதப்படுத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த குடும்பப் பெண் அயலவர்களின் உதவியுடன் செட்டிகுளம் பிரதேச பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் கணவனை இழந்து தனது பிள்ளைகளுடன் தனிமையில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(9-250)

# திறப்பு விழா

(கிளிநொச்சி)

சிவபூமி அபயம் வைத்திய சாலை திறப்பு விழா பளை இயக்கச்சி கொற்றாண்டர் குளம், சிவபூமி கோட்டத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக அபயம் அறக்கட்டளை தலைவர் வைத்திய நிபுணர் க.பார்த்தீபன் கலந்துகொள்ளவுள்ளார். (9)

# கோட்டைகட்டியகுளம் பாலம் புனரமைக்கப்படுமா? மக்கள் கேள்வி

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் கோட்டைகட்டியகுளம் பிரதான வீதியின் சேதமடைந்து காணப்படும் பாலத்தினை ஆயிரம் கிராமியப்பாலங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் புனரமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.டி.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம், தென்னியங்குளம் உள்ளிட்ட சுமார் ஏழு கிராமங்களுக்கான பிரதான வீதியாகக் காணப்படும் துணுக்காய் அக்கராயன் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இதேவேளை இவ்வீதியில் அமைந்துள்ள கோட்டைகட்டியகுளம் பாலம் சேதமடைந்து காணப்படுகின்றது.

அண்மையில் பெய்த மழையினால் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட பாலத்தினை படையினரும் பொதுமக்களும் இணைந்து தற்காலிகமாக புனரமைத்து போக்குவரத்துக்கு தற்போது பயன்படுத்தி வருகின்றனர். இருந்த போதும் குறித்த பாலம் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. எனவே மேற்படி பாலத்தினை உடனடியாக புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன் விரைவில் புனரமைக்க முடியுமா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.டி.சிவநேசனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, இந்தப் பாலத்தினை புனரமைக்கும் பொருட்டு ஆயிரம் கிராமியப் பாலங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் உள்ளீர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா? என ஆராய்ந்து அதனை அந்த திட்டத்திற்குள் இணைத்திருக்கின்றோம். எனவே எதிர்வரும் ஆண்டுகளில் அது நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளது என தெரிவித்தார். (9-315)

# கொரோனா நோய் நீங்க பிரார்த்தனை



(மன்னார்)

உலகையே அச்சத்திற்குள்ளாக்கும் கொரோனா வைரசினால் இறந்தவர்களின் ஆன்மாக்களுக்கான இரங்கல் வழிபாடு மன்னார் கறிற்றாஸ்-வாழ்வுதய மண்டபத்தில் அதன் இயக்குநர் அருட்பணி செ.அன்ரன் அடிகளார் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றது. இதன்போது கறிற்றாஸ்-வாழ்வுதய பணியாளர்கள் மற்றும் வாழ்வுதயத்தில் கணனி பயிற்சியினை பெறும் மாணவர்கள் அனைவரும் இணைந்து கொண்டனர்.

இவ் இரங்கல் வழிபாட்டில் குறிப்பாக இதனால் பாதிக்கப்பட்டு இறந்த ஆன்மாக்களுக்காகவும், இதனால் பாதிக்கப்பட்டவர்கள் இத்தாக்கத்திலிருந்து விரைவாக மீண்டு உடல் உள ஆரோக்கியம் பெறுவதற்கும் இறை ஆசீர் வேண்டப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# பேராற்றில் தொடரும் மணல் கடத்தல்

## பார்வையிடச் சென்றவர்களுக்கு அச்சுறுத்தல்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கெரடமடு, மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வசந்தபுரம் ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக மணற் கொள்ளையர்களினுடைய சட்டவிரோத மண்ணகழ்வுச் செயற்பாடுகள் மிகத் தீவிரமான முறையில் இடம்பெற்று வருகின்றன.

இந்த பகுதிகளினூடாக ஊடறுத்து பாய்கின்ற பேராற்றில் மிகவும் பாரிய அளவில் குழிகள் அகழப்பட்டு, இய.ற்கை சமநிலையை சீரழிக்கும் வகையில் இந்த மண்ணகழ்வுச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந் நிலையில் குறித்த சட்டவிரோத மண்ணகழ்வுச் செயற்பாடு தொடர்பில், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தொடர்ச்சியாக அப் பகுதி மக்கள் முறையிட்டு வந்த நிலையில், புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர்களான மு.முகுந்தகஜன், சி.நிசாந்தி, நா.வன்னியசிங்கம் ஆகியோர் நேற்று முன்தினம் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறும் குறித்த பகுதிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

குறிப்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கெரடமடுப் பகுதியில் பேராற்றில் மிகப் பாரிய அளவில் மண் அகழப்பட்டு ஆற்றுக்கு வெளியே மணல் குவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த மணற்கொள்ளையர்கள் பிரதேசசபை உறுப்பினர்களின் வருகையினை அடுத்து மணல் அகழ்விற்காக பயன்படுத்திய கனரக வாகனங்களை அங்கிருந்து அவசர அவசரமாக எடுத்துச் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது.

அத்துடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வசந்தபுரம் பகுதியில், தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெறுகின்றது. இவ்வாறாக தொடர்ச்சியாக மணல் அகழப்பட்டு பாரவூர்திகளில் மணல் வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதால் அக்கிராமத்தின் பிரதான வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாலம் ஒன்று மிகப் பாரிய அளவில் சிதைவடைந்துள்ளது.

குறித்த பாலத்தின் சிதைவு நிலைமைகளை குறித்த பிரதேசசபை உறுப்பினர்கள் பார்வையிடும்போது, அவ்விடத்திற்கு வந்த சில மணல் கொள்ளையர்கள் பிரதேசசபை உறுப்பினர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் அவ்விடத்தில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் ஒருவரின் ஒளிப்படக்கருவியினை கைகளால் தள்ளிய குறித்த மணல் கொள்ளையர்கள், ஒளிப்படம் எடுக்க கூடாதெனவும் அச்சுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (9-281)

# உண்ணாவிரத போராட்டம் நிறைவு



(மன்னார்)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை கட்சியாக பதிவு செய்வது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரை சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 5 நாட்களாக முன்னெடுத்து வந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை கைவிடப்பட்டுள்ளது.

குறித்த நபரின் உடல் நிலையை கருத்தில் கொண்டு மன்னார் பிரஜைகள் குழுவினர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்த நபருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதோடு, குறித்த உண்ணாவிரத போராட்டத்தை கைவிட்டு குறித்த நபரின் முயற்சியை வேறு வடிவத்தில் முன்னெடுக்க ஆலோசனை வழங்கியதைத் தொடர்ந்து குறித்த நபரின் உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார், மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட் த்ந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், மூர்வீதி ஜும்மா பள்ளி மௌலவி எம்.அசீம், மன்னார் நகரசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினர் ஆகாரத்தை வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தனர். (9-285)

# அக்கராயன் பகுதியில் அதிகரித்துள்ள சட்டவிரோத போதைப்பொருள் விற்பனை

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை


(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் அதிகரித்துக்காணப்படும் சட்டவிரோத கசிப்பு விற்பனை மற்றும் கஞ்சா பாவனைகளால் பல்வேறு சிரமங்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்வதாக இப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, அக்கராயன், ஸ்கந்தபுரம், மணியங்குளம், கரித்தாஸ் குடியிருப்பு ஆகிய கிராமங்களில் தொடர்ந்தும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனால் தாங்கள் பெரும் சிரமங்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்வதாகவும் மேற்படி கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதாவது குறித்த கிராமங்களில் குறிப்



பிட்ட சிலர் தொடர்ச்சியாக சட்டவிரோத மதுபான விற்பனைகளிலும் உற்பத்திகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதேபோன்று கஞ்சா மற்றும் போதைப்பொருட்களின் பாவனைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனால் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த கூடுதலான இளைஞர்கள் இவ்வாறான போதைப்பொருட்களுக்கு அடிமையாகி வருவதுடன் பல்வேறுபட்ட குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ள கிராம மக்கள் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளுக்கோ அல்லது பொலிஸாருக்கோ தகவல்களை வழங்கி இதனைத் தடுப்பது தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்த முற்படுபவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (9-315)

# கிளி.மத்திய மகாவித்திக்கு புதிய அதிபர் நியமனம்



(அக்கராயன்)

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக ச.பூலோகராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்பு வட்டக்கச்சி மத்திய கல்லூரி, தருமபுரம் மத்திய கல்லூரி ஆகியவற்றின் அதிபராகக் கடமையாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-350)

வன்னி வலம்



கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்திற்கான திறன்விருத்தி வகுப்பறை மற்றும் விளையாட்டு முற்றம் மாணவர் பாவனைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனின் நிதி ஒதுக்கீட்டில் தலா ஐந்து இலட்சம் பெறுமதியில் விளையாட்டு முற்றம் மற்றும் திறன் விருத்தி வகுப்பறை ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. (படம்:-கண்டாவளை செய்தியாளர்)

# மாணவர்கள் கௌரவிப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் ஆங்கில தின போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்களை வழங்கி வைத்தார். (9-350)





சைவமும் தமிழும் காக்கும் வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள் என தெரிவித்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. தமிழ்த்தேசியம் காக்க சைவ வாக்காளர்கள் யாவரும் சங்கங்கள் உள்ளூராட்சி சபை, மாகாணசபை, நாடாளுமன்றத் தேர்தல்களில் சைவமும் தமிழும் காக்கும் வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள் என்று குறிப்பிடப்பட்டு சிவசேனை அமைப்பினால் ஒட்டப்பட்டுள்ளது.

(படம்:-நெளுக்குளம் செய்தியாளர்)

# பாரதம்

## ஆற்றில் கவிழ்ந்து பேருந்து விபத்து குழந்தைகள் உட்பட 24பேர் உயிரிழப்பு !

### திருமண விருந்திற்கு சென்ற வேளை விபரீதம்



(டில்லி)

ராஜஸ்தானில் தனியார் பேருந்தொன்று ஆற்றில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 10 பெண்கள், 3 குழந்தைகள் உட்பட 24 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

ராஜஸ்தானின் புந்தி மாவட்டத்தில் கோடாவில் இருந்து தவுசா பகுதிக்கு சென்ற தனியார் பேருந்து, பாலத்தின் மீது பயணித்தபோது நிலை தடுமாறி மைஸ் ஆற்றில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

இந்த பேருந்தில் மொத்தம் 28 பேர் பயணித்தனர். இவர்களில் 10 பெண்கள், 3 குழந்தைகள் உள்ளிட்ட 24 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இவர்கள் அனைவரும் திருமண விருந்தில் கலந்துகொள்வதற்காக அதிகாலையில் பேருந்தில் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். உயிரிழுந்தவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

ஆற்றின் கீழ் பகுதியில் அதிக நீர் நிறைந்த ஆழமான பள்ளம் இருந்ததும், பாலத்தின் பக்கவாட்டில் தடுப்புச்சுவர் ஏதும் இல்லாமல் இருந்ததே விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் எனக் கூறப்படும் நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-2)

## நாட்டிற்காக எல்லை தாண்டவும் தயார்

### ராஜ்நாத் சிங் திட்டவட்டம்




(சென்னை)

பயங்கரவாத அபாயத்தில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காக நமது படைகள் எல்லை தாண்டிச் செல்லவும் தயங்காது என பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை விடுத்தார்.

பாலகோட் தாக்குதலின் முதலாமாண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இது குறித்து டுவிட்டரில் கருத்து தெரிவித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், "பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் இந்தியாவின் அணுகுமுறை பெருமளவு மாறி இருக்கிறது. பயங்கரவாத அபாயத்தில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காக இப்போது நமது படைகள் எல்லை தாண்டி செல்லவும் தயங்காது.

கடந்த 2016 ஆம் ஆண்டின் துல்லிய தாக்குதலும் 2019 ஆம் ஆண்டின் பாலகோட் தாக்குதலுமே இதற்கு சாட்சிகள். இந்த மாற்றத்தைக் கொண்டு வந்ததற்காக பிரதமர் மோடிக்கு நன்றி. புதிய நம்பிக்கையான இந்தியா உருவாகி வருவதையே இது காட்டுகிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## டில்லியில் வன்முறை உயிரிழப்பு 35 ஆக அதிகரிப்பு



(சென்னை)

டில்லியின் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட வன்முறையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது.

குறித்த தாக்குதலால் ஏற்கனவே 27 பேர் உயிரிழந்துள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி மேலும் 8 பேர் உயிரிழந்தனர். இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது.

டில்லியில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு மற்றும் எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்ற இருவேறு பேரணியில் இருதரப்புக்கும் இடையே வன்முறை வெடித்தது.

இதன் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக டில்லி உயர் நீதிமன்ற உத்தரவை அடுத்து முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியா ஆகிய இருவரும் வடகிழக்கு டில்லியில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று பார்வையிட்டனர். அங்குள்ள நிலவரம் குறித்து மக்களிடம் கேட்டறிந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## அமெரிக்காவில் து

### 6 பேர் பரிதாபமா

**(வோஷிங்டன்)**

**அமெரிக்கா மில்வாக்கியில் உள்ள மொல்சன் கூர்ஸ் என்ற மதுபான தொழிற்சாலையொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.**

சுமார் 600 இற்கும் மேற்பட்டவர்கள் பணியில் ஈடுபட்டிருந்த வேளை இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் 51 வயது நபர் என்றும் பின்னர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட தொழிற்சாலையில் பணிபுரியும் நபர் ஒருவரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார் எனவும் தகவல்கள் வெளியாகின.

கொலைகாரன் ஒருவன் மேற்கொண்ட தாக்குதலில் மொல்சன் கூர்ஸ்

## உலகின் மிக வயதா

(டோக்கியோ)

உலகிலேயே மிக வயதான மனிதராக அறியப்பட்ட ஜப்பானைச் சேர்ந்த சிடேட்சு வடானபி உடல் நலக்குறைவால் மரணமடைந்தார்.

உலகிலேயே மிக வயதான மனிதராக அறியப்பட்ட ஜப்பானைச் சேர்ந்த சிடேட்சு வடானபி உடல் நலக்குறைவால் மரணமடைந்தார்.

அவருக்கு வயது 112. ஜப்பானின் நீகாடா நகரில் 1907 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிறந்த சிடேட்சு வடானபி தனது இளமைக் காலத்தை தாய்வானில் கழித்தார்.

அங்கு 18 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய அவர், திருமணத்துக்குப் பின் ஜப்பான் திரும்பினார். ஜப்பானில் அரசு ஊழியராக பணியாற்றி ஓய்வுபெற்ற அவருக்கு 5 பிள்ளைகள், 12 பேரன்கள், 16 கொள்ளுப் பேரன்கள் உள்ளனர்.

இவரை உலகில் வாழும் மிக அதிக வயதுடைய ஆணாக கடந்த 12 ஆம் திகதி கின்னஸ் புத்தகம் தெரிவு செய்து சான்றிதழ் வழங்கியது.

இதற்கு முன்னர் உலகின் மிக அதிக வயதுடைய ஆண் என்ற சாதனையை படைத்திருந்த மற்றொரு ஜப்பானியரான மசாசோ நோனாகா, கடந்த மாதம் இறந்ததைத் தொடர்ந்து, சிடேட்சு வடானபிக்கு இந்த பெருமை கிடைத்தது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக காய்ச்சல் மற்றும் மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்டிருந்த சிடேட்சு, கடந்த

## கொரோனாவுக்கு மே இறப்பு விகிதம் கணிச

(பீஜிங்)

சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்பினால் நேற்று மேலும் 29 பேர் உயிரிழந்தனர். ஜனவரி மாதத்திற்கு பிறகு இறப்பு விகிதம் இப்போதுதான் இந்த அளவிற்கு குறைந்துள்ளது.

சீனாவில் ஹூபெய் மாகாணம் வுஹான் நகரில் இருந்து கடந்த டிசெம்பர் மாதம் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் நாடு முழுவதிலும் பரவி, பெருமளவிலான உயிரிழப்பை ஏற்படுத்தி உள்ளது. சீனாவைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்கும் பரவி அச்சுறுத்தி வருகிறது.

சீனாவில் தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் கொரோனா





பாதிப்பினால் உயிரிழந்த நிலையில், கடந்த சில தினங்களாக வைரஸ் பரவுவது குறையத் தொடங்கியுள்ளது. இறப்பு



# வெளிநாடு

## துப்பாக்கிச்சூடு
## மாக உயிரிழப்பு!



தொழிற்சாலையில் ஐந்துபேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். சிலருக்கு படுகாயங்கள் ஏற்பட்டுள்ளன என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். (ஜ-2)

## தான மனிதர் மரணம்




ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தார்.

இதனை ஜப்பானில் உள்ள கின்னஸ் அமைப்பும் தெரிவித்தது.

'யார் மீதும் கோபப்படாமல், புன்னகையுடன் இருப்பதுதான்' தன்னுடைய நீண்ட ஆயுளுக்கான இரகசியம் என சிடேட்சு வடானபி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## மேலும் 29 பேர் பலி;
## னிசமாகக் குறைந்தது!



விகிதமும் படிப்படியாக குறைந்து வருகிறது.

சீனாவில் மேலும் 29 பேர் கொரோனாவுக்கு பலியாகி உள்ளனர்.

இதன்மூலம் சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு பலியானோரின் எண்ணிக்கை 2,744 ஆக உயர்ந்திருப்பதாக தேசிய சுகாதார ஆணையம் கூறி உள்ளது. கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி 26 பேர் கொரோனாவுக்கு பலியாகியிருந்தனர். அதன் பின்னர் இப்போது தான் அந்த அளவைவிட இறப்பு விகிதம் குறைந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக கிட்டத்தட்ட 78 ஆயிரத்து 500 பேர் இந்த வைரசால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் உள்ளனர். நேற்று புதிதாக 433 பேர் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். (ஜ-2)

# ஐரோப்பிய நாடுகளில் பரவும் கொரோனா

## ஸ்பெயினில் 1000 பேர் தடுத்து வைப்பு



(மாட்ரிட்)

ஐரோப்பிய நாடுகளில் கொரோனா வேகமாகப் பரவி வருகிறது. ஸ்பெயின் நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக 1,000 பேர் ஹோட்டலில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் கடந்த டிசெம்பர் மாத இறுதியில் உருவான கொரோனா வைரஸிற்கு அங்கு தினந்தோறும் மக்கள் கொத்துக்கொத்தாக செத்து மடிகின்றனர். அங்கு இந்தக் கொடிய வைரஸிற்கு பலியானவர்களின் எண்ணிக்கை 2,700 ஐ தாண்டி உள்ளது.

அதேசமயம் சீனாவில் இந்தக் கொடிய நோயின் வீரியம் சற்று குறையத் தொடங்கி இருக்கிறது. வைரஸ் பரவலின் வேகம் முன்பை விட குறைந்து வரும் நிலையில் கிட்டதட்ட 30 ஆயிரம் பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

ஆனால் கொரோனா வைரஸ் தற்போது, சீனாவுக்கு வெளியே கோரத்தாண்டவம் ஆடி வருகிறது. சீனாவை தவிர்த்து சுமார் 30 நாடுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஈரான், இத்தாலி, தென்கொரியா ஆகிய 3 நாடுகளும் கொரோனாவால் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருகிறது. அதிலும் குறிப்பாக சீனாவுக்கு அடுத்தபடியாக தென்கொரியாவில்தான் அதிக மக்களுக்கு கொரோனா பாதிப்புள்ளது.

அங்கு இந்தக் கொடிய நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது. தென்கொரியாவைத் தொடர்ந்து, ஐரோப்பிய நாடான இத்தாலியிலும் கொரோனா வைரஸ் த்னது கைவரிசையை காட்டி வருகிறது. அங்கு கொரோனாவுக்கு 11 பேர் பலியான நிலையில், 400 பேருக்கு கொரோனா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனிடையே இத்தாலியில் இருந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியுள்ளது.

இந்த ஹோட்டலில் இத்தாலி மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்கியுள்ள நிலையில் அவர்கள் அனைவரையும் ஹோட்டலை விட்டு வெளியேற விடாமல் ஹோட்டலுக்குள்ளேயே அடைத்து வைத்துள்ளனர்.

இதையடுத்து, 'அந்த ஹோட்டல் தனிமைப்படுத்தப்பட்டு ஹோட்டலை சுற்றி பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஹோட்டலில் இருக்கும் விருந்தினர்களுக்கு தொடர்ந்து மருத்துவ பரிசோதனை நடந்து வருகிறது.

இதில் ஹோட்டலில் இருக்கும் மேலும் 2 இத்தாலி சுற்றுலாப் பயணிகளுக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஹோட்டல் விருந்தினர்களின் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ளது.

ஹோட்டல் விருந்தினர்கள் அனைவரும் அடுத்த 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தி வைக்கப்படுவார்கள் என ஸ்பெயின் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஜ-2)

# டில்லி வன்முறையின் எதிரொலி சிறுபான்மையினரை சீண்டினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## இம்ரான்கான் எச்சரிக்கை



(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினரை யாரும் தாக்கினால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் எச்சரிக்கை விடுத்தார்.

குடியுரிமைத் திருத்தச் சட்ட விவகாரத்தில் டில்லியில் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இது நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த வன்முறைச் சம்பவங்களுக்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிடுகையில், 'வெறுப்பு அடிப்படையிலான இனவாத சித்தாந்தங்கள் தலைதூக்கினால், அது இரத்தம் சிந்துதலையே ஏற்படுத்தும். இந்தியாவில் 20 கோடி முஸ்லிம்கள் வன்முறைக்கு இலக்காக்கப்பட்டு இருக்கின்றனர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், 'பாகிஸ்தானில் நமது முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினரையோ அவர்களது வழிபாட்டுத் தலங்களையோ யாரும் தாக்கினால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கிறேன். நமது சிறுபான்மையினரும் சமமான குடிமக்களே' என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-2)

# பிரேரணையிலிருந்து இலங்கை விலகல்

# பிரிட்டன் கடும் அதிருப்தி!

## பொறுப்புக் கூறலில் கவனம் செலுத்த வலியுறுத்து

(ஜெனிவா)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 30/1 என்ற பிரேரணைக்கான அனுசரணையிலிருந்து இலங்கை வெளியேறுவது தொடர்பில் பிரிட்டன் தனது கடும் அதிருப்தியை வெளியிட்டது. நேற்று முன்தினம் ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்து பேச்சு நடத்திய பிரிட்டன் வெளிவிவகார அலுவலக இராஜாங்க அமைச்சர் தாரிக் ஹகமட் இவ்வாறு பிரிட்டனின் அதிருப்தியை வெளியிட்டார்.**

அதுமட்டுமன்றி இலங்கையானது மனித உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் நல்லிணக்கம் நீதி மற்றும் பொறுப்புக்கூறும் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமெனவும் பிரிட்டனின் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.



இது தொடர்பில் பிரிட்டனின் இராஜாங்க அமைச்சர் தாரிக் ஹகமட் தனது டுவிட்டர் பதிவில், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்து பேச்சு நடத்தினேன். இதன்போது இலங்கையானது 30/1 பிரேரணைக்கான அனுசரணையிலிருந்து வெளியேறுவது தொடர்பில் எனது கடும் அதிருப்தியை வெளியிட்டேன்.

அத்துடன் இலங்கையானது நல்லிணக்கம் பொறுப்புக்கூறலில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மனித உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெலிக்கடை கைதிகளுக்கு வட்டரக்கையில் இடம்!

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளுக்குத் தீர்வாக ஹோமாக, வட்டரக்க பகுதியில் சிறைச்சாலை வளாகமொன்றை நிர்மாணிக்க அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் டி.எம்.ஜே.டபிள்யூ.தென்னகோன் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெலிக்கடை விஜயத்தை மையமாகக் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வட்டரக்கவில் தற்போதுள்ள திறந்தவெளி சிறைச்சாலையானது 38 ஏக்கர் பரப்பளவை உடையதாகவும் இது விரிவாக்கத்திற்கான போதுமான இடத்தை கொண்டுள்ளதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் 10 ஆயிரம் கைதிகளை மாத்திரம் தடுத்து வைத்திருக்க முடியும் என்றபோதிலும் தற்போது அங்கு 26 ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழ்.மாவட்ட புதிய மகளிர் சம்மேளனம் தெரிவு



2020 ஆம் ஆண்டிற்கான யாழ்.மாவட்ட மகளிர் சம்மேளனத் தெரிவு கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.லேனுகாராணி தலைமையில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த மகளிர் சங்கங்கள் இதில் பங்குபற்றியிருந்தன.

புதிய நிர்வாகத் தெரிவில் செயலாளராக திருமதி மதனரூபி நிரோசானந்த் (உடுவில் பிரதேச செயலகம்), தலைவராக திருமதி அனுஷியா ஜெயகாந்த் (வேலணை பிரதேச செயலகம்), பொருளாளராக திருமதி அருண் பாபு சர்மிளா (யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்), உப தலைவராக ச.நசாரியா றிசானா (மருதங்கேணி பிரதேச செயலகம்), உப செயலாளராக ஜெயக்குமார் ஈஸ்வரி (சங்கானை பிரதேச செயலகம்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-10)

# குப்பிழானில் முன்னறிவித்தலின்றி திடீர் மின்தடை

## பாவனையாளர்கள் விசனம்

(குப்பிழான்)

குப்பிழானில் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னறிவித்தலின்றி மின்தடைப்பட்டது.

முற்பகல் 9.45 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக இந்த மின்தடை அமுலிலிருந்தது.

இதேவேளை, முன்னறிவித்தலின்றி மின்தடை ஏற்படுவதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக மேற்படி கிராமத்தைச் சேர்ந்த மின்பாவனையாளர்கள் பலரும் விசனம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-18)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அறிவும் உணர்ச்சியும்!

ஒருத்தர் வேகமா நடந்து போறார்.

கடைத்தெருவிலே ஒரு சுவீட் கடையைப் பார்க்கிறார். உடனே “சடன் பிரேக் ” போட்டது மாதிரி நிற்கிறார். “ஒரு சுவீட் வாங்கி சாப்பிடலாமே! என்று மனசு சொல்லுது.

“டாக்டர் வேணாம்ன்னு சொல்லியிருக்கின்றார். உடம்புக்கு ஒத்துக்காது...அதனாலே அது வேண்டாம்! ” என்று சொல்லுது அறிவு.

இவரு மனது சொல்றதைக் கேக்கலே...அறிவு சொல்றதைக் கேக்கிறார்.

அதனாலே மறுபடியும் வேகமாக அங்கேயிருந்து நடந்து போய்விட்டார். அவர் நல்ல மனிதன். மனிதனுக்கு அறிவும் இருக்கு! உணர்ச்சியும் இருக்கு! எதற்கு எடுத்தாலும் உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. அறிவு வீசத்தாலே நாம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் நல்லபடியாக வாழமுடியும். இல்லையென்றால் அவஸ்தை தான் மகாபாரதத்திலே சந்தனு என்ற ஒரு அரசன் வருகிறான். அவன் ஒரு சமயம் அறிவு வசப்படாமல் உணர்ச்சிவசப்படுகின்றான்.

அதாவது ஒருநாள் கங்கைக் கரையிலே ஒரு அழகான பெண்ணைப் பார்க்கிறான். இவனுடைய மனசு அவளிடம் போய் விடுகின்றது! அவளைத் திருமணம் செய்ய ஆசைப்படுகின்றான். அந்தப் பெண்ணும் சரி என்று சம்மதிக்கிறாள்.

ஆனால் ஒரு நிபந்தனை போடுகிறாள். அந்த நிபந்தனைக்குச் சம்மதம் என்று சொன்னால் தான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்வேன் என்று சொல்கிறாள்.

சரி... அவள் போட்ட நிபந்தனை என்ன தெரியுமா?

இது மாதிரி...

“நான் உங்கள் மனது புண்படுகிற மாதிரி எந்தக் காரியம் செய்தாலும் சரி... நீங்கள் என்னை ஏன் என்று கேட்கக் கூடாது. நான் செய்கின்ற காரியத்தைத் தடுக்கவும் கூடாது... அப்படி நீங்கள் செய்தால் அடுத்த கணமே நான் உங்களைப் பிரிந்து போய்விடுவேன்!”

இதுதான் அந்தப் பெண் போட்ட நிபந்தனை. சந்தன அரசன் இந்த நிபந்தனையை ஒத்துக்கலாமா? அறிவுபூர்வமா யோசிச்சிருந்தால் இதற்குக் கட்டுப்பட்டிருக்க மாட்டான். இந்த நிபந்தனைக்கு நான் சம்மதிக்க மாட்டேன் என்று தானே சொல்லியிருக்க வேண்டும்!

அவன் அந்த நேரத்திலே உணர்ச்சி வசத்திலே இருந்தான். அதனாலே நீ என்ன சொன்னாலும் சரி என்று ஒத்துக் கொண்டான். அவளைக் கல்யாணமும் செய்து கொண்டான்.

இதனாலே என்ன ஆச்சு?

ஏழு பச்சிளங் குழந்தைகளை பிறந்தவுடனேயே அவள் கங்கையிலே தூக்கி எறிந்து கொல்கின்ற கோரக் காட்சியை இவன் ஒன்றுக்குப் பின்னர் ஒன்றாக பார்க்க வேண்டியதாய் போய்விட்டது!

கடைசியிலே எட்டாவது குழந்தை பிறந்ததும் தான் அவனுடைய அறிவு மேலோங்குகின்றது! அந்தக் கொடிய செயலைத் தடுத்து நிறுத்துகிறான். அந்த எட்டாவது குழந்தை தான் பின்னால் பீஸ்மராக ஆகுகின்றான். ஒரு பக்திப் பிரசங்கத்திலே ஒரு பேச்சாளர்...இந்த விபரத்தைச் சொல்லிவிட்டு இன்னொரு விடயமும் சொன்னார். அது என்னவென்றால்...

சந்தனு மன்னன் அறிவுக்கும் உணர்ச்சிக்கும் நடுவிலே அகப்பட்டுத் தவித்ததினாலே...அவன் வம்சத்திலே வந்த கௌரவர்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள். பாண்டவர்கள் அறிவு வசப்பட்டார்கள் அப்படி என்று சொன்னார்.

மனிதனுக்கு உணர்ச்சியை விட அறிவு மேலோங்கியிருக்கின்றது என்பது சரிதான்.

ஆனாலும் அந்த அறிவை எப்படி உபயோகப்படுத்துகின்றோம் என்பதும் முக்கியம்.

ஒருத்தர் சொன்னார், சேர் இன்றைக்கு கோயபுத்தூரிலே ஒரு கல்யாணம். அதற்கு நான் போக முடியவில்லை என்று நினைக்கும்போது மனதிற்கு மிகவும் வருத்தமாக இருக்கு சேர்! அப்படி என்றார்!


மிகவும் உணர்ச்சி வசப்பட்டார்.

அதற்காக கவலைப்படாதீங்க சேர்... ஒரு வாழ்த்துத் தந்தி கொடுத்துடுங்களேன்! “என்றார் இன்னொருத்தர்.

அது எப்படி சேர் முடியும்?”என்றார் அவர்.

“ நான் தானே சேர் கல்யாண மாப்பிள்ளை! ” அப்படி என்கிறார் அந்த ஆளு.

# எல்லை தாண்டி வராதே! மீன்வளத்தை அழிக்காதே! யாழில் மீனவ அமைப்புக்கள் கவனயீர்ப்புப் பேரணி





(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய இழுவைப் படகு மீனவர்களைக் கட்டுப்படுத்துமாறு கோரியும் நேற்றுக்காலை யாழ்.மாவட்ட மீனவ அமைப்பினர் கவனயீர்ப்புப் பேரணி நடத்தினர்.

எமது கடல்வளத்தை அழிக்காதே! இழுவைப்படகு மீன்பிடியிலிருந்து மீட்சி இல்லையா? போன்ற பதாகைகளைத் தாங்கியவாறு பேரணியாகச் சென்ற போராட்டக்காரர்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் ஒன்றுகூடி கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்காக மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

குறித்த மகஜர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நிர்வாகச் செயலாளர்களான எஸ்.ஸ்ரீரங்கேஸ்வரன், வி.கே.ஜெகன் ஆகியோர் முன்னிலையில் கையளிக்கப்பட்டது. (இ-10-101)

## புதையல் அகழ்வின் போது கிடைத்த புத்தர் சிலைகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் பிற்பகல் 2.15 மணியளவில் கொழும்பு குற்றப்பிரிவு உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவல்களின்படி புறக்கோட்டை மத்திய பேருந்து தரிப்பிடத்திற்கு அருகாமையில் சோதனை மேற்கொள்ளப்பட்ட வேளை புதையல் அகழ்வின்போது கிடைக்கப்பெற்ற 18 அங்குல உயரமும் 11 கிலோ கிராம் 805 கிராம் நிறையுடைய புத்தர்சிலையும் 2 அங்குல உயரமும் 152 கிராம் நிறையுடைய புத்தர் சிலையுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்படார்.

சந்தேகநபர் மொனராகலையைச் சேர்ந்தவராவார். மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றப்பிரிவு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## பிரதேச வைத்தியசாலைக்கான அடிப்படை வசதிகள் இல்லை

### வைத்திய அத்தியட்சகர் ஆதங்கம்

(சாவகச்சேரி)

வரணி பிரதேச வைத்தியசாலையில் பிரதேச வைத்தியசாலைக்கான அடிப்படை வசதிகள் எவையும் இல்லை என வைத்திய அத்தியட்சகர் பசுபதி அச்சுதன் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேச மட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் சாவகச்சேரி கலை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி வரணி பிரதேச வைத்தியசாலை சேவையாற்றி வருகின்ற போதிலும் இவ் வைத்தியசாலை நீண்டகாலமாக புனரமைப்பு இன்றிக் காணப்படுகிறது.

வெளி நோயாளர் பிரிவு மற்றும் அம்புலன்ஸ் என்பன மாத்திரமே வைத்தியசாலைக்கு அண்மையில் புதிதாகக் கிடைத்தவை. பிரதேச வைத்தியசாலை என்பதற்கான எந்தவொரு அடிப்படை வசதிகளும் இன்றி இயங்கி வரும் எமது வைத்தியசாலையில் நோயாளர் விடுதி (மெடிக்கல் வோர்ட்) கூட இல்லை.

கடந்த காலத்தில் 51 மில்லியன் ரூபய் மதிப்பீட்டிலான திட்ட முன்மொழிவுகளை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சிடம் அனுப்பி வைத்த போதிலும் அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் நிலைமைகளால் நிதி ஒதுக்கீடுகள் எவையும் கிடைக்கப்பெறவில்லை.

அத்துடன் வைத்தியசாலையில் சுகாதாரத் தொண்டர்கள் பெரும் பற்றாக்குறையாக உள்ளனர். கடந்த காலங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் சுகாதார உதவியாளர் நியமனம் பெறவிருந்த நிலையில் அந்த நியமனங்கள் நிறுத்தப்பட்டன.

இடை நிறுத்தப்பட்ட நியமனங்களை மீள வழங்கி வைத்தியசாலைகளில் நிலவி வருகின்ற சுகாதார உதவியாளர்கள் பற்றாக்குறையைப் போக்க மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

## மன்னார் மீனவர்கள் ஐவர் தனுஷ்கோடியில் கைது!

(தனுஷ்கோடி)

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஐந்து மீனவர்களை தனுஷ்கோடி கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் இரவு இந்திய கடலோர காவல் படையினர் கைது செய்தனர்.

குறித்த ஐந்து மீனவர்களும் மன்னார் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க சென்றதாக தெரியவருகிறது.

அத்துடன் அவர்கள் பயணித்த படகொன்றும் இந்தியக் காவல் படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில், மீனவர்களை விடுதலை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அவர்களின் குடும்பங்கள் அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (இ-7)

## துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கெட்டிப்பொலை)

கெட்டிப்பொலை பொலிஸ் பிரிவில் பெபலேகமை, கல்மில்லவெவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் வீடொன்றினுள் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி நபரொருவர் உயிரிழந்ததாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

உயிரிழந்தவர் மரணிப்பதற்கு முன்னர் வீட்டில் தனிமையில் உறங்கியதுடன் அவர் உறங்கிய வீட்டிலிருந்து சத்தம் கேட்கவே மனைவி மற்றும் பிள்ளைகள் சென்று பார்க்கையில் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி கட்டிலின் மேல் உயிரிழந்திருப்பதையும் அவதானித்தனர். மரணித்தவரின் அனுமதிப்பத்திரமுடைய போர-12 வகையிலான துப்பாக்கியும் கட்டிலின் மேல் இருந்துள்ளது.

உயிரிழந்தவர் 50 வயதுடைய பெபலேகமை, கல்மில்லவெவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். மரணித்தவரின் சடலம் பொலிஸ் பாதுகாப்பில் அவ்விடத்திலேயே வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பெலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

### சாவகச்சேரி சந்தையில் தொடரும் திருட்டு

## பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நகரசபை கண்காணிக்க வேண்டும்

### உறுப்பினர்கள் வலியுறுத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தைக்குள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் இருந்தும் இரவு வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாக நகரசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியிருந்தனர்.

சாவகச்சேரி நகரசபையின் பொதுச்சந்தை வளாகத்திற்குள் உள்ள சிறிய புடைவைக் கடைகள், பழக்கடைகள் மற்றும் தேங்காய் கடைகளில் இரவு வேளைகளில் திருட்டுக்கள் இடம்பெறுகின்றன.

இது தொடர்பாக வர்த்தக சங்கமும் நகரசபைக்கு கடிதம் அனுப்பியுள்ளது. சந்தை வளாகத்திற்குள் இரவு வேளையில் நிற்க வேண்டிய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நகரசபை வளாகத்திற்குள் ஒன்று கூடுகின்றனர்.

இதனால் பொருட்கள் திருட்டுப் போவதுடன் கால்நடைகள் சந்தை வளாகத்திற்குள் நுழைந்து மரக்கறிகளைச் சேதப்படுத்தக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகிறது.

எனவே பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கடமை தொடர்பில் நகரசபை நிர்வாகம் கண்காணிக்க வேண்டும் என அவர்கள் மேலும் வலியுறுத்தினர். (இ-30)



யா/நடேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

07

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (Province Specific Development Grant- PSDG)

மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கோடு அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட பல்வேறு விடயங்களின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு விசேட கவனம் செலுத்துவதற்காக பொருளாதார, சமூக, அபிவிருத்தித் திட்டங்களுக்கு மூலதனநிதி வழங்குவதை இக்கொடை பிரதானமாக எதிர்பார்க்கிறது. மாகாணங்கள் தமது வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் சமர்ப்பிக்கும் போது, நிதி ஆணைக்குழுவும் தொடர்பான மாகாண அதிகாரிகளும் அத்தகைய திட்டங்கள் அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி கொள்கை சட்டக வேலைத்திட்டத்துக்குள் மாகாண தேவைகளை நோக்கியுள்ளதா? என்பதை உறுதி செய்ய கலந்துரையாடுவர். ஒவ்வொரு முதலீட்டுக்கும், அளவிடக்கூடிய பெறுபேறுகள் (வெளிப்பாடு, விளைவுகள், பயன்) முன்படிவங்களின் படி முன் வரையறுக்கப்பட்ட சுட்டிகள் அடையாளம் காணப்படுவதுடன், குறித்த காலங்களில் கண்காணித்தலும் மற்றும் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு அடைவுகளை மதிப்பீடு செய்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும். நிதி ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்ட இது தொடர்பான படிவங்களை மாகாண அதிகாரிகள் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட கண்காணித்தல் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (PSDG) பின்வரும் நான்கு பிரதான வகைகளைக் கொண்டதாகப் பிரிக்கப்பட்டும்.

**அதிகாரப் பகிர்வளிக்கப்பட்ட துறைகள் / விடயப்பகுதிகள்** - குறிப்பிட்ட ஆண்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஏற்பாடுகளுக்காக அதிகாரப் பகிர்வளிக்கப்பட்ட பட்டியலின் கீழ் பல துறைகளை நிதி ஆணைக்குழு கவனத்துக்கு எடுத்துக் கொள்ளும். இந்தத் துறைகள் மாகாண அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதோடு, துறைசார்ந்த நடவடிக்கைகளின் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பான திணைக்களங்கள், பகுதிகள் அலகுகள் அதிகார சபைகள் மற்றும் நிறுவனங்களாகும். மாகாணப் பாதீட்டின் மூலம் பொறுப்பான முகவருக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட தொகை பகிரப்படும்.

**பிரதேச சமச்சீர் அபிவிருத்திக்கான விசேட திட்டங்கள்** - பிரதேச வேறுபாடுகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, மாகாண மட்டத்தில் நடுத்தர அளவு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதேச சமச்சீர் அபிவிருத்தியின் கீழ் திட்டங்களுக்காக விசேட தொகை வழங்கப்படும். ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடத்துக்குள் முறைப்படுத்தி நிறைவேற்றத்தக்க அத்தகைய திட்டங்களுக்கு நிதிஆணைக்குழுவின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். தொடர்பான பகுதிகளில் இத்தகைய திட்டங்கள் மூலம் பெறுமதி சேரல், வறுமைக் குறைப்பு மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கல் போன்ற சாதகமான பலன்களைக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. பிரதான துறைகளை உள்ளடக்கியதாக ஒருங்கிணைந்த அணுகுமுறையின் கீழ் இத்தகைய திட்டங்களை அபிவிருத்தி செய்தல் எதிர்பார்க்கப்படுகிறது.

**பின்தங்கியதும் மற்றும் தனித்து விடப்பட்டதுமான கிராம அபிவிருத்தி** - இத்தகைய திட்டங்கள், அத்தியாவசிய அடிப்படை சமூக மற்றும் பொருளாதார மேலதிகப் பற்றாக்குறை காரணமாக தனித்துவிடப்பட்ட மற்றும் கவனிப்பாரற்றதாக அடையாளம் காணப்பட்ட கிராமங்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும். இத்தகைய திட்டங்களை வடிவமைக்கும் போது, அத்தகைய கிராமங்களின் அபிவிருத்திக்காக பல்வேறு துறைகளின் தேவைகளைக் கவனத்தில் எடுத்து, ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும். சிறியளவிலான் பாலங்கள், மதகுகள் மற்றும் அடையும் வீதிகள் அமைத்தல், மின்சாரம் வழங்குதல், குடிநீர் வழங்குதல், விவசாய தொழில்நுட்பம், சிறியளவிலான தொழிற்சாலை வசதிகள், தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்தல் ஆகிய பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

**நெகிழ்ச்சித் தன்மையுள்ள தொகை** - குறிக்கப்பட்ட வருடத்தில் விசேட தடைகளைத் தளர்த்துவதற்காகவும் மூலத் திட்டத்தில் இணைக்கப்படாத நடவடிக்கைகளை உள்ளடக்குவதற்காகவும் பொருத்தமான பாதீட்டு சீரமைப்புக்காகவும் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நிதியாகும்.

மேலே தரப்பட்டுள்ள நான்கு ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, திரட்டு நிதி மற்றும் இருதரப்பு மற்றும் பலதரப்பு கொடையாளிகளால் தேசிய மட்டத்தில் நிதி வழங்க இணக்கம் காணப்பட்டதும் தீர்மானிக்கப்பட்டதுமான அபிவிருத்தித் திட்டங்களுக்கு மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (PSDG) யின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். இத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் மாகாண உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு பெறப்படல் வேண்டும்.

2016-2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாகாணம் குறித்தொதுக்கிய கொடையின் கீழான ஒதுக்கத் (மேலதிக ஒதுக்கம் உட்பட) தொகைகள் அட்டவணை 4 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 4: குறித்தொதுக்கிய கொடைகள் 2016 – 2018 (ரூபா மில்லியன்)

| மாகாணம் | ஒதுக்கீடு | | |
|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 ஜூன் |
| மேல் | 3,428.41 | 2,958.96 | 2,843.09 |
| மத்திய | 3,726.30 | 3,707.16 | 1,996.11 |
| தென் | 2,405.30 | 3,477.82 | 1,994.05 |
| வடக்கு | 3,238.30 | 5,766.82 | 2,953.87 |
| வட மேல் | 2,838.30 | 3,159.19 | 2,096.73 |
| வட மத்திய | 2,956.30 | 3,553.77 | 2,472.54 |
| ஊவா | 2,913.30 | 2,746.93 | 3,172.99 |
| சப்ரகமுவ | 3,382.30 | 3,415.10 | 2,630.84 |
| கிழக்கு | 3,216.30 | 2,660.33 | 2,858.83 |
| மொத்தம் | 28,104.81 | 31,446.08 | 23,019.08 |
| இம் மொத்தத்தில் ஒதுக்கம் மற்றும் மேலதிக ஒதுக்கம் பின்வருமாறு | | | |
| ஒதுக்கம் | 27025.50 | 12026.02 | 20536.08 |
| மேலதிக ஒதுக்கம் | 1079.31 | 19420.06 | 2483.00 |
| மூலம்: நிதி ஆணைக்குழு மற்றும் திறைசேரி | | | |

2016-2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாகாணம் குறித்தொதுக்கிய கொடையின் கீழான விடுவிக்கப்பட்ட தொகைகள் அட்டவணை 5 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 5 குறித்தொதுக்கிய கொடைகள் விடுவிப்பு 2016 – 2017 (ரூபா மில்லியன்)

| மாகாணம் | விடுவிக்கப்பட்ட தொகை | |
|---|---|---|
| | 2016 | 2017 |
| மேல் | 1,400.00 | 900.00 |
| மத்திய | 1,352.93 | 1,900.00 |
| தென் | 874.38 | 2,278.35 |
| வடக்கு | 1,800.00 | 3,620.50 |
| வட மேல் | 1,550.00 | 2,365.00 |
| வட மத்திய | 1,100.00 | 2,559.60 |
| ஊவா | 1,042.34 | 2,410.00 |
| சப்ரகமுவ | 1,510.00 | 1,964.99 |
| கிழக்கு | 1,505.00 | 2,252.00 |
| மொத்தம் | 12,134.65 | 20,250.44 |
| மூலம்: நிதி ஆணைக்குழு மற்றும் திறைசேரி | | |

**மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கோடு அதிகாரப் பகிர்வளிக்கப்பட்ட துறைகள் / விடயப்பகுதிகள், பிரதேச சமச்சீர் அபிவிருத்திக்கான விசேட திட்டங்கள் பின்தங்கியதும் மற்றும் தனித்து விடப்பட்டதுமான கிராம அபிவிருத்தி போன்ற பல்வேறு விடயங்களின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு விசேட கவனம் செலுத்துவதற்காக பொருளாதார, சமூக அபிவிருத்தி திட்டங்களுக்கு மூலதனநிதி வழங்குவதை மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (PSDG) பிரதானமாக எதிர்பார்க்கிறது. 2017 ஆம் ஆண்டு வடமாகாண சபைக்கு வழங்கப்பட்ட குறித்தொதுக்கிய கொடை ரூபா 5,766.82 மில்லியனாகும். இதில் திறைசேரியால் விடுவிக்கப்பட்ட தொகை ரூபா 3,620.50 மில்லியன் மட்டுமே. இது 63% ஆகும்.**

**மாகாணத்திற்கான குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையினைப் (PSDG) போன்றே பிரமாண அடிப்படைக் கொடையும் (CBG) பிராந்திய ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்யும் வகையில் மாகாணங்களில் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இக்கொடையின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படும் நிதியானது மாகாண சபை தமது விருப்பத்துக்கேற்ப அபிவிருத்திகளில் செலவு செய்ய முடியும்.**

**மாகாண சபைக்கான நிதி (ஒதுக்கீடு) வெவ்வேறு கொடைகள் (grants) மூலம் அரசினால் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவை மொத்தக்கொடை, மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (PSDG), பிரமாண அடிப்படைக் கொடை (CBG), வருமானச் செயலாற்றுகைக் கொடை (RPG) என 4 வகைப்படும்.**

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையானது (PSDG) ஒவ்வொரு மாகாணமும் வெவ்வேறுபட்ட துறைகளில் முதலீடு செய்துள்ளன.

துறைரீதியான ஒதுக்கமானது மாகாண சபைகளினால் முன்வைக்கப்படும் துறை நிறையளிப்புக்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்றது.

2017 மற்றும் 2018 களின் ஒதுக்கங்களில் பெரும் பகுதியானது கல்வித்துறை (19.3% மற்றும் 19.6%). சுகாதாரம் (20.7% மற்றும் 22.4%). மற்றும் வீதித் துறையானது (20.4% மற்றும் 16.1%). ஆகியவற்றிக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிடும் படியான தொகையானது விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் நீர்ப்பாசனம் மற்றும் உள்ளூராட்சி துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)

# பகிடிவதை என்ற நச்சுக் கலாசாரம் அழிக்கப்பட வேண்டியது இன்றியமையாதது

## யாழ்.பல்கலை.விளக்க அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தொழில்நுட்ப பீட மாணவர்களால் பகிடிவதை புரியப்பட்டது என்பது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் வெளியான செய்திகள் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு அறிக்கை மூலம் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட சிரேஷ்ட மாணவர்களால் அப்பீட புதுமுக மாணவர்களுக்கு கையடக்கத் தொலைபேசி ஊடாக பாலியல் ரீதியாக பகிடிவதை புரியப்பட்டதாக 06.02.2020 திகதியிலிருந்து வெளியாகிய செய்திகளையடுத்து பல்கலைக்கழ்க தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமியால் அவசர விசேட சந்திப்பு ஒன்று 07.02.2020 அன்று கூட்டப்பட்டது.

இச் சந்திப்பில் குறித்த செய்திகளின் உண்மைத் தன்மையை ஆராயவும் இச் செயல்களில் ஈடுபட்ட மாணவர்களை இனங்காணவும் ஓர் பூர்வாங்க விசாரணை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டு ஐவர் அடங்கிய விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. மேலும் இக்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒரு முறையான விசாரணைக் குழுவை நியமித்து சம்பந்தப்பட்ட மாணவர்களை இனங்கண்டு உறுதிப்படுத்தி அவர்களைத் தண்டிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

இக்குழு 07.02.2020 திகதியன்றே தனது விசாரணைகளை முன்னெடுக்க ஆரம்பித்ததுடன், ஏழு தடவைகள் மாணவர்களை சந்தித்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் இது சம்பந்தப்பட்ட ஆதாரங்களையும் சேகரித்திருந்தது. மேலும் இக்குழுவின் பரிந்துரையுடன் இப் பல்கலைக்கழகம் சில கையடக்கத் தொலைபேசி இலக்கங்களை பொலிஸ் நிலையம் ஊடாக தேசிய சைபர் பாதுகாப்பிற்கான நிலையத்துக்கு (National Centre for cyber security) அனுப்பியுள்ளது.

குறித்த விசாரணைக் குழு சமூக வலைத்தள ஊடங்களில் வெளியானவாறு பாலியல் ரீதியான பகிடிவதை புரியப்பட்டதா? என்பதையும் குறித்த புதுமுக மாணவர்கள் சிரேஷ்ட மாணவர்களால் இதைவிட வேறு ஏதேனும் வகையில் பகிடிவதைக்குள்ளாகியுள்ளனரா? என்பதைக் கண்டறியும் நோக்குடன் செயற்பட்டது. குறித்த பூர்வாங்க விசாரணை 16.02.2020 அன்று முடிவுறுத்தப்பட்டது. அதனது அறிக்கை 18.02.2020 அன்று தகுதி வாய்ந்த அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் சில சமூக ஊடகங்களால் வெளியிடப்பட்ட செய்திகளின் உண்மைத் தன்மையைக் குறித்த விசாரணைக் குழு அதனது அதிகார வரம்பினுள் ஆராய முடியவில்லை. அதனால் இவற்றை ஆராயுமாறு பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே இதுதொடர்பான முறையான விசாரணை ஒன்று நிறைவடைந்து இப்பல்கலைக்கழகத்துக்கு உரித்தான ஒழுக்காற்று முறையினுள் உள்வாங்கப்பட்ட விதிகளுக்கு அமைவாக குற்றமிழைத்திருப்பின் அம் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக இப்பல்கலைக்கழகம் சட்ட நடவடிக்கை எடுக்கும் என்றும் அதுவரைக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறும் இப்பல்கலைக்கழகம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் குறித்த பகிடிவதைச் செயற்பாடானது கையடக்கத் தொலைபேசி உரையாடல்கள் மூலமாகவே இடம்பெற்றிருப்பதால் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களது பெற்றோர் இது தொடர்பில் விழிப்பாகச் செயற்படுமாறும் இப்பல்கலைக்கழகம் கேட்டுக் கொள்கிறது.

பல்கலைக்கழகத்தில் புதுமுகமாகவுள்ள மாணவர்கள் இடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய பணி தலையாயது. மாணவர்களிடையே பகிடிவதை என்ற நச்சுக் கலாசாரம் அழிக்கப்படவேண்டியது இன்றியமையாதது.

விசாரணைகள் உரிய முறையில் இடம் பெற்று தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது இதற்கு வழி சமைப்பது.

இதில் தொடர்பற்ற மாணவர்கள் களங்கமின்றி கல்வியைத் தொடரவேண்டியதும் நடைபெற வேண்டும். அதற்கு சகல ஊடகங்கள் மற்றும் மக்கள் தரப்பினரது ஒத்துழைப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வேண்டி நிற்கின்றது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

---

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு D வழங்கும்...

# பாடசாலை ஒரு பண்பாட்டுக் கூடம்

'தற்போது பாடசாலைகளில் கல்வித்துறையில் பல சீர்திருத்த முயற்சிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால், பாடசாலைகள் மாணவர்களின் சாதனைகளை மேம்படுத்தத் தவறிவிட்டன' என்ற குற்றச்சாட்டு உண்டு. நல்ல பொறுப்புள்ள சமூக மனிதனை பாடசாலைகள் உருவாக்க தவறிவிட்டன என்ற குற்றச்சாட்டும் உண்டு. இதற்குக் காரணம் நாமெல்லோரும் பாடசாலைப் பண்பாட்டின் முக்கியத்துவத்தை போதுமான அளவில் கவனிக்கத் தவறிவிட்டது எனலாம். பாடசாலைப் பண்பாட்டை தனியார் கல்விக் கூடங்கள் ஆக்கிரமித்து கொண்டுள்ளன அல்லது விழுங்குகின்றன. நவீனயுகத்தில் குறிப்பாக டிஜிட்டல் யுகத்தின் ஆக்கிரமிப்பு பாடசாலைப் பண்பாட்டை விழுங்குகின்றன. இதனால் 'சமூகப்பிறழ்வான நடத்தைக் கோலங்களால் அல்லறப்படுகின்றோம். சக மனிதனை மதிக்காத சமூகமாக மாறிவருகின்றோம். கூட்டிணைந்து வாழும் பண்பாடு போய் தனித்தனி மனிதனாக 'நான் மட்டுமே' எனக்கு மட்டுமே என்று வாழப்பழகுகிறோம்.

முன்னர் ஓர் இடத்திற்கு சென்றால் அங்குள்ளவர்களோடு அளவளாவ விரும்புவோம், பஸ்ஸில் பயணித்தால் அயலில் இருப்பவரோடு உரையாடியபடி பயணிப்போம். இன்று அயலில் யார் இருக்கிறார் என்பதே தெரியாத சூழல், 'நானும் என் கைபேசி'யும் மட்டுமே போது மென்றாகி விட்டது. அதுவே எல்லாமாகி 'ஏகன் அநேகனாக' நிக்கிறது. எனக்கருகில் எது நடந்தாலும் பரவாயில்லை நானும்என்கைபேசியோடும் வாழ்ந்துவிடலாம் என்று நம்புகிறோம். உண் மையில் இது ஒரு மாயை. மனித ஊடாட்டமில்லாமல் இந்த சமூகம் இயங்கவே முடியாது என்பது தான் உண்மை. இதற்கான ஆன்மாவை பாடசாலைகள் தான் வழங்க வேண்டும். ஒரு சமூகத்தின் "இதயம் மற்றும் ஆன்மா பாடசாலை" என்பதைப் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் நாமெல்லோரும் பாடசாலையை நேசிக்க வேண்டும். பாடசாலையில் தான் பண்பாட்டு விதிமுறைகள், மதிப்புகள், நம்பிக்கைகள், மரபுகள் மற்றும் சடங்குகள் கட்டமைக்கப்பட்டு கின்றன, கடத்தப்படுகின்றன.

ஒரு பள்ளியின் பண்பாடு எப்போதும் மனதில் பசுமையாக இருக்க வேண்டும். இது வாழ்க்கை முழுவதும் கற்றலுக்கு உதவுகிறது. இது வாழ்க்கையின் ஒவ்வொரு முடிவையும் செயலையும் பாதிக்கிறது. அதிபரின் தலைமை பண்பு,ஆசிரியர்கள் மாணவர்களுடன் பழகும் விதம் எல்லாம் எம்மை வாழ்நாள் முழுவதும் வழி நடத்துகின்றன. பாடசாலைக் காலத்தில் ஒருநல்ல அனுபவத்தை கொடுக்கின்ற பாடசாலை எப்போதும் நெருக்கமான உணர்வைத்தரும். அதுவே என்றென்றும் நினைவில் வந்து இனிக்கும்.

ஒரு மனிதனின் பாடசாலை காலம் அனுபவங்களின் பொக்கிசமாக இருக்கும் அத்தனை நினைவுகளும் பசுமையாக நிலைத்திருக்க வேண்டும். அது மீளமீள நினைந்து பூரிக்கின்ற ஒன்றாக இருக்கும். இதனைப் பாடசாலைகள் கொடுக்க வேண்டும். அதற்காக பாடசாலை சமூகம் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

இன்று நகரத்து பாடசாலை நோக்கிய படையெடுப்பு நடக்கிறது. பாடசாலைகளில் செயற்கையான நெருக்கடி உருவாக்கப்படுகிறது. அதனால், இந்த அற்புதமான அனுபவங்களை மாணவர்களுக்கு கொடுக்க பாடசாலைகள் தவறிவிடுகின்றன. இன்று, நகரை மையப்படுத்திய கல்விச் செயற்பாடுகள் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் வேதனையாக மாறி வருகின்றன. நகரப் புறப் பாடசாலையில் இன்று விளையாட்டுப் போட்டியென்றால் அன்று பாடசாலைக்குபோகாமல் விட்டால் என்ன என்று யோசிக்கின்ற நிலைதான் இருக்கிறது. அங்கு வெறும் பரீட்சைக்கான கல்வி தான் நடக்கிறது. பரீட்சைக்கு தயார்படுத்தல் மட்டுமே கல்வியாக இருந்து விட முடியாது. சமூக மனிதனை உருவாக்கும் பணியும் பாடசாலை சமூகத்திடம் உள்ளது.

பாடசாலை, பண்பாடுடைய பக்குவமான மனிதனை உருவாக்க வேண்டும். அது கிராமத்துப் பாடசாலைகளின் தரமுயர்த்தல்களுடன் தொடர்புபட்டது. ஒருவட்டத்தின் மையத்தை மட்டுமே நோக்கி ஓடுவதால் பயனில்லை.

கல்விச் சமூகம் பென்னம் பெரிதாகவுள்ள வட்டத்தின் விளிம்பை பார்க்கப் பழக வேண்டும். அவ்வாறு நடைபெறும் போது தாயை நேசிக்கும், தாய் நாட்டை நேசிக்கும் தலைமுறையை உருவாக்க முடியும்.

**ஜனனி தேவானந்த்**
முதுநிலை விரிவுரையாளர்,
முகாமைத்துவ வணிகபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

---

# நாமல் எம்.பிக்கு விதிக்கப்பட்ட பயணத் தடை தற்காலிகமாக நீக்கம்

(கொழும்பு).

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 4 சந்தேகநபர்களுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடை எதிர்வரும் ஜூலை மாதம் 23 ஆம் திகதி வரை தளர்த்தப்படுவதாக கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜெயரத்ன உத்தரவிட்டார்.

சட்டவிரோதமாக உழைக்கப்பட்ட 15 மில்லியன் ரூபா நிதி **N.R. Consultancy** நிறுவனத்தில் முதலீடு செய்ததன் ஊடாக நிதி மோசடி சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட நான்கு பேருக்கு எதிராக பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு தாக்கல் செய்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு அறிக்கைகள் அனைத்தும் ஆலோசனைக்காக சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றிற்கு அறிவித்தனர்.

எனினும், இந்த முறைப்பாடு தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை இதுவரை கிடைக்கவில்லை எனப் பொலிஸார் தெரி வித்தனர்.



இந்த விடயங்களை ஆராய்ந்த நீதவான் முறைப்பாட்டை மீண்டும் ஜூலை மாதம் 23 ஆம் திகதி அழைக்குமாறும் மற்றும் குறித்த சட்டமா அதிபர் ஆலோசனை தொடர்பில் நினைவூட்டல் ஒன்றை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதன்போது, பிரதிவாதி நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பநான்கு பேர் சார்பாக முன்னிலையான சட்டத்த ரணி, தனது கட்சிக்காரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத் தடையை எதிர்வரும் வழக்கு தினம் வரையில் தளர்த்தி உத்தரவு ஒன்றைப் பெற்றுத் தருமாறு கோரியிருந்தார்.

குறித்த கோரிக்கையை ஏற்ற நீதவான் பயணத் தடையை எதிர்வரும் வழக்கு தினம் வரையில் தளர்த்துமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டார். (இ-7)

---

# நீரில் மூழ்கி மாணவன் பலி

(பத்தேகம)

ஜின்கங்கையில் குளிக்கச் சென்ற மாணவன் ஒருவர் நேற்று உயிரிழந்ததாக பத்தேகம பொலிஸார் தெரிவித்தனர். குறித்த மாணவன் தனது சகோதரர் மற்றும் நண்பனுடன் இணைந்து குளிப்பதற்காக ஜின்கங்கை சென்றுள்ளார். முல்கட பாலத்திலிருந்து 100 மீற்றர் தொலைவிலுள்ள ஆற்றுப் பகுதியில் குளித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சுழியில் சிக்கியதால் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக விசாரணைகளின் போது தெரியவந்தது. 10 ஆம் தரத்தில் கல்வி கற்றுவந்த மாணவனே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சஜித் தலைமையில் நுவரெலியாவை கைப்பற்றுவோம்

## பழனி திகாம்பரம் திட்டவட்டம்



(ஹற்றன்)

தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. கூட்டணியாகக் களமிறங்கி பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தைக் கைப்பற்றுவோம் - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார். ஹற்றன் கினிகத்தேனை சிங்கள மகா வித்தியாலயத்தின் மைதானம் புனரமைக்கப்பட்டு வைபவ ரீதியாக நேற்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரத்தின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தலின் போது நுவரெலியா மாவட்டத்தில் நாம் வெற்றிபெற்றோம். எமது மக்கள் உணர்வுபூர்வமாக வாக்களித்தார்கள். எனவே, பொதுத் தேர்தலிலும் சஜித் தலைமையில் அம்மாவட்டத்தில் எமது வெற்றி நடை தொடரும்.

புதிய அரசாங்கம் பதவியேற்று மூன்று மாதங்கள் கடந்தும் எதுவும் நடக்கவில்லை. இதன் மூலம் அரசாங்கத்தின் மூகமூடி கலைந்துள்ளது.

சாய்ந்தமருது நகரசபையை உருவாக்குவதற்கு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுவிட்டு, அதனை மீளப்பெற்றனர். எனவே, ஆயிரம் ரூபாவுக்கும் இந்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது.

ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அரசாங்கம்தான் உறுதியளித்தது. அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவேண்டும். கம்பனிகளை காரணம் காட்டிக்கொண்டு இருக்க முடியாது. அடிப்படைச் சம்பளமாக அல்லாது, மொத்தச் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்கினால் அதனை மக்கள் திருப்தியுடன் ஏற்கமாட்டார்கள்.

தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் எவ்வித முரண்பாடுமில்லை. நேற்றுக் கூட நாங்கள் மூவரும் கூட்டாகவே பத்திரிகையாளர்களை சந்தித்தோம். பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரே வேட்பாளர்களின் விபரத்தை அறிவிப்போம்.

அதேவேளை, கினிகத்தேனை மத்திய கல்லூரிக்கான மைதானத்தை புனரமைப்பதற்கு ஒரு கோடியே 70 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. நேற்றுப் பணிகள் நிறைவடைந்தன.

இவ்வாறு மலையகத்தில் தோட்டப்புறங்கள் மற்றும் நகரப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு கோடிக் கணக்கில் ஒதுக்கினேன். மலையகத்திலுள்ள சில அரசியல்வாதிகள் தற்போது அவற்றை முன்னெடுப்பதற்கு அனுமதிக்காமல், தடுத்து நிறுத்துகின்றனர். இது வெட்கக்கேடான செயலாகும்.

சில தமிழ் பாடசாலைகளின் அதிபர்களும் அரசியல் ரீதியில் செயற்படுகின்றனர். இதனால் அபிவிருத்தி தடைப்பட்டுள்ளது. எனவே, அரசியல்வாதிகளுக்கு அடிபணியாமல் பணிகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# பாக்கு நீரிணையை நீந்திக்கடந்த அமெரிக்கப் பெண்!

(இராமேஸ்வரம்)

அமெரிக்காவைச் சேர்ந்த எடிஹற என்ற பெண் தலைமன்னார் முதல் தமிழகத்திலுள்ள தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தியை 10.15 மணி நேரத்தில் நீந்திக் கடந்து சாதனை புரிந்தார்.

பாக் ஜலசந்தி கடற்பகுதி தமிழகத்தையும் இலங்கையையும் பிரிக்கும் நீரிணையாகும்.

இராமேஸ்வரம் தீவும், அதனைத் தொடர்ந்துள்ள மணல் திட்டுக்களான ஆதாம் பாலமும் பாக் ஜலசந்தி கடற்பகுதியை மன்னார் வளைகுடாவில் இருந்தும் பிரிக்கிறது.

மிகவும் ஆழம் குறைந்த அதே சமயம் பாறைகளும் ஆபத்தான ஜெல்லி மீன்களும் நிறைந்த கடற்பகுதியாகும்.

சர்வதேச அளவில் பல்வேறு நீச்சல் போட்டியில் சாதனை படைத்த அமெரிக்காவைச் சேர்ந்த பெண் எடிஹற (வயது-45) என்பவர் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரையிலான சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவுள்ள பாக் ஜலசந்தி கடற்பகுதியை நீந்திக் கடப்பதற்காக கடந்த மாதம் டில்லியிலுள்ள வெளியுறவுத்துறை, பாதுகாப்புத் துறை அமைச்சகங்கள் மற்றும் இலங்கைத் தூதரகத்திற்கு அனுமதி கோரி கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்திய-இலங்கை இரு நாட்டு அனுமதியும் கிடைத்த நிலையில் தலைமன்னாரிலிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு இங்கிலாந்தைச் சார்ந்த ஆடம் மோஸ் என்பவருடன் சேர்ந்து எடிஹற நீந்த ஆரம்பித்தார்.

இவர்கள் நண்பகல் 12.05 மணியளவில் இலங்கை-இந்திய சர்வதேச எல்லையை அடைந்தனர்.

பிற்பகல் 3.15 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனை அருகேயுள்ள முதலாம் தீடை அருகே கரைசேர்ந்தனர்.

இவர்களுக்கு உதவியாக இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகு சர்வதேச எல்லை வரையிலும், இந்தியக் கடற்பகுதியில் கடலோர காவல் படையின் ஹொவர் கிராஃட் கப்பலும் பாதுகாப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (இ-7-285)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1988

### றோகன்




### சுஜிதா




### செல்வா




### சச்சு




### றேஷ்மா




### ராஜேந்திரன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் நிலைமாறுகால நீதிக்கு இடமே இல்லை!

## நாடு கடந்த தமிழீழ அரசு சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் 43ஆம் கூட்டத் தொடர் தொடங்கியுள்ளதோடு, இலங்கை தொடர்பிலான தனது வாய்மொழி அறிக்கையை ஆணையாளர் முன்வைக்கவுள்ள நிலையில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டுகோளொன்றை அனைத்துலக சமூகத்திற்கு விடுத்தது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனிதவுரிமைகளை ஊக்கி வளர்த்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, கொண்டுவரப்பட்ட ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையின் 30/1 தீர்மானத்தின் நிலைமாறுகால நீதிக்கான முன் முயற்சி காலாவதியாகி விட்டபடியால், அதற்கு உயிரூட்டும் முயற்சியைக் கைவிட்ட, அதற்கு மாறாக ஈடு செய்நீதிச் செயல் நிரல் ஒன்றை கைக்கொள்ளும்படியும் அனைத்துலக சமூகத்திடம் கோரப்பட்டுள்ளது.

இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதி மன்றத்தின் பார்வைக்கு அனுப்புவதும், இனப்படுகொலையை தடுப்பதற்கான அனைத்துலக உட்படிக்கைக்கு அமைய, இலங்கை இனப்படுகொலை அரசை, அனைத்துலக நீதிமன்றத்திற்கு அனுப்புவதும், ஈடுசெய் நீதிச் செயல்நிரலாக அமைய வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

ஐ.நா. தீர்மானத்தின்படி தனக்குள்ள நிலைமாற்ற நீதிக் கடப்பாடுகளை வேண்டுமென்றே இலங்கை நான்காண்டு காலத்தை நிறைவேற்றத் தவறியிருந்த நிலையில், மனிதவுரிமைப் பேரவை சென்ற ஆண்டு அமர்விலேயே இலங்கை தொடர்பான தன் வழியை மாற்றிக் கொண்டு, ஈடுசெய்நீதிச் செயல்நிரல் ஒன்றைக் கைக்கொண்டிருக்க வேண்டும் எனத் தெரிவித்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன், மாறாக அத்தீர்மானத்துக்குக் கால அவகாசம் தந்து தள்ளிப் போட முடிவு செய்ததன் விளைவாக, இலங்கை தண்டனை விலக்கிய குற்றப் பண்பாடு மேலும் ஊன்றிவலுப்பட்டதோடு, ஆயுத மோதலின் போது தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்குப் பெரிதும் பொறுப்பானவர்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வரும் நிலையும் ஏற்பட்டுவிட்டது எனவும் வி.உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையின் நிலைமாறுகால நீதிப் பற்றுதல் இலங்கையைப் பொறுப்புக்கூறல், நீதி ஆகியவற்றை நோக்கி நகர்த்துவதற்குப் பதில் அவற்றிலிருந்து அது விலகிச் செல்வதற்கே அது முடிவில், வழிகோலிற்று எனத் தெரிவித்த உருத்திரகுமாரன், ஐ.நா. 30/1 தீர்மானத்திலிருந்து இலங்கை ஒருதரப்பாக விலகிக் கொள்வது மனிதவுரிமைகளையும் பொறுப்புக்கூறலையும் தெளிவாக மறுதலிப்பதேயாகும் எனவும் தெரிவித்தார்.

ஐ.நாவின் சக உறுப்பு நாடுகளை அது துச்சமாக மதிப்பதையே இது வெளிப்படுத்துகிறது.

ஆகவே இந்தக் கட்டத்தில் நிலைமாற்ற நீதி பற்றிப் பேசிக் கொண்டிருப்பதில் பொருளில்லை. சரியாகச் சொன்னால் ஈடுசெய் நீதியே இன்றைய தேவையாகும் எனவும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் இடித்துரைத்தார்.

2015 தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோற்று, மைத்திரிபால சிறிசேன அதிகாரத்துக்கு வந்த போது, சர்வதேச சமுதாயம் இந்த ஆட்சி மாற்றத்தை நிலைமாறுகால நீதி அடைவதற்கு ஒரு வாய்ப்பாகப் பார்த்தது. ஆனால் உண்மை வேறுவிதமாக இருப்பதை கடந்த ஐந்து ஆண்டு காலம் காட்டி விட்டது.

பார்க்கப் போனால், மைத்திரி அரசு நிலைமாற்ற நீதியை தண்டனை விலக்கிய குற்றத்தின் நவீன வடிவமாகப் பயன்படுத்திக் கொண்டது. காணாமற்போனவர்களில் பெரும்பாலானோர் இறந்து விட்டார்கள் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரசிங்க அறிவித்து விட்ட நிலையில் காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டது என்பது இலங்கை அரசு ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையையும் பரந்த சர்வதேச சமுதாயத்தையும் ஏமாற்றுவதற்கே நிலைமாறு நீதியைப் பயன்படுத்திக் கொண்டது என்பதற்கு எடுத்துக்காட்டு ஆகும்.

நிலைமாறுகால நீதிக்கான முன்னிபந்தனைகளில் ஒன்று: சம்பந்தப்பட்ட தரப்பு தான் இழைத்த மீறல்களை ஏற்றுக்கொள்வதாகும். ஆனால் மீறல்கள் நடந்தன என்பது இலங்கையில் இதுவரை ஏற்றுக்கொள்ளப்படவே இல்லை. சொல்லப்போனால் திரும்பத்திரும்ப நாம் கண்டது மறுப்புகளும் வெற்றி மமதையுமே ஆகும்.

அரசே மோசமான குற்றங்கள் புரிந்து, குற்றங்களுக்கு இரையானவர்களும் தப்பிப் பிழைத்தவர்களும் சார்ந்த் குழுவுக்கு எதிராக இலங்கையைப் பொறுத்தவரை தமிழ் மக்களுக்கு எதிராக பரவலான நிறுவனவகைப் பாகுபாட்டின் சிற்பியும் கங்காணியுமாக இருக்கும் போது, பொறுப்புக்கூறல் மற்றும் நிர்வாகச் சீர் திருத்தச் செயல்வழிகளில் அரசே தொடர்புடையதாக இருக்கும் வரை துயரப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வழியே இல்லை என்பதைத்தான் வரலாறு திரும்பத் திரும்ப நமக்குக் காட்டியுள்ளது.

ராஜபக்ஷக்கள் கடந்த ஆண்டு அதிகாரத்துக்கு மீண்டிருப்பதும் அது முதல் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளும் தமிழர்கள் இலங்கையில் சமத்துவம் அல்லது கண்ணியத்துடன் வாழ முடியவே முடியாது என்பதைக் காட்டுகின்றது.

ராஜபக்ஷ சிங்கள வாக்குகளைக் கொண்டு பெற்ற வெற்றி இலங்கை வளைந்து கொடுக்காத இனநாயக சிங்கள பௌத்த அரசு என்பதையும் அதில் தமிழர்களுக்கு நீதி கிடைக்க இடமே இல்லை என்பதையும் காட்டும். சிங்களப் பெரும்பான்மையின் ஆதரவு இல்லாமல் எந்த அரசியல் தீர்வு முயற்சியிலும் ஈடுபட மாட்டேன் என்று ஜனாதிபதி கூறியிருப்பது இதையே அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இது ஜனநாயகத்தின் போர்வையில் பெரும்பான்மையின் கொடுங்கோண்மையே தவிர வேறன்று.

மேலும், இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் தேசிய கீதம் தமிழில் பாடுவதற்கு அரசாங்கம் தடை விதித்திருப்பது தமிழர்களுக்கு எதிரான பகைச் செயலும், மீளிணக்கத்தில் அரசுக்கு ஆர்வமில்லை எனக் காட்டும் அழுத்தமான அடையாளமும் ஆகும். நீதியும் மீளிணக்கமும் நிலைமாற்று நீதியின் இரட்டைத் தூண்கள். 'இலங்கையில் நிலைமாறுகால நீதிக்கு இடமே இல்லை என்பதாகும்.

தமிழ் மக்களின் இருப்பையே இல்லாதழிக்க பாரிய மனித உரிமை மீறலைச் செய்தவர் இப்போது ஜனாதிபதியோடு அரசுத் தலைவருக்குரிய சட்டக்காப்பை ஊடுருவி இலங்கையை நீதியின்முன் நிறுத்தும் திறங்கொண்ட ஒரே மன்றம் அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றமே.

தமிழர் இனவழிப்புக்குப் பெரிதும் பொறுப்பான ஏனைய உயர்நிலை இலங்கை அரச அதிகாரிகள் மீதும் படையதிகாரிகள் மீதும் வழக்குத் தொடுப்பதற்கு இப்போதுள்ள ஒரே மன்றமும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றமே.

எனவே தான் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பி வைக்குமாறு ஐ.நாவைக் கேட்டுக் கொள்கிறது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நீ.மரியசேவியர் அடிகளாரின் இரண்டு நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)


திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் "காலத்தின் தடங்கள்", "மறை பொருள் நாடகங்கள்" ஆகிய இரண்டு நூல்களின் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் இல.286,பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும்.

"காலத்தின் தடங்கள்" -கலைமுகம் கலை, இலக்கிய, சமூக இதழில் வெளிவந்த ஆசிரிய தலையங்கங்களின் தொகுப்பாகவும், "மறைபொருள் நாடகங்கள்" திருவிவிலியத்தினை அடிப்படையாகக் கொண்டு 1960களில் அடிகளாரால் எழுதப்பட்ட பத்து நாடகங்களைக் கொண்ட தொகுப்பாகவும் வெளிவருகின்றது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை திருமறைக் கலாமன்றத்தின் ஊடக இணைப்பாளரும், "கலைமுகம்" சஞ்சிகையின் பொறுப்பாசிரியருமான கி.செல்மர் எமிலும், மதிப்புரைகளை "காலத்தின் தடங்கள்" நூலுக்கு பத்திரிகையாளர் ச.ராதேயனும், "மறை பொருள் நாடகங்கள்" நூலுக்கு அருள்திரு.செ.அன்புராசா அடிகளாரும் வழங்குவார்கள். (இ-7)

## ஆற்றிலிருந்து மூன்று பிள்ளைகளின் தந்தை சடலமாகக் கண்டெடுப்பு



(மஸ்கெலியா)

மஸ்கெலியா சாமிமலை ஓயாவிலிருந்து ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பிரவுன்ஸ்விக் தோட்டத்தைச் சேர்ந்த சிலர் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த ஆற்றுக்கு நீராடச் சென்றபோது ஆற்றில் சடலம் ஒன்று மிதப்பதைக் கண்டு மஸ்கெலியா பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் வழங்கினர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மஸ்கெலியா பொலிஸார், சடலத்தைக் கண்டெடுத்தனர்.

பிரவுன்ஸ்விக் தோட்டத்தின் ராணித் தோட்டத்தில் வசித்து வந்த 40 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சூரியகுமார் என்பவரே இவ்வாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டவர் என்பது பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்தது. இவரது மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 100 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 | 120 |
| தக்காளி | 140 | 140 | 90 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 80 | 120 |
| கோவா | 80 | 100 | 110 | 120 |
| கரட் | 180 | 200 | 220 | 200 |
| பூசணி | 80 | 90 | 70 | 120 |
| புடோல் | 80 | 140 | 100 | 120 |
| வாழைக்காய் | 60 | 90 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 240 | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 180 | 120 | 260 | 190 |
| பாகற்காய் | 160 | 150 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 80 | 80 |
| பயற்றங்காய் | 140 | 150 | 80 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 220 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 80 | 120 |
| கறிமிளகாய் | 120 | 160 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 250 | 400 |
| போஞ்சி | 140 | 120 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 90 | 100 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 60 | 60 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 55 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 120 | 140 | 150 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 100 | 200 |
| முள்ளங்கி | 50 | 50 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | – | – | 120 | 100 |




# வீரச்செயல்



முன்னொரு காலத்தில் ரத்தினபுரி நாட்டை ஆண்டு வந்த அரசர், தன் அமைச்சர் வர்ணனிடம் பேசிக் கொண்டு இருந்தார். அவர்களின் பேச்சு அறிவுக் கூர்மை பற்றி இருந்தது.

"அறிவுக்கூர்மை உடையவர்களால் எதையும் செய்து முடிக்க முடியும்". அவர்களால் செய்ய இயலாத செயலே இல்லை" என்று கூறினார் அமைச்சர்.

அவர் கருத்தை அரசர் ஒப்புக்கொள்ளவில்லை.

"அரசே! செய்ய இயலாத செயல் ஒன்றைச் சொல்லுங்கள்...நான் அதைச் செய்து காட்டுகிறேன்" என்றார் அமைச்சர்!

"அமைச்சரே! நீ ஏதேனும் வீரச் செயல் செய்யப் போவதாகச் சொல்ல வேண்டும். அதற்காக மக்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். அதைச் செய்யாமல் அவர்களிடமிருந்து தப்பிக்க வேண்டும். உன்னால் முடியுமா?" என்றார் அரசர்.

"அரசே! மிக எளிய செயலைத்தான் சொல்லி இருக்கிறீர்கள்!" என்றான் அமைச்சர்.

"அமைச்சரே! நீ நினைப்பது போல் இது எளிய செயல் அல்ல. வீரச் செயல் செய்வதாகச் சொல்லி, மக்களின் கூட்டத்தைக் கூட்டுவது எளிது. பிறகு அதைச் செய்யாவிட்டால், அந்தக் கூட்டம் உன்னைத் தப்பிக்க விடாது. நீ அவமானப்படத்தான் போகிறாய்" என்றார்.

"அரசே! இதில் எனக்கு எந்த அவமானமும் ஏற்படாது. பொறுத்திருந்து பாருங்கள்" என்ற அமைச்சர் அங்கிருந்து சென்றார்.

சில நாட்கள் சென்றன.

மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதைப் பார்த்தார் அரசர்.

வியப்படைந்த அவர் தன் வேலையாட்களிடம், "மக்கள் கூட்டமாக எங்கே செல்கின்றனர்?" என்று கேட்டார்.

"அரசே! எல்லோரும் கோயிலை நோக்கிச் செல்கின்றனர். அங்கே கோபுரத்தின் உச்சியில் அமைச்சர் நின்று கொண்டிருக்கிறார். இன்னும் சிறிது நேரத்தில் கீழே குதிக்கப் போகிறேன் என்று கத்திக் கொண்டிருக்கிறார். அதை வேடிக்கை பார்க்கத்தான் எல்லாரும் சென்று கொண்டிருக்கின்றனர்" என்றான்.

தான் வைத்த சோதனையின் முதல் பகுதியை செய்துவிட்டான். இதிலிருந்து அவன் எப்படி தப்பிக்கப் போகிறான்? அதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு ஏற்பட்டது.

என்ன நடக்கிறது என்பதை வேடிக்கை பார்க்க அவரும் அருகே சென்றார்.

கோபுரத்தின் உச்சியில் அமைச்சர் நின்றிருந்தான்.

"இன்னும் சிறிது நேரத்தில் கீழே குதிக்கப் போகிறேன். இப்படி யாரும் இதுவரை செய்தது இல்லை" என்று கத்திக் கொண்டிருந்தான்.

அவன் குதிப்பதை வேடிக்கை பார்க்க நகர மக்கள் எல்லாரும் அங்கே வந்திருந்தனர்.

"நான் ஒன்று. இரண்டு என்று பத்து வரை எண்ணப் போகிறேன். பத்து என்று சொன்னதும் கீழே குதிக்கப் போகிறேன். நான் பேச்சு தவற மாட்டேன். என் வீரச் செயலைப் பார்க்கத்தான் போகிறீர்கள்" என்ற அவன் ஒன்று. இரண்டு என்று எண்ணத் தொடங்கினான்.

என்ன நடக்கப் போகிறதோ என்று ஆர்வத்துடன் மக்கள் பார்த்துக் கொண்டிந்தனர்.

ஒன்று. இரண்டு என்று எண்ணிக் கொண்டிருந்தான் அமைச்சர். அவன் கண்கள் கூட்டத்தில் யாரையோ தேடின... தான் தேடியவன் வந்திருப்பதை அறிந்து. தொடர்ந்து எண்ணத் தொடங்கினான்.

அவன் ஒன்பது என்று எண்ணினான்.

கூட்டத்திலிருந்து ஒரு குரல், "எண்ணுவதை நிறுத்தி விட்டுக் கீழே வாருங்கள்" என்று கேட்டது.

யார் குரல் கொடுத்தது என்று எல்லாரும் பார்த்தனர்.

அங்கே அமைச்சரின் மகன் கையில் ஒரு பாத்திரத்துடன் நின்றிருந்தான்.

உரத்த குரலில் அவன், "தந்தையே! உங்களுக்கு மிகவும் பிடித்தமான பணியாரம், அம்மா ஆசையாக உங்களுக்காகச் செய்தது. கீழே இறங்கி வந்து இதைச் சாப்பிடுங்கள். பிறகு குதியுங்கள் மீண்டும் இதைச் சாப்பிடுவீர்களோ, இல்லையோ... யார் கண்டது!" என்றான்.

"எனக்கு மிகவும் பிடித்த பணியாரத்தை என் மகன் கொண்டு வந்திருக்கிறான். நீங்கள் அனுமதி தந்தால் அதைச் சாப்பிட்டு விட்டுப் பிறகு குதிக்கிறேன். நீங்கள் அனுமதி தருவீர்களா?" என்று கேட்டான்.

எல்லாரும் தங்களுக்குள் ஏதோ முணுமுணுத்தனர்.

"பணியாரத்தைச் சாப்பிட்டு விட்டுக் கீழே குதி" என்று அவர்களில் ஒருவர் குரல் கொடுத்தார்.

கீழே இறங்கி வந்தான் அமைச்சர். தன் மகனின் கையிலிருந்த பாத்திரத்தை வாங்கினான். அதிலிருந்த பணியாரத்தைச் சுவைத்துச் சாப்பிட்டான். அப்படியே மயங்கி விழுந்தான்.

இதைப் பார்த்த கூட்டத்திலிருந்த சிலர், "அதிர்ச்சியில் மயக்கமாகி விட்டான்" என்றனர்.

மற்றும் சிலர், "உயிர் தப்புவதற்காக மயக்கம் வந்தது போல நடிக்கிறான்" என்றனர்.

அரண்மனை மருத்துவர் அங்கு வந்தார்.

அமைச்சரை சோதித்த அவர், "உண்மையிலேயே மயக்கமாகி விட்டான். மயக்கம் தெளிய ஏழெட்டு மணி நேரம் ஆகும்" என்றார்.

அமைச்சரை, அவர் வீட்டிற்குத் தூக்கிச் சென்றனர்.

"ஐயோ! இப்ப்டியாகி விட்டதே!" என்று பேசிக் கொண்டே கூட்டத்தினர் கலைந்து சென்றனர்.

மறுநாள் அரசரைச் சந்தித்தான் அமைச்சர்.

"நீங்கள் சொன்னது போல வீரச் செயல் செய்வதாக பெரிய கூட்டத்தைக் கூட்டினேன். அவர்கள் எதிரிலேயே அந்தச் செயலைச் செய்யாமல் வந்து விட்டேன். எப்படி என் திறமை?" என்று கேட்டான்.

"அப்போது உன் மகன் பணியாரங்களுடன் வரவில்லையானால் உன் நிலை. என்னவாகி இருக்கும்?" என்று கேட்டார் அரசர்.

"அரசே! அந்தப் பணியாரங்களுக்குள் மயக்க மருந்து கலந்து எடுத்து வரச் சொன்னதே நான் தான். எல்லாம் என் திட்டப்படி நடந்தது" என்றான் அமைச்சர்.

"அறிவுக்கூர்மை உள்ளவர்களை யாராலும் வெற்றி பெற முடியாது என்பதை உன் மூலம் புரிந்து கொண்டேன்" என்று அவனைப் பாராட்டினார் அரசர்.

## ஆங்கிலச் சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | R | S | C | T | S | E | N | E | N | O | S | A | P | R |
| E | T | T | E | U | U | D | I | S | G | A | R | N | T | P |
| S | P | R | T | S | B | R | A | P | O | O | M | E | T | A |
| N | C | I | O | E | M | E | R | H | A | S | M | E | O | P |
| U | A | A | E | N | O | C | M | E | I | N | A | L | A | P |
| A | L | N | L | E | H | T | N | R | N | E | E | O | M | A |
| E | L | G | N | T | R | A | P | E | Z | O | I | D | L | E |
| P | O | L | Y | G | O | N | O | D | L | H | H | I | R | N |
| P | P | E | N | T | A | G | O | N | L | L | O | L | O | L |
| T | Y | P | O | E | N | L | E | I | E | U | I | G | G | G |
| M | A | R | G | O | L | E | L | L | A | R | A | P | O | S |
| U | T | E | A | R | T | O | C | Y | G | T | A | S | S | Y |
| R | E | N | X | M | A | R | I | C | C | A | G | U | N | E |
| H | S | R | E | O | I | L | T | O | P | R | A | N | Q | B |
| E | P | I | H | C | B | D | R | A | O | A | P | E | A | S |

Circle
Cone
Cube
Cylinder
Ellipse
Hexagon

Octagon
Parallelogram
Pentagon
Polygon
Prism
Pyramid

Rectangle
Rhombus
Sphere
Square
Trapezoid
Triangle

## விடுகதைகளும் விடைகளும்

- ஏழுமலைக்கு அப்பாலே எருமை மாடு கத்துது.
  **இடி**
- அஸ்திபாரம் இல்லாமல் அரண்மனை கட்டினேன்.
  **கப்பல்**
- எங்கள் வீட்டு எருமைக்கு வருடத்துக்கு ஒரு மேய்ச்சல்.
  **கூரை**
- மாமா வீட்டுத் தோட்டத்திலே மதயானை படுத்திருக்கு.
  **வைக்கோல் போர்**
- ஒரு சாண் குதிரைக்கு உடம்பெல்லாம் பல்.
  **சீப்பு**
- உச்சாணிக் கிளையிலே உரல் கட்டித் தொங்குது.
  **பலாப் பழம்**
- முதுகிலே மூட்டை சுமந்து. மூன்று மணிக்கு முழம் போவான்.
  **நத்தை**
- மத்தாப்பு எரியுது பட்டாசு வெடிக்குது.
  **மின்னல், இடி**
- புதைத்து வைத்த பொருள் பொத்துக் கொண்டு வருகிறது.
  **விதை**

வெற்றியை விட தோல்விதான் அதிக படிப்பினைகளைச் சொல்லிக் கொடுக்கிறது. – கார்ல் மெனின்கர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 'சீனா' வில் இருந்து 'சி' னா படிக்க வேண்டும்

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் சீன தேசம் நிம்மதி இழந்து கிடக்கிறது.

பாம்பை, பல்லியை, பூனையை உண்டு மகிழ்ந்ததெல்லாம் கேடு என்றுணர்ந்த சீன மக்கள் சைவ உணவுதான் தம்மைப் பாதுகாக்கும் என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள்.

ஆம், கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதன் பின்னர் சீன மக்களில் பெரும்பகுதியினர் சைவ போசகர்களாக மாறிவிட்டதான தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இதுதவிர, உலகில் அதிக சனத்தொகையைக் கொண்ட சீன தேசம் உலகம் முழுவதிலும் தனது இருப்பை நிலைநிறுத்துவதில் மிகுந்த முனைப்புக் காட்டி வந்தது.

வளர்முக நாடுகளுக்குள் புகுந்து ஒப்பந்தம் செய்து கொண்டு தமது ஆதிக்கத்தைப் பிரயோகிப்பது மற்றும் ஆயுதங்களை விற்பனை செய்வது, பிற தேசங்களில் சீனர்களை ஊடுருவச் செய்து அந்த நாட்டு வளங்களை சீனாவுக்கு எடுத்துச் செல்வது என ஏகப்பட்ட முரண் நிலைகளில் ஈடுபட்ட சீனர்கள், இப்போது தங்கள் சொந்த நாட்டில் இருப்பது பேராபத்து என்று கருதி இந்தத் தேசத்தை விட்டு வெளியேற வேண்டுமென நினைக்குமளவுக்கு கொரோனா வைரஸின் தாக்கம் உள்ளது.

இதை நாம் கூறுவதானது நோய் நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ள சீனாவை விமர்சிப்பதற்காக அல்ல. மாறாக அறத்தின் வழிநின்று தன் தேசத்தைக் கட்டியெழுப்பாமல், உலக நாடுகளின் வளங்களைத் தமதாக்க நினைக்கின்றபோது, இருப்பதையும் இழக்கின்ற நிலைமை வந்துவிடுகிறது.

இறைவன், தர்மம் என்பவற்றை மறந்து நாம் நினைத்தபடி எதுவும் செய்யலாமென்று வெளிக்கிடும்போது, இயற்கை அதற்கு ஆப்பு வைத்து விடுகிறது.

இதற்கு நல்லதோர் உதாரணம் சீனாவை அதிரவைக்கும் கொரோனா வைரஸ் தொற்றாகும்.

ஆக, உலகம் முழுவதையும் ஆக்கிரமிக்கின்ற எண்ணத்தோடு இருந்த சீன தேசத்து மக்கள் இப்போது தங்கள் தேசமே தங்களுக்கு ஆபத்தாகி விட்டது என்ற உண்மையை உணர்ந்துள்ளனர்.

ஆகவே சீனாவில் நடக்கின்ற இயற்கையின் ஆட்டத்தை இலங்கை நாடு நமக்குரியது என்று மார்தட்டும் 'சி'னாக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆம், இலங்கை பௌத்த சிங்கள நாடு. வேண்டுமாயின் இங்கு சிறுபான்மை மக்கள் இருந்து விட்டுப்போகலாம் என்று மார்தட்டும் 'சி'னாக்கள் இனிமேலாவது இந்த நாடு மனிதர்களுக்காக இறைவனால் அருளப்பட்டது. இந்த நாட்டில் எல்லா மக்களும் அனைத்து உரிமைகளுடனும் வாழ்வதே தர்மம் என்று உணர்தல் அவசியமாகும்.

# பல வழிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்திய நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள்

## இராஜாங்க அமைச்சர் ரோஹித குற்றச்சாட்டு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் இன்று பல வழிமுறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக சக்தி வலு இராஜாங்க அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவிதார்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற செயற்பாடுகளுக்கு இடையூறுவிளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார். மறுபுறம் அவர் பகிரங்கமாக நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்கும் உள்ளாகியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் அரசியல் பழிவாங்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு விசேட நீதிமன்றத்தை ஸ்தாபித்தது. இந்த நீதிமன்றத்தின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் வழக்கு தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மாணவர் பாராளுமன்றம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற அமர்வு இன்று 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் கலந்து கொள்வார்.(இ-5)

யாழில் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள்

## பொது மக்கள் நன்மை கருதி அனைவரும் சேர்ந்து பணியாற்றுங்கள்

### யாழ் அரச அதிபர் மகேசன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் யாழ் மாவட்டத்துக்கென அனுமதியளிக்கப்பட்டு 870 மில்லியன் ரூபாய் செலவில் 689 திட்டங்கள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் ஒரு சில குறுகிய நோக்கங்களை கைவிட்டு அனைவரும் பொது நன்மை கருதி சேர்ந்து பணியாற்ற வேண்டுமென யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ் மாவட்டத்தில் நடைபெறும் மற்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் நேற்றைய தினம் யாழ் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கே அவர் இவ்வாறு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ் மாவட்டத்துக்கென அரசாங்கத்தினால் மக்கள் மயப்படுத்தப்பட்ட மூன்று பெரும்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் "சப்பிரிகம" நிறைவான கிராமத்திட்டத்தின் மூலம் யாழ் மாவட்டத்தில் உள்ள 435 கிராம சேவை பிரிவுகளிலும் ஒரு கிராம சேவையாளர் பிரிவிற்கு 2 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு அபிவிருத்திகள் இடம்பெற்று வருகிறது.

இத் திட்டத்தில் கிராமிய வீதிகள் வாராந்தச் சந்தைகள்,விவசாயக் கிணறுகள், கல்வெட்டுக்கள்,சிறிய பாலங்கள், களஞ்சிய வசதிகள், சிறிய குளங்கள்,வாய்க்கால்கள் என பல மக்கள் திட்டங்கள் ஒன்பது துறை சார்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்காக 15.5 மில்லியன் ரூபாய் செலவில் 30 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு குறித்த திட்டங்கள் யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல் யாழ் மாவட்டத்தில் உள்ள பத்துத் தேர்தல் தொகுதிக்கும் ஒரு தொகுதிக்கு ஆறு வீடு என்ற அடிப்டையில் 36 பில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் 60 வீட்டுத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

ஆகவே குறித்த திட்டங்கள் அனைத்தும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நிலையில் முதற் கட்டமாக 174 பில்லியன் ரூபாய் கிடைக்கப் பெற்றது.

அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் என்ற படியால் முழுமையான வரவு செலவுத் திட்டம் நிறைவடையும் போது முழுத் தொகையும் கிடைக்கப்பட்டு விடும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். (ம-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளைசனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** கே.கே. எஸ். வீதி நாவலர் வீதி சந்தியிலிருந்து புகையிரதக்கடவை வரை, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி வீதி, **Mega Mall Super Market,** கார்கில்ஸ் பி. எல். சி, செலிங்கோ லைவ் இன்சுரன்ஸ் லமிற்றெட், பண்டத்தரிப்பு, பாணாவெட்டி, காஞ்சிபுரம், நுணசை, மாதகல், குசுமாந்துறை, ஜம்பு கோளப்பட்டினம், காட்டுப்புலம், ஜம்புகோளப்பட்டினம் **Rest House,** அல்வாய், மாலுசந்தி, வியாபாரிமூலை, இன்பருட்டி, சுப்பர்மடம், நாவலடி, லங்கா பாட சாலை, பருத்தித்துறை நகரம், சாரையடி, கிராமக்கோடு, கல்லூரி வீதி, **VM** வீதி, தம்பசிட்டி, சாளம்பை, சுப்பர் மடம் மரின்வெல்த் ஐஸ் தொழிற்சாலை, மந்திகை ஆதார வைத்தியசாலை, கல்வயல், மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலடி, சந்திரபுரம், சரசாலை, கனகம் புளியடிச்சந்தி, நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன்தோப்பு, மறவன் புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, கைதடி, நுணாவில், **Link Readymix (Pvt) Ltd,** பனை அபிவிருத்திச் சபை, சித்த மருத்துவ பீடம், **United Motor Lanka Plc, Excello Holding (Pvt) Ltd,** வடமாகாண ஆளுநர் அலுவலகம், **Metro Housing Construction (Pvt) Ltd, Narayana Cement Production, Sanken Construction (Pvt) Ltd** ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கண்ணகிபுரத்திலும்

**வவுனியா பிரதேசத்தில்** சாம்பல் தோட்டம், சூடுவெந்தபுலவு கிராமம், இலுப்பைக்குளம் ஆகிய பிரதேசங் களிலும் மின் தடைப்படும்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### குறுக்குவழி!

நீ புத்தியில்லாதவன் என நீ நினைத்தால் அப்போது நீ யார் என நீ அறிகிறாய்.

நீ யார் என நீ அறிந்தால் நீ ஞானம் பெற்றிருக்கிறாய்!

நீ ஞானம் பெற்றவனானால் அப்போது நீ நிச்சயமாக புத்தியில்லாதவனில்லை.

நீ புத்திசாலி என நீ நினைத்தால் நீ யார் என நீ அறிந்து கொள்ளவில்லை.

நீ யார் என நீ அறிந்து கொள்ளவில்லையானால் அப்போது நீ உண்மையாகவே புத்தியில்லாதவன்தான்!

உனது அறிவின்மையை உணர்ந்து கொள், ஞானம் பெற்றிரு!

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

**படித்தால் அறிவு வராது. ஏன்? வரும் என்றால் வந்தது ஒரு நாளைக்குப் போகும் என்பது சித்தாந்தம். அறிவு என்பது ஏரி ஜலம் போல் எங்காவது தேங்கியிருக்கின்றதா? அல்லது கடைகளில் விற்கின்றதா? அறிவு விற்பதாயின் தனவந்தர்கள் ஒரு கிலோ ஆயிரம் ரூபாய் ஆனாலும் வாங்கித் தன் பிள்ளைகளுக்குக் கொடுத்து விடுவார்களே! ஆகவே அறிவு விளைகின்ற பொருளுமன்று, ஒரு புறமிருந்து மற்றொரு புறம் வருகின்ற பொருளுமன்று. (தொடரும்)**

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### நலன் தரும் திதிகளும் அவற்றின் பலன்களும்

**பிரதமை திதி :** இந்த பிரதமை திதிக்கு அதிதேவதை அக்னி பகவான் ஆவார். வளர்பிறை மற்றும் தேய்பிறை பிரதமை தினம் புது வீடு கட்டுவாதற்கான வாஸ்து காரியங்கள் செய்வதற்கும், திருமணம் போன்ற சுபகாரியங்கள் செய்வதற்கும் ஏற்ற திதியாகும். நெருப்பு தொடர்புடைய காரியங்களை செய்யலாம். அக்னி வேள்வகள், ஹோமங்கள் போன்றவற்றை செய்யலாம்.

**துவிதியை திதி:** அரசாங்கம் தொடர்புடைய அனைத்து காரியங்களையும் செய்யலாம். திருமணம் செய்யலாம். புதிய ஆடை, நகைகள் வாங்கி அணியலாம். தெய்வங்களுக்கு விரதம் இருக்கலாம். கோயில்களில் சிலை பிரதிஷ்டை செய்யலாம். புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டலாம். இந்த திதிக்கு அதிதேவதையாக பிரம்ம தேவன் இருக்கிறார்.

**திருதியை திதி:** இந்த திதியின் அதிதேவதை கௌரி எனப்படும் பராசக்தி ஆவார். இந்த திதியில் குழந்தைக்கு முதன்முதல் அன்னம் ஊட்டும் சடங்கு செய்யலாம். சங்கீதம் கற்க தொடங்கலாம். சீமந்தம் செய்யலாம். சிற்பம் செதுக்கும் காரியங்களில் ஈடுபடலாம். அலங்கரித்து கொள்ளுதல் போன்றவற்றில் ஈடுபடலாம். அனைத்து விதமான சுப காரியங்களுக்கும் உகந்த திதி இது. (தொடரும்)

# ஆண்களுக்கான வலய மட்ட கரப்பந்தாட்டம் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி ஹட்ரிக் சம்பியன்







வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி கரப்பந்தாட்டப் போட்டிகளில் 16, 18, 20 வயதுப் பிரிவுகளில் சம்பியன் கிண்ணங்களை கைப்பற்றியது.

இதன் இறுதியாட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

16 வயதிற்குட்பட்ட பிரிவின் இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி மோதியது.

இப்போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி 25:21, 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

18 வயதிற்குட்பட்ட பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி மோதியது.

இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி 25:22, 27:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

20 வயதிற்குட்பட்ட பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணி மோதியது.

இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி 25:20, 25:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)

# பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் சம்பியன்



வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயது பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதன் இறுதியாட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் பார ஆட்டத்தை வெளிப்படுத்திய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணி 25:10, 25:12 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

(க-60)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**



## யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
### பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம்

எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டமானது எதிர்வரும் 14.03.2020ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 - 12.00 மணி வரை கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது வருகைதந்து கல்லூரியின் அபிவிருத்திப் பணிக்கு ஒத்துழைப்பினை வழங்கவும்.

### நிகழ்ச்சி நிரல்

- இறைவணக்கம்
- தலைமை உரை
- செயற்பாட்டறிக்கை
- வரவு செலவு அறிக்கை
- வலயப் பிரதிநிதியின் உரை
- புதிய நிர்வாகத் தெரிவு
- வரவு செலவுத் திட்ட முன்மொழிவு
- நன்றியுரை

(c-9356)

அதிபர்



## மின் மீன் மன்றம், வயாவிளான்

வயாவிளான் மக்களின் மதிப்பிற்குரியதும் பெருமைக்குரியதுமான வயவை சமூகத்தின் நெற்றித்திலகமான எமது மன்றம் நீண்ட காலத்தின் பின் எமது முன்னைய தலைவர் க.அமிர்தலிங்கம் தலைமையில் மீண்டும் புதுப்பொலிவுடன் (01.03. 2020) ஞாயிற்றுக்கிழமையன்று வயாவிளான் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் காலை 09.00 மணிக்கு தலைவர் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. அன்பர்கள் ஆதரவாளர்களால் விளையாட்டு ஆர்வளர்கள் ஆலோசனையாளர்களையும் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(மனத்தால் செயலால் ஒன்றுபடுவோம்)

இங்ஙனம்
ஏற்பாட்டுக் குழுவினர்

(2405)



## இணுவில் கந்தசுவாமி கோவில்

### புதிய நிர்வாகசபைத் தெரிவு

மேற்படி தெரிவு உடுவில் பிரதேச செயலர் மேற்பார்வையில் நடைபெறும். அங்கீகரிக்கப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் வருகைதந்து தங்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

காலம் :- 01.03.2020 ஞாயிறு மாலை 3மணி
இடம் :- இணுவில் கந்தசுவாமி கோவில் இளம் தொண்டர்சபை கலாச்சார மண்டபம்

(2409)

தர்மகர்த்தா சபை




கிளிநொச்சி கோணாவில் காந்தி வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது. பாடசாலை முதல்வர் திருமதி நா.குகதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந் தினராக கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம் கலந்து கொண்டார்.

(க-350)

## ஐ.நா மனித...

துக்கு இலங்கை வழங்கிய இணை அனு சரணையில் இருந்து வெளியேறுவதாக வெளி யுறவுகள் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஜெனிவா வில் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந் தார். (ம)

## மனித உரிமை...

வழங்குவோம் என கனடா பாராளுமன்றில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ கருத்துத் தெரிவித் துள்ளார்.

இலங்கையின் இனப்படுகொலை தொடர் பான சர்வதேச விசாரணை முன்னெடுக்கப் படுவது தொடர்பாக, கென்ச்ர்வேற்றிவ் உறுப் பினர் கார்னெற் ஜீனஸ் சபையில் கேள்வி யொன்றை முன்வைத்தார்.

"இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணை முன் னெடுக்கப்பட வேண்டும் என கடந்த ஜூன் மாதம் பொதுச் சபையானது ஏகமனதாகத் தீர்மானித்தது.

ஆகவே நான் பிரதமரைக் கேட்க விரும் புகிறேன், குறித்த சர்வதேச விசாரணை தொடர்பாக இதுவரை ஏதாவது முன்னெடுப் புக்கள் எடுக்கப்பட்டுள்ளதா? அமெரிக்காவி னால் இலங்கை இராணுவத் தளபதி சவேந் திர சில்வாவுக்கு வழங்கப்பட்டுள்ள தடை யில் கனடாவும் பங்கெடுக்குமா? என்று கேட் டார்.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ, "நாங்கள் மனித உரிமை களை நிலைநாட்டத் தொடர்ச்சியாக ஆதரவு வழங்கி வருகின்றோம். அது இலங்கை யாகவோ அல்லது வேறு எந்த நாடாக இருந் தாலும் வலியுறுத்துவோம்.

அதற்காகவே கடந்த 2019ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை கள் தொடர்பான பிரேரணையினை கனடா கொண்டு வந்து மனித உரிமைகள் தொடர் பான கடமைக்கு இணங்கியது.

நாங்கள் பயங்கரவாதத்துக்கு ஆதரவு வழங்கும் அமைப்புகளை கடுமையாக எதிர்க்கிறோம். இது இறையாண்மையின் அழிவுக்கு உதவுகிறது.

இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடு களிலும் நாங்கள் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுவோம்" என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## குடும்பத் தலைவி...

தாவடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத் தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான சுவிதன் அனு சியா (வயது-34) என்பவரே சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## விபத்துக்குள்...

சக்கரவண்டியில் குறித்த முதியவர் பய ணித்தபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

இதில் பளையை சேர்ந்த தில்லையம் பலம் மகேஸ்வரன் (வயது-67) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளார். (ம)

## உள்ளக விசா...

நிலைப்பாட்டினை நிராகரித்தார்.

உள்நாட்டு செயன்முறைகள் கடந்த காலங்களில் பொறுப்புக்கூறலை நிலை நாட்டுவதில் தனிப்பட்ட முயற்சிகள் தொடர் ந்து தோல்வியுற்றன. எனவே மற்றொரு விசாரணை ஆணைக்குழுவை அமைப்பது என்பது இந்த செயன்முறையை முன்னோக் கிக் கொண்டு செல்லும் என்பதில் தனக்கு நம்பிக்கை இல்லை என அவர் கூறினார்.

அத்தோடு இதன் விளைவாக, பாதிக்கப் பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்படுகிறது. அனைத்து சமூகங்களைச் சேர்ந்தவர் களுக்கும் மீண்டும் மனித உரிமை மீறல் கள் இடம்பெறாது என்பதற்கு எந்த உத்தர வாதமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, ஐ.நா.வின் 30/1 தீர் மானம் குறித்து புதிய அரசாங்கம் மிகவும் மாறுபட்ட அணுகுமுறையை அறிவித்திருப் பதற்கு அவர் கவலை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த அறிவிப்பையடுத்து, நல் லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கான முயற்சிகளைத் தடுக்கும் அபாயங்கள் உள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தனது அனைத்து மக்களுக் காகவும் செயற்பட வேண்டும். அனைத்து சமூகங்களின் தேவைகளையும், குறிப்பாக சிறுபான்மையினரையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடந்த சில ஆண்டுகளாகக் கிடைத்த நன்மைகளைப் பாதுகாக்கவும் கட்டியெழுப்பவும் நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## போர்க்குற்றங்...

மனித உரிமைகள் பேரவையின் 43 ஆவது அமர்வில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றிய அவர் இலங்கை மீதான போர்க்குற்றச் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க எந்த ஆதாரமும் இல்லை எனக் கூறியுள் ளார்.

மனித உரிமைகள் மீறல் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மற்றொரு விசாரணை ஆணையத்தை நியமிக்க இலங்கை மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச் லெட் நேற்றைய உரையில் தெரிவித்திருந் தார்.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை குறித்த அறிக்கையை அளித்த பச்லெட், உள்நாட்டு செயன்முறைகள் கடந்த காலங்களில் பொறுப்புணர்வை வழங்குவதில் தொடர்ந்து தோல்வியுற்றன என்றும் மற்றொரு விசா ரணை ஆணையகத்தின் நியமனம் இதை முன்னேற்றும் என நம்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இலங்கை தொடர்பான ஐ.நா.சபையின் அறிவிப்புக்கு பதிலளிக்கும் வகையிலேயே தினேஷ் குணவர்தன இவ் வாறு தெரிவித்துள்ளார். (ம)

## பேரப்பிள்ளையை...

காணாமலாக்கப்பட்ட தனது பேரப் பிள் ளைக்கு நீதி கோரி கடந்த மூன்று வருடங் களாக முல்லைத்தீவில் இடம்பெறுவரும் தொடர் போராட்டத்தில் பங்கெடுத்திருந்த தாயார் ஒருவர் நேற்று முன்தினம் மரண மடைந்துள்ளார். செல்வம் சிவபாக்கியம் என்ற தாயாரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

முகமாலையை பிறப்பிடமாகவும் மந்து வில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவை வதிவிடமாகவும் கொண்ட செல்வம் சிவ பாக்கியம் என்ற தாயே மரணமானவ ராவார்.

தனது மகளின் மகனான அல்பிரட் தினு என்ற தனது பேரப்பிள்ளை 2009 இறுதி யுத்த பகுதியில் வட்டுவாகல் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் ஏக்கத் தோடு ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் மழை, வெயில், பனி என்று எதையுமே பொருட் படுத்தாமல் முல்லைத்தீவில் தகரக் கொட் டில்களில் நோய் நொடிகளுக்கு மத்தியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இவர் கடந்த சில மாதங்களாக மிக மோசமாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

தனது மகளின் மகனாக பேரன் இருக் கின்ற போதிலும் தனது மகனாகவே தன் னுடன் பேரப்பிள்ளையை வளர்ந்து வந்த இவர் பேரன் காணாமல் ஆக்கப்பட்ட நாளி லிருந்தே அவரைத்தேடி பல்வேறு இடங் களுக்கும் முறையிட்டு தேடிவந்தார்.

தனது இரண்டு பிள்ளைகளை மாவீரர் களாக மண்ணுக்கு ஈர்த்த இந்த தாய் இறந்துபோன பிள்ளைகளை பற்றிய கவலை இருந்தாலும் காணாமல் ஆக்கப்பட்ட தனது பேரன் வந்தால் தான் தனக்கு நிம்மதி எனவும் அடிக்கடி கூறிவந்தார்.

தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட இதுவரையான காலப்பகுதியில் இவருடன் சேர்த்து இதுவரையில் 60க்கும் மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மரணமடைந்துள்ளனர். (ம-9)

## இலங்கையின்...

யடைந்த உள்நாட்டு பொறிமுறைகள் தொடர்பான நீண்ட வரலாறு உள்ளது என தெரிவித்துள்ள அவர் தொடர்ச்சி யான தோல்விகள் மனித உரிமை மீறல்களிற்கு உள்ளானவர்களிற்கு கசப்பான ஏமாற்றத்தை அளித்துள்ளன எனவும் தெரி வித்துள்ளார்.

இவர்களில் பலர் பல வருடங்களாக நீதிக் காக காத்திருந்தபோதிலும் அது சாத்திய மாகவில்லை என அவர் தெரிவித்துள்ளார். அவர்களுக்கு நம்பக்கூடிய வலுவான சர்வ தேச பொறிமுறையே அவசியம்.

அண்மைய வருடங்களில் பெறப்பட்ட குறிப்பிடத்தக்க மட்டுப்படுத்தப்பட்ட பலாபலன் கள் இழக்கப்படும் அபாயம் உள்ளது என குறிப்பிட்டுள்ள அவர், சிவில் சமூகம் செயற் படுவதற்கான சூழலும் கடந்த சில மாதங் களில் இலங்கையில் குறைவடைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ம)

## ஜெனிவா தீர்...

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் தாரிக் அஹமது, இலங்கையின் தீர்மானம் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ளார். மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் கவனம் செலுத்தவும் அவர் இலங்கையை வலியுறுத்தினார்.

அதேவேளை, இலங்கை எடுத்துள்ள தீர்மானம் குறித்து கருத்து தெரிவித்துள்ள கனடா வெளிவிவகார அமைச்சர், இலங் கையின் நடவடிக்கையினால் கனடா கடும் ஏமாற்றமடைந்திருப்பதாக கூறியுள்ளார்.

இந்த விடயம் குறித்து மேலும் நட வடிக்கை எடுக்க கனடா இலங்கைக்கு அழைப்பு விடுத்ததுடன், வளமான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய இலங் கைக்கு ஆதரவளிக்க தயாராக உள்ளதாக வும் தெரிவித்துள்ளார். (ம)

## புத்தூரில் உடலை...

மயானத்தில் தகனம் செய்ய உறவினர்கள் முயற்சித்தபோது குறித்த மயானத்தைச் சூழவுள்ள மக்கள் அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதனால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்ட தைத் தொடர்ந்து பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத் தினர் குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் இரு தரப்பினரிடமும் பொலிஸார் பேச்சுக்களை நடத்திய போதி லும் இரு தரப்பினரும் ஒரு நிலைப்பாட்டிற்கு வராத நிலையில் இரு தரப்பினைச் சேர்ந்த நால்வரை மல்லாகம் நீதவானிடம் பொலி ஸார் அழைத்துச் சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பாக விசாரணைசெய்த நீதவான் சடலத்தை எரிக்கவிடாது எதிர்ப்புத் தெரிவித்த தரப்பினரைச் சேர்ந்த நால்வரை யும் கைது செய்ய உத்தரவிட்டார். அத்துடன் சடலத்தை எரியூட்ட வந்த தரப்பினரை வேறு மயானத்தில் தகனம் செய்யுமாறு கட்டளை பிறப்பித்தார்.

இதனையடுத்து மயானத்தில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் உடலத்தை தகனம் செய்ய வந்திருந்தவர்கள் நான்கரை மணித்தியாலங்களாகக் காத்திருந்த நிலை யில், நீதிமன்றக் கட்டளையை அடுத்து வல்லையில் உள்ள மண்டான் மயானத்தில் உடலத்தை தகனம் செய்தனர். (ம)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1584 திகதி 2020/02/27
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 21 43 57 61
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/02/27
சீட்டிழுப்பு இலக்கம் 4123
ஆங்கில எழுத்து C வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 5 4 6 7 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 27-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2405
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 32 66 67 73
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2020/02/27
சீட்டிழுப்பு இலக்கம் 0668
லக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 08 33 53 55

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 896
வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.27
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,808,510/-
வெற்றி இலக்கங்கள் 11 16 17 66 R

ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1651 சீட்டிழுப்பு திகதி 27/02/2020
வெற்றி இலக்கங்கள் 03 10 40 53 U
அடுத்த சீட்டிழுப்புக்கான ஜக்பொட் ரூ. 47,499,720
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 27.02.2020 வெற்றி வாரம் 2782 வர்ணம் கபிலம்
விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 14 27 48 55
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,607,056

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1134
சீட்டிழுப்பு திகதி 27.02.2020 வியாழக்கிழமை
K 03 33 43 46
5 9 6 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.97,779,260

டபல் சான்ஸ்
ரூ.500 பரிசுக்குரிய 4 9 5 9
ரூ.100 பரிசுக்குரிய 6 8 5
விசேட இல.
2020.02.28 ம் திகதி வெள்ளிக் கிழமை கரு நீலம் நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

# நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

**076 443 1576**

## அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-9293)



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK – 550*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக் கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS



## அறிவித்தல்

விஸ்னுபவன் வாடிக்கையாளர்களுக்கு
விஸ்னுபவன் 28/02/2020 காலை
7.00 மணிக்கு வழமை போல இயங்கும்
என்பதை அறியத்தருகின்றோம்.

350, K.K.S Road,
யாழ்ப்பாணம் (2411)

இப்படிக்கு:-
நிர்வாகம்



## கல்லூரி நிர்வாக உத்தியோகத்தர்

யாழ்நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் சர்வதேச தரத்திலான கற்கை நெறிகளை வழங்கும் கல்லூரிக்கு அனைத்து பொறுப்புக்களையும் ஒருங்கமைக்கக்கூடிய முழுநேர நிர்வாக உத்தியோகத்தர் தகமைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

✳ஆங்கிலத்தில் புலமை, பல்கலைக்கழக கல்வி வேலை அனுபவம் என்பன அடிப்படை தகுதிகளாக கருதப்படும்.

சம்பளம் - 30'000/=

தொடர்புகளுக்கு - 0768226243



## பராமரிப்பாளர் தேவை

யாழ் நகரில் புதிதாக தொடங்கவிருக்கும் கல்லூரியில் துப்பரவாக்கல், பூந்தோட்ட பராமரிப்பு, அலுவலக பராமரிப்பு போன்ற வேலைகளை முழுநேரமாக செய்யக்கூடிய அனுபவமுள்ளவர் தேவை.

சம்பளம் - 25'000/=

தொடர்புகளுக்கு - 0768226243


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06 - 07 - 1941

மறைவு
11 - 03 - 2019

## அமரர் அன்னப்பிள்ளை இரத்தினசிங்கம்

(ஓய்வு பெற்ற பிரதம தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை)

திதி:- வளர்பிறை பஞ்சமி

எங்கள் ஆருயிர் தெய்வமே அம்மா
இவ்வுலகை விட்டு நீங்கள் பிரிந்து சென்று
ஓராண்டு ஆகியதோ...
எங்கள் உயிர் இருக்கும் வரை
எங்களுடன் நீங்கள் ஏற்றி வைத்த தீபம்
என்றும் பிரகாசமாக ஒளிவீசிக் கொண்டே
இருக்கும் அம்மா...

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(C-8852)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
01 - 01 - 1950

மறைவு
30 - 01 - 2020

## அமரர் தணிகாசலம் சற்குணபாலதேவி

எமது குடும்ப விளக்கணைந்த செய்தி கேட்டு விரைந்து வந்து ஆறாத் துயருள் அமிழ்ந்திருந்த எமக்கு ஆதரவு தந்து எம் துயரில் பங்கேற்று அன்னாரின் ஈமச்சடங்குகளில் கலந்து கொண்டு துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றனைவருக்கும் எம் சிரம் தாழ்த்தி நன்றிகளைச் செலுத்துகின்றோம். மேலும் அன்னார் நோயுற்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அவருக்கு இரவு பகல் பாராது மிகவும் சிரத்தையுடன் சிகிச்சையளித்த தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவு, இரத்தவங்கி, சிறுநீரக-குருதி சுத்திகரிப்பு பிரிவு,அனைத்து மருத்துவர்கள், தாதியர்கள், துணை மருத்துவ உதவியாளர்கள், சுகாதார உதவியாளர்கள் அனைவருக்கும் நன்றிக்கடன் பட்டுள்ளோம். அன்னாரின் இறுதிச்சடங்குகளில் நேரடியாகக் கலந்து கொண்ட வைத்தியசாலைச்சமூகம், பல்கலைக்கழகசமூகம், ஏனைய உறவுகள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் தொடரூடகங்கள் வாயிலாக அனுதாபங்களை வழங்கிய அன்பர்கள், நண்பர்கள், மலர்வளையங்கள், அஞ்சலிப்பத்திரிகைகள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த பொது அமைப்புக்கள், அயலவர்கள் அனைவரையும் நன்றியோடு வணங்குகின்றோம்.(அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் கீரிமலை புனித சமுத்திரக் கரையில் நேற்று (27.02.2020) நடைபெற்று நாளை (29.02.2020) வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் அன்னாரின் புதுறோட், ஆறுகால்மட இல்லத்தில் இடம்பெறும்.

இவ்அழைப்பை தனிப்பட்ட எமது அழைப்பாக ஏற்று நாளை (29.02.2020) மதியம் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய உணவு உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புதுவீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை

தகவல்:-
குடும்பத்தினர்
0779907000/
0774180512

(2403)


## தென்னிந்திய வட இந்திய யாத்திரையும் சுற்றுலாக்களும்

### இன்பச்சுற்றுலா

ஆரம்பம்:-04.04.2020 நாள்கள்-07

செல்லும் இடங்கள்:- சுருக்கமாக சிம்லா, குளு, மனாலி, சண்டிக்காரர், பஞ்சாப், இந்திய, பாகிஸ்தான் எல்லை (வாகாபோடம்) வேறு இடங்களும் காணலாம்.உணவு அசைவம், சைவம், அனைத்து செலவுகளும் உட்பட.

### தென்னிந்திய யாத்திரை

ஆரம்பம்:- 14.04.2020 நாள்கள்-12

செல்லும் இடங்கள்:- உச்சிப்பிள்ளையார், 6 படை வீடுகள், 9 நவக்கிரக ஆலயங்கள், பஞ்சபூதத்தலங்கள்(5), திருப்பதி, மதுரை மீனாட்சி, இராமேஸ்வரம்,தஞ்சாவூர், காஞ்சிபுரம், மேல்மருவத்தூர், பிரம்மாகோயில் உட்பட 45 இற்கு குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம்.அனைத்து செலவுகளும் உட்பட உணவு சைவம்.

### சீரடி, புர்ட்டப்பர்த்தி, திருப்பதி

ஆரம்பம்:- ஒவ்வொரு மாதமும் நடைபெறும்.நாள்கள்- 08. விருப்பமானவர்கள் பதிவு செய்யவும்.தரிசிக்கும் இடங்கள்-சீரடி 3 நாள்கள்.சனி சிங்கனாப்பூர், திரயம்பகேஸ்வரர், ஜோதிலிங்கம் நாசிக், பஞ்சவடி, புர்ட்டப்பர்த்தி, திருப்பதி, அலமேலுமங்கா, காளகஸ்திரி, திருத்தணி அனைத்துச் செலவுகளும் உட்பட உணவு சைவம்.

### மலேசிய சுற்றுலா

ஆரம்பம்:- 01.05.2020 நாள்கள்-05

5 இரவு, 6 பகல் பார்க்குமிடங்கள்:- மலாக்கா, கோலாலம்பூர் உட்பட வேறு சுற்றுலா இடங்களும் காணலாம்.உணவு அசைவம், சைவம் (பார்க்கக்கூடிய இடங்கள் அனைத்தும் காணலாம்.)

### இவை அனைத்தும் எமது சேவைகள்

இருவழி விமான ரிக்கட், விமான நிலையம் போகவர வாகனவசதி, மூன்று வேளை உணவு, காப்பி, ரீ, மினரல் வோட்டர்(குடிநீர்), இரண்டு பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட், வென்னீர், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரைகள், சுற்றுலாக்கள் முழுவதும் AC வாகன வசதி, யாழ் -கொழும்பு, யாழ்.வாகன வசதி செய்து தரப்படும். விவரங்களைக் கெட்ட அறிந்து பதிவு செய்யவும்.குறைந்த கட்டணம் வந்தவரைக் கேளுங்கள் தரிசித்து வரலாம் வாருங்கள், நிறைவான சேவை.

கலாநிதி.T. ஸ்ரீரெங்கநாதன் மகன்-ராஜன்
59, 3/6 செட்டியார்தெரு, கொழும்பு- 11
Email:-sriranganathan2601@gmail.com, sriranganathan1944@gmail.com
0777680102/ 0777362154 Facebook:-sridevisriranganathanthuraiappa



## இலவச மருத்துவ முகாம்

# McLeod Hospital

(இணுவில் வைத்தியசாலை) கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

0212241569, 0212243648, 0763944346



அன்பான வாடிக்கையாளர்களுக்கு வருகின்ற 29.02.2020 சனி அன்று காலை 9 மணி – மாலை 4 மணி வரை எமது **மக்லியோட் வைத்தியசாலையில்** இலவச மருத்துவ முகாம் நடைபெற இருப்பதால் நோயாளர்கள் அன்றைய தினம் முற்றிலும் இலவசமாக பின்வரும் சேவைகளை பெற்றுக் கொள்ளலாம்.

01. இலவச வைத்திய ஆலோசனை
02. இலவச கொலஸ்ட்ரோல் (Lipid Profile) மற்றும் குருதியில் சீனி அளவுப் பரிசோதனை (FBS) (40 வயதுக்கு மேற்பட்டவர்கள்)
03. இலவச பற்சிகிச்சை ஆலோசனை
04. இலவச அடிப்படை மருந்துகள்

மற்றும் மேலும் பல சேவைகளை பெற்று நலன் அடையுமாறு
அறியத் தருகின்றோம்

காலம் : 29.02.2020 (2404)

நேரம் : காலை 9.00 மணி - மாலை 4.00 மணி வரை


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.